திருக்கோயில்

செப்டம்பர் - அக்டோபர் 1984

விலை : ரு. 4



தஞ்சாவூரில் நடைபெற்ற இராஜராஜசோழனின் 1000-வது ஆண்டு முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள் வரவேற்றல், நிதியமைச்ச்ர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் ஆகியோர் உடனுள்ளனர். (16.9.84).

முகப்பு

தஞ்சைப்

பெருவுடையார் கோயில்

திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 26	திருவள்ளுவர் ஆண்டு 2015, ரக்தாட்சி ஆண்டு, ஐப்பசி—மார்கழி செப்டம்பர், அக்டோபர் 1984 விலை ரூ. 4-00	மணி : 9, 10

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:

உள்நாடு	ரூ.	24.00
வெளிநாடு	ரூ.	36.00

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

இராசராச சோழனின் பெருமை
—மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

தமிழர் பேரரசு கண்ட இராசராச சோழன்
—மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம்

சோழர்களின் தனித்திறன்
—அறநிலைய ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை

எழுஞாயிறன்ன இராசராசன்
—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

புகழ் ஓங்கிய இந்தியத் தருக்க நூல் ஆசிரியர்கள்
—திரு ந. ரா. முருகவேள்

ஆழ்வார் அருளும் அர்த்த பஞ்சக ஞானம்
—திரு நா. வேணுகோபால நாயகர்

இராசராசன் ஆட்சியும் மாட்சியும்
—ந. ரா. முருகவேள்

சைவாகமம்
—திரு மு. அருணாசலம்

தஞ்சைப் பெரிய கோயில்
—திரு ந. ரா. முருகவேள்

இராசராசனும் திருமுறைகளும்
—பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்

கல்வெட்டும் சமயநெறியும்
—தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

தலைசிறந்த தமிழ்ப் பேரரசன்
—பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

வைணவம்
—திரு. க. பத்மநாபன்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

இராசராச சோழனின் பெருமை

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A., D.Litt. அவர்கள்

நிதியமைச்சர், தமிழ்நாடு அரசு.

வீரத்திற்கு-விவேகத்திற்கு-அரசியல் அறிவுக்குப் பேர்பெற்ற தமிழக மாமன்னன் இராசராச சோழனின் சிலையினை நிறுவும் விழா இவ்வளவு சீரும் சிறப்புமாகத் தமிழகமே பெருமைப்படும் அளவிற்கு நடப்பது குறிப்பிடத்தக்கதாகும். சிலை நிறுவும் அளவிற்குச் சிலர் தான் வரலாற்றில் நிலையான இடத்தினைப் பெற்றிருக்க முடியும். இந்தச் சிலரில் இராசராச சோழனும் ஒருவன்.

தமிழகம் வீரத்திற்கும் விவேகத்திற்கும் தீரத்திற்கும் அறிவாற்றலுக்கும் எந்த நாட்டிற்கும் பின்தங்கியதல்ல. தமிழக மன்னர்கள் மாபெரும் வரலாற்றினை விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் வரலாறு-சரித்திரச் சான்றுகள் மறுக்கப்பட்டு-மறைக்கப்பட்டு-இருட்டடிக்கப்பட்டுவிட்டன.

தமிழக மன்னர்கள் வரலாற்று நாயகர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். இவைகள் மூடி மறைக்கப்பட்டுவிட்டன.

இமய வரம்பன், மூன்றுமுறை இமயம் வரை சென்று இமயத்தில் புலிக்கொடியினைப் பொறித்தான். இவனது மகன் சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று எதிர்த்த மன்னர்களை எல்லாம் வென்று கண்ணகி சிலை செய்வதற்காகக் கல்லெடுத்து வந்தான். அந்தக் கற்களைத் தோற்ற மன்னர்களான கனக விசயர்கள் தலைமேல் ஏற்றித் தூக்கிவரச் செய்த வரலாறுபடைத்தவன், இத்தகைய மாவீரர்களின் வரலாறுகள் எல்லாம், மறைக்கப்பட்டுவிட்டன.

இதேபோல் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், மாற்றாரைத் தன் படைவலிமையால் வென்றான். இதற்குப் பிறகு வந்த கரிகால் சோழன் கங்கையைக் காண விரும்பிய தன் தாயைக் கங்கைக்கு அழைத்துச் சென்று அந்த நீரிலே, குளிப்பாட்டினான். எதிர்த்தோரை வென்றான்.

இதர சோழ மன்னர்கள் இமயம் வரைக்கும் சென்று கொடி நாட்டியவர்கள். ஆனால் கரிகால் சோழனோ இமயத்திற்கு அப்பாலும் சென்று தன் கொடியினை நாட்டியவன்.

இதற்குப் பிறகு வந்தவன் இராசராச சோழன். இவன் அலெக்சாண்டருக்கு ஒப்பானவன்; நெப்போலியனுக்குச் சமமானவன். வீரத்தால் மட்டுமல்ல, விவேகத்தினாலும் வரலாறு படைத்தவன். அவன் கட்டிய மாபெரும் ஆலயம்தான் இந்தப் பிரகதீஸ்வரர் ஆலயம்.

இத்தகைய மாமன்னனின் சிலையைத் திறக்கும்போது தமிழக மக்களின் உள்ளங்களில் எத்தகைய எண்ண அலைகள் எழும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இவரைப்போன்று வீரவரலாறு படைத்தவர்கள் மிகக் குறைவு. இரண்டாவது பராந்தக சோழனின் மகன் இவன். இரண்டாவது பராந்தகச் சோழனுக்குப் பிறகு இராசராச சோழன்தான், பட்டத்திற்கு வரவேண்டியிருந்தது. ஆனால் இவனுக்குச் சிற்றப்பனான உத்தம சோழன் பட்டத்திற்கு வரப் பிரியப்பட்டார். மக்கள் அனைவரும் இராசராச சோழன்தான் பட்டத்திற்கு வரவேண்டும் என்று விரும்பினர். ஆனால் தன் சிற்றப்பனுக்காக ஆட்சிப்பீடத்தினை 15 ஆண்டு காலத்திற்கு விட்டுத்தந்தவன் இராசராச சோழன். அத்தகைய உத்தம குணம் படைத்தவன்.

வீரம் இருந்தும்-மக்களின் ஆதரவு இருந்தும்-சிற்றப்பனுக்கு ஆட்சியை விட்டுத் தந்து, தான் இளவரசர் பட்டம் பெற்றுக் கொண்டான்.

இராசராசன் 30 ஆண்டுகள் இந்தநாட்டை ஆண்டிருக்கிறான். அவனது போர் முறையினை மட்டுமின்றி அவன் ஆட்சி செய்த பெருமையினையும் வேற்று நாட்டவரும் போற்று

கின்றனர். அவன் சோழ மண்டலத்தைச் சீரும் சிறப்புமாகக் கட்டி ஆண்டான். இவன்மீது மாற்றார் படை எடுத்துத் தோல்வியுறச் செய்தனர் என்ற வரலாறே இல்லை.

இராசராச சோழன் வேற்று மன்னர்மீது போரை நடத்தினானே தவிர, அவனது சோழ மண்டலத்தில் குழப்பம் இல்லை. அமைதியின்மை இல்லை. அச்சம் இல்லை. குடிமக்கள் அமைதியாக வாழ்ந்தனர்.

சேர மன்னனின் கடற்படையையும் வென்றான். பாண்டியனின் படையினை முறியடித்தான். ஈழநாட்டு மன்னனை முறியடித்து அடிபணியச் செய்தான். ஈழத்தின் பகுதிகளையும் சோழ நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். கலிங்கத்தை வென்றான். தற்போது ஒரு பகுதியாக உள்ள மராட்டியத்தினையும் சேர்த்துக் கொண்டான்.

இவனது சீரும் சிறப்பினையும் பாராட்டி இவன் பல விருதுகளைப் பெற்றான். இவனுக்கு 35 பட்டப்பெயர்கள் இருந்தன.

இத்தகைய சிறப்புக்களை படைத்த மாமன்னனின் வரலாற்றினைக் கண்ணுக்குத் தெரியாமல் செய்துவிட்டனர். இப்போது இவனது சிறப்புக்களைக் கூற இருப்பது இந்த ஒரே ஒரு பெரிய கோயில்தான்.

இந்தப் பெரிய கோயிலை அவன் கட்டியது பெருமைப்படத்தக்கது. கருங்கல்லே சிறிதளவு கூட இல்லாத தஞ்சையில் முற்றிலும் கருங்கல்லால் ஆன பல கோயில்களை இராசராச சோழன் கட்டினான். இவன் எங்கிருந்து கருங்கற்களைக் கொண்டு வந்தான். இது ஒரு வியப்புக்கு உரியதாகும். 100 மைல்களுக்கு அப்பாலுள்ள மலைகளிலிருந்து அவன் சிலைசெதுக்குவதற்கு என்று ஏற்ற கருங்கற்களைத் தேடிக் கொண்டுவந்திருக்கிறான்.

இந்த மாபெரும் பாறைகளை நகர்த்தி வர அப்போது டிராக்டர்கள், புல்டோசர்கள், கிரேன்கள் இல்லை. பாலங்கள் இல்லை. பல ஆறுநள் குறுக்கிட்டன. சிலைஎடுக்கக் கொண்டு வரும் கல்லின் சிறிய பகுதி உடைந்தாலும் சிலை வடிக்க முடியாது. இத்தகைய பல இக்கட்டுகள் நிறைந்த காலத்தில் அவன் பெரிய பாறைகளைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறான். இது மாபெரும் சாதனையாகும்.

இவ்வளவு சிரமப்பட்டுப் பொருட்செலவு செய்து பெரிய கோயிலைக் கட்டிய இராசராசன் இந்தக் கோயிலுக்கு எதுவுமே வைக்கவில்லை என்று கூறும் அளவிற்குத் தற்போது இந்தக் கோயிலில் சொத்துக்கள் இல்லை. அப்படி இராசராசன் கோயிலுக்கு எதுவுமே வைக்காமல் சென்றிருப்பானா?

திருவாரூரில் உள்ள கோயில்களுக்குக்கூட 1000, 2000 வேலி நிலங்கள் உள்ளனவே, அப்போது இராசராச சோழன் விட்டுச் சென்ற சொத்துக்கள் எங்கே போயின?

கல்வெட்டுக்கள்தான் இந்த உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன. இராசராச சோழன் தான் போரில் வென்று கொணர்ந்த தங்கம், வெள்ளி முதலியவைகளை ஏராளமாக இக் கோயிலுக்கு அளித்திருக்கிறான்.

இலட்சத்து 20 ஆயிரம் கலம் நெல் விளையக்கூடிய நிலங்களை இராசராசன் விட்டுச் சென்றிருக்கிறான். தங்கக் குடங்கள் இருந்தன. 4000 பசுமாடுகள் 4000 பேராடுகளை அளித்தான். இவைகளிலிருந்து கிடைக்கும் நெய் மூலம் தினமும் இக்கோயிலில் நெய் விளக்கேற்ற வழி செய்தான்.

1000-க்கு மேற்பட்ட பணியாளர்கள், இசைவாணர்கள், ஆடலழகிகள் இருந்தார்கள். இவர்களுக்குத் தகுந்த ஊதியம், நிலம் தந்தான். இவ்வளவு செய்தும் இன்று எதுவும் இல்லை. அவை எங்கே போயின?

ஆட்சி முறையிலும் அவன் சிறப்பான அமைப்புகளை சட்ட திட்டங்களை வகுத்திருந்தான். இந்தப் பகுதியை மண்டலங்களாகப் பிரித்தான். இதற்கு ஒவ்வொரு பிரதிநிதியை நிறுவினான். தன் மகன் இராசேந்திரனையே ஒரு மண்டலத்திற்குப் பிரதிநிதியாக்கி ஆட்சி முறையில் பயிற்சி அளித்தான்.

இராசராசன் தேவாரத்தைத் திரட்டித் தொகுத்துத் தந்தான். அவன் தேவாரத்தைத் தொகுதித்திராவிடில் அது அழிந்தே போயிருக்கும். திருமுறைச் செந்தமிழ்த் தெய்விக இலக்கியங்களைத் திரட்டித் தொகுத்துக் காத்தளித்த பெருமை இராசராச சோழனுக்கே உரியது.

தமிழர் பேரரசு கண்ட

இராசராச சோழன்

சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்
(சட்டமன்ற மேலவைத் தலைவர்)

தமிழ்ப் புத்தாண்டு வருடந்தோறும் வந்து வந்து போகிறது என்றாலும், இந்தப் புத்தாண்டுக்குத் தனிச் சிறப்புண்டு. இவ்வாண்டு சித்திரைத் திங்கள் முதல் நாளிலே ஓராயிரமாண்டுக்கு முன்னர் வாழ்ந்து தமிழர் பேரரசுகண்ட இராசராசன் சோழன் சிலை, தஞ்சைமாநகரிலே திறக்கப்பட்டு இருக்கிறது. இது சாதாரண நிகழ்ச்சியன்று, சரித்திரச் சிறப்புமிக்கசாதனை.

இராசராச மன்னன்

இராசராசன், தமிழ்நாட்டில் வாழையடி வாழையெனத் தோன்றிய மன்னர்களிலே ஒருவன்தான்; ஆயினும் செயற்கரிய செய்த காரணத்தால்தான் தமிழகத்தின் - ஏன் இந்தியப் பெருநாட்டின் வரலாற்றிலேயே, தனி இடம் பெற்றுவிட்டான். இராசராசன் சோழமன்னர் மரபில் தோன்றியவன் என்றாலும், இலங்கை சாவா சுமத்திரா மலேயா ஆகிய நாடுகளை வென்று, தமிழர் பேரரசு கண்டான். ஆம் மவுரிய, மொகலாயப் பேரரசு போன்று அவனும் தனி சாம்ராஜ்யம் படைத்தான். அது சோழ சாம்ராஜ்யம் என்று பெயர் பெற்றாலும் உண்மையில் அது தமிழர் சாம்ராஜ்யம் - இந்திய சாம்ராஜ்யம்.

இராசராசன் மகன் இராசேந்திரன், தன் தந்தை படைத்த சாம்ராஜ்யத்தைத் தன் வாள் வலிவாலும், தோள் வலிவாலும் விரிவாக்கினான். ஆயினும் தந்தையும் மகனும் கண்ட சாம்ராஜ்யம் நிலைத்து நிற்கவில்லை. ஏனைய சாம்ராஜ்யங்கள்போல அதுவும் காலவெள்ளத்தில் அகப்பட்டு மறைந்து போயிற்று. ஆயினும், சாம்ராஜ்யம் படைக்கும் திறன் தமிழனுக்கும் உண்டு என்பதைக் காட்டிய பெருமை, இராசராசனுக்கும், அவன் வீரமைந்தன் இராசேந்திரனுக்கும் உண்டுதானே!

இராசராசன் சோழ சாம்ராஜ்யத்தைப் படைக்காதிருந்தால் தமிழ்நாட்டிலோ, இந்தியாவிலோ ஜனநாயகமும் சுதந்திரமும் தாண்டவமாடியிருக்கும் என்று யாரும் கருத வேண்டாம். இராசராசன் வாழ்ந்த காலம் ஜனநாயக சகாப்தமன்று, சாம்ராஜ்ய சகாப்தம். இதனைச் சாம்ராஜ்ய எதிர்ப்பாளர்கள் மறத்தல் கூடாது. இராசராசன் சோழ சாம்ராஜ்யம் படைத்தில்லையானால், தமிழரல்லாதவரான பல்லவர் சாம்ராஜ்யமோ, சாளுக்கியர் சாம்ராஜ்யமோ, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னாடு முழுவதன் மீதும் ஆதிக்கம் பெற்றிருக்கும். முள்ளால் முள்ளை எடுப்பது போல, இராசராசன் கண்ட தமிழர் சாம்ராஜ்யம், பிற சாம்ராஜ்யங்களுக்குத் தமிழ்நாடு அடிமைப்படுவதைத் தடுத்து நிறுத்தியது. அதனால் தமிழ்மொழியும், தமிழர் பண்பாடும் காப்பாற்றுபட்டுவிட்டன.

சமய நெறி

இராசராசன் சமூக நெறிகளை விடவும், சமய நெறிகளுக்கே முதலிடம் தந்தான். பார்ப்பனக் குருமார்கள் தமிழர்கள் மீது தலைமை பெறச் செய்தான் என்று சொல்லப்படுகிறது. இது அரைகுறை உண்மைதான். முழு உண்மை அல்ல. இராசராசன் சமய சகாப்தத்தில் வளர்ந்தான். இராசராசன் பிறப்பதற்கு - அவன் படைத்த சோழர் பேரரசு பிறப்பதற்கு முன்பே தமிழ்நாடு சமயவாதிகளின் செல்வாக்கில் சென்றுவிட்டது. சமண பவுத்த சன்னியாசிகள் தமிழ்நாடு முழுவதையுமே சன்னியாசிகள் மடமாக்கிவிட முயன்று கொண்டிருந்தனர். அவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு, சைவ சமய குரவர்கள் தமிழ்நாட்டைச் சைவ மடமாக்கிவிட முயன்றனர். இந்த மதப் போட்டிகளுக்கு மத்தியிலேதான் இராசராசன் தோன்றித் தமிழர் சாம்ராஜ்யம் படைத்தான்.

சிலப்பதிகார காலத்தோடு ''தமிழன்'' என்ற இந்த உணர்வு மறைந்து, சைவர்-வைணவர்-சமணர்-பவுத்தர் என்ற மத உணர்வுகள் தமிழக மக்கள் மனங்களில் குடிபுகுந்துவிட்டன. ஆம். தமிழினம் சமயக் கோடரியால் பிளக்கப்பட்டுப் பல கூறுகளாகக் கிடந்த நேரத்தில், இராசராசன் தோன்றினான். தீமையிலிருந்து

பிறந்த நன்மை போல இராசராசன் படைத்த சோழ ராஜ்யம், அனைத்து சாம்ராஜ்ஜியங்களையும் ஏற்று அவற்றிடையே சமரசம் காண முயன்றது.

தமிழ் மன்னன்

இராசராசன் பிறப்பினால் தமிழனாதலால் தமிழினத்துக்கு உதவிய சைவ சமயத்தைப் பின்பற்றினான். ஆயினும், தமிழர் பண்பாட்டின்படி, சமண-பவுத்த-வைணவ மதங்களிடம் நல்லெண்ணம் காட்டினான். அந்த மதங்களைச் சார்ந்த கோயில்களுக்கும் மடங்களுக்கும் நில மானியங்கள் வழங்கினான். மதநெறியை வளர்த்தான்; மத வெறியை மாய்த்தான்.

ஸ்ரீவிஜய (மலாயா, சுமத்ரா, மேற்குஜாவா அடங்கிய ராஜ்யம்) நாட்டு மன்னன், சோழ நாட்டு நாகப்பட்டினத்தில் ''சூடாமணி விகாரம்'' என்ற பௌத்தக்கோயிலைக் கட்ட இராசராசன் அனுமதி தந்தான். அந்த கோயிலுக்குப் பல கிராமங்களை மானியமாகக் கொடுத்தான். சைவ சமய குரவரான அப்பர் பெருமானைக் ''கல்லோடு கட்டிக்கடலில் விட்ட கொடுமை- ஞானசம்பந்தர் தங்கிய மடத்திற்குத் தீயிட்ட தீமை- சமணர் கழுவேறக் காரணமாயிருந்த சமயப் பகைமை, இராசராசன் தோன்றுவதற்குமுன் தமிழ்நாட்டில் நிகழ்ந்தன எனபதை நினைவில் கொண்டால், இராசராசன் ஆட்சி ஒரு சமயச் சார்பற்ற ஆட்சி என்பதனை விளங்கிக்கொள்ளலாம்.

இராசராசன், சமய-சமூகப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு ஏராளமான விளை நிலங்களைத் தானமாகக் கொடுத்தான். அந்த வகையில், கோயில் குருமார்களாக இருந்த அந்தணர்களுக்கும் நிலங்களை இனாமாகக் கொடுத்தான். அதனால் ஓதல் ஓதுவித்தலுக்குரிய அந்தணர்களும், உழவுத் தொழிலோடு தொடர்பு கொள்ளலாயினர். இதில் பிழை ஏதுமில்லை. இராசராசன் காலத்திலும் நிலமனைத்தும் அரசுக்குத்தான் சொந்தம். அரசு மக்களுக்குச் சொந்தம். அந்த வகையில் நிலமனைத்தும் தேசவுடைமையாக இருந்ததென்றே சொல்லவேண்டும்.

இராசராசனோ இராசேந்திரனோ கோயில் குருமார்களுக்கோ, பிறருக்கோ விளை நிலங்களை அளித்தது உழுது பயிர் செய்து உணவு உற்பத்தி செய்யத்தான். உடைமையாக்கிக் கொள்ள அல்ல.

இராசராசன், சாம்ராஜ்ய சக்கரவர்த்தி என்றாலும், ஜனநாயகத்தின் எதிரி அல்லன். அவன் ஆட்சியிலே அவனுக்கு முன்னோ அவன் காலத்திலோ வேறெந்த ஆட்சியிலுமில்லாதவாறு ஜனநாயகம் நடைமுறையில் இருந்தது. வாக்களித்தும் பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு உரிமை இருந்தது. பஞ்சாயத்து உறுப்பினர்களாக வருவதற்குத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கிராமமும் பஞ்சாயத்தும் ராஜ்யமாக சுய தேவை பூர்த்திக்குரியதாக இருந்தது என லாம். இன்று நாம் மாநிலங்களுக்குச் சுயாட்சி கோருகிறோமல்லவா, அந்த சுயாட்சி கிராமங்களுக்கு இருந்தது.

வரி வடிவம்

இராசராசன் தமிழ் மொழியின் வரி வடிவத்தை மாற்றினான். இது தமிழ் மொழிக்கு அவன் செய்த பிழையல்ல. பெருந்தொண்டு. பழைய வரி வடிவமே நீடித்திருந்தால்; தமிழுக்குத் தனித்தன்மை இருந்திருக்குமா என்பது ஐயப்பாடே. இராசராசன் படைத்த புதிய வரி வடிவம் அழகியது, தமிழுக்கே உரியது. வரி வடிவத்திலும் நம் தாய்மொழியான தமிழ், தனித்த மொழியாக விளங்குவதை விரும்பாதவர்கள், இராசராசனைக் குறை கூறலாம். பழைய வரி வடிவம் நீடித்திருந்தால், பொது லிபி பற்றிப் பேசப்படும் இந்நாளிலே, தேவநாகரி லிபியைக்கூடத் தமிழர் ஏற்றுக்கொள்வது எளிதாக இருந்திருக்கலாம். அந்த விபத்தில் இருந்து தமிழை மீட்ட பெருமை இராசராசனுக்கே உரிமை.

இராசராசன் பக்தி மதத்தை வளர்க்கப் பாடுபட்டான் என்பது உண்மைதான். மறைக்கப்பட்டுகிடந்த தேவாரப் பாடல்களை மக்கள் மத்தியில் கொண்டு வந்தான் என்றொருசெய்தி உண்டு. அது உண்மையானால், தமிழிசையைக் காத்த பெருமையும் அவனுக்குண்டு. இராசராசனுக்கு முன்பே, பக்தி மதம் தமிழ்நாட்டில் பரவி இருந்தது. அதனைக் கலைமதமாக, தமிழர் கலாச்சாரமாகச் செய்தவன் இராசராசன். இராசராசன் தஞ்சைப் பெரிய கோயில் எனப்படும் பிரகதீசுவரர் கோயிலைக் கட்டினான். ஆம். கல் கிடைக்காத சோழ நாட்டிலே கற்கோயில் கட்டினான். தமிழரின் பொறி இயல் திறனுக்கு அக்கோயில் சான்று பகர்கின்றது. இராசராசன் மாவீரன் மட்டுமல்ல. கலைஞன். நாட்டியக் கலையைக் காக்க அவன் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிக்குத் தமிழ் இனத்தார் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றனர்.

பிரகதீசுவரர் கோயிலுக்குள்ளே நாட்டியக் கலையின் நுணுக்கங்களைக் கூறும் சிற்பங்களை இன்றும் காணலாம். இராசராசன்

வலிமைமிக்க கப்பற்படை வைத்திருந்தான். அந்த வகையில் அவனுக்கு இணையான பேரரசனை அவனுக்கு முன்னர்ப் பாரதம் கண்டது இல்லை எனலாம். தன் கப்பற்படையைப் போருக்கேயன்றி உலக நாடுகளோடு வாணிபம் செய்வதற்கும் பயன்படுத்தினான். இவ்வளவு அரும்பெரும் சாதனைகளை அவன் புரிந்திருப்பதால்தான் அவனது ஆட்சிக் காலத்தைத் தமிழகத்தின் பொற்காலம் என்று கூறிப் போற்றுகின்றனர் சரித்திர ஆசிரியர்கள்.

''சோழர் பேரரசு'' என்ற பெயரால் 'தமிழர் பேரரசு-'ஏன் 'இந்தியர்பேரரசு' கண்ட பெருமானான, இராசராசன் முப்பதாண்டு காலம் (கி.பி. 985-1014) வரைதான் ஆட்சி புரிந்தான். அந்தக் காலம் முழுவதும் அவன் போர்க்களத்திலிருந்தான் என்றுதான் சொல்ல வேண்டும். ஆம் இராசராசன் தமிழ்நாட்டு நெப்போலியன்.

தமிழ்நாடே 'உனது வீரத்திருமகன் இராசராசனுக்குத் தஞ்சையிலே சிலை நிறுத்தப்படுகிறது. இந்நாள் தமிழ்ப் புத்தாண்டுநாள். தமிழருக்குப் புதுவாழ்வு பிறந்தநாள், வாழ்க இராசராசன் புகழ்! வளர்க தமிழ் மொழி! வாழ்க தமிழினம்!'

நடராச வடிவின் தத்துவநுட்பம்

(1) இறைவனின் உடுக்கையால் ஆக்கல்; அமைத்த கையால் காத்தல்; ஏந்திய நெருப்பினால் அழித்தல்; ஊன்றிய திருவடியால் மறைத்தல் (திரோபவம்); எடுத்த திருவடியால் அருளல் (முத்தி, அனுக்கிரகம்) ஆகிய ஐந்து தொழில்கள் நடைபெறுகின்றன.

(2) இறைவன் தனது துடியைக் கொட்டுவதால் ஆன்மாக்களின் மாயையினை உதறுகிறான்; ஏந்திய நெருப்பினால் கன்ம மலத்தினைச் சுடுகிறான்; ஊன்றிய திருவடியால் ஆணவ மலத்தினை அழுத்தித் தேய்விக்கிறான்; திருவடியால் உயிர்களைப் பிறவிக் கடலினின்று எடுக்கின்றான்; அபயகரத்தால் உயிர்களை இன்பக் கடலில் திளைக்கச் செய்கிறான்; இத்தகைய திருநடனத்தைக் கண்டுவிரும்பித் தொழுபவர்களுக்குப் பிறவித் துயர் இல்லாமல் நீங்கும்.

(3) இறைவன் ஐந்தொழில் திருக்கூத்து இயற்றுங்கால், அவனது திருமேனி ஐந்தெழுத்தினாலேயே அமைகின்றது. இறைவன் 'மந்திரசொரூபி' யாதலின், அவன்றன் திருவுருவம் திருவைந்தெழுத்து மந்திரத்தினாலேயே அமைவதாகின்றது. 'நமசிவய' என்பது தூலபஞ்சாக்கரம். திருவடியில் ந; வயிற்றில் ம; தோளில் சி; முகத்தில் வ; திருமுடியில் ய. இவ்வமைப்பு 'தூல பஞ்சாக்கரம்' எனவும் 'இலயாங்கம்' எனவும் கூறப்படும்.

(4) இனி 'சிவயநம' என்பது சூக்கும பஞ்சாக்கரம் என வழங்கும். அது நடராச வடிவத்தில் பின்வருமாறு அமைந்து விளங்குகின்றது; துடியில் சி; வீசும் கரத்தில் வ; அபயகரத்தில் ய; ஏந்துகின்ற நெருப்பில் ந; அடிக்கீழ் முயலகனில் ம. இவ்வமைப்பு 'போகாங்கம்' எனப்படும்.

—ந. ரா. முருகவேள்

சோழர்களின் தனித் திறன்

திரு. கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,
அறநிலையத்துறை ஆணையாளர், சென்னை-34.

சோழர்கள்

சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த மூவேந்தர் மரபு, கி.பி.மூன்றாம் நுற்றாண்டில் மறைவுற்றது. களப்பிரர்களும் பல்லவர்களும் அடுத்தடுத்து ஆட்சி மேற்கொண்டனர். எனினும் ஆங்காங்கே சேர, சோழ, பாண்டிய சிற்றரசுகள் சில இருந்தன. சோழ மரபில் வந்த விசயாலயன் என்பவன் பழையாறை என்னுமிடத்தில் குறுநில மன்னனாக இருந்து வந்தான். அவன் சிற்றரசனாகத் திகழ்ந்த போதிலும், முத்தரையர் வசமிருந்த தஞ்சையைக் கைப்பற்றினான். அறுநூறு ஆண்டுகளாக மறைந்து போன சோழ வமிசம் மீண்டும் ஒளி பெறலாயிற்று. அதுமுதல் (கி.பி.846) சோழர்களின் ஆட்சி தமிழகத்தில் புத்துயிர் பெற்றது.

விசயாலயன்

விசயாலயனுக்குப் பிறகு வந்த சோழ அரசர்கள், தம்நாட்டு எல்லையை விரிவுபடுத்தி ஏறத்தாழத் தென்னிந்தியா முழுமையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்தனர். மேலும், வடக்கே கங்கையாற்றுக் கரை வரையிலும், வெற்றிக்கொடி நாட்டிப் பெருமை பெற்றனர். கடல் கடந்து கிழக்கிந்தியத் தீவுகளிலும் சோழர்கள் தம் ஆணையைக் கொண்டு செலுத்தியதாக வரலாறு புகல்கின்றது. சீனாவுடன் வாணிகத் தொடர்பு ஏற்படுத்திப் பழைய சங்க காலப் புகழை மீட்டனர். விசயாலயன் தோற்றுவித்த சோழ அரசு, உலகப் புகழ் கொண்டு விளங்கியது. ஏறத்தாழ நானூற்றுஐம்பதாண்டுக் காலம் (450), சோழப் பேரரசு நிலவியது.

தனித்திறன்

ஆதலால், மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு, மறைந்து போன சோழ அரசு ஒன்பதாம் நூற்றாண்டில் மீட்சி பெற்றது என்பது, சோழர்களின்தனித்திறமையைக்காட்டுகின்றது. அதைவிடப் பெரிய தனித்திறமை என்னவென்றால், மீட்டுக்கொண்ட ஆட்சியைத்தொடர்ந்து நானூற்றைம்பது ஆண்டுக்காலம், தக்கவைத்துக் கொண்டது ஆகும். மேலும், சோழர்கள் தம்முடைய புகழை உலக வரலாற்றில் நிலைநிறுத்தி, அதனைப் பூவுலகத்திற்கு உணர்த்தும் முறையில், அழியாச் சின்னங்களை ஏற்படுத்திய ஒப்பற்ற பாங்கு, மிகப் பெரும் தனித் திறனாகக் காட்சியளிக்கின்றது.

தஞ்சை கொண்ட கோப்பரகேசரி

பல்லவர்களின் கீழ், ஒரு சிற்றரசனாக விசயாலயன் இருந்து வந்தான். தஞ்சையை ஆண்டு வந்த முத்தரையர்கள், பாண்டியர்களுடன் சேர்ந்திருந்தனர். விசயாலயன் பல்லவ அரசர்களுக்கு உதவியாக, தஞ்சையின் மீது போர் தொடுத்து முத்தரையர்களிடமிருந்து அதைக் கைப்பற்றினான். இத்துடன் முத்தரையர்கள் ஆதிக்கம் ஒடுங்கிற்று. பல்லவர்கள் விசயாலயனே தஞ்சையை ஆளும்படி விட்டுவைத்தனர். இதுவே வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்துவிட்டது. விசயாலயன் காலத்திலேதான், தஞ்சை சோழர்களுடைய தலைநகரமாக மாற்றப்பட்டது. நகர் விரிவாக்கப்பட்டு, கோட்டை கொத்தளங்கெளெல்லாம் சிறப்பாக அமைக்கப்பெற்றன. நாட்டின் மத்தியப் பகுதியில் தலை நகரை உருவாக்கிய தனிச் சிறப்பை முதன் முதலாகப் பெறுபவனாக விசயாலயன் திகழ்கின்றான். தன்னுடைய தஞ்சை வெற்றியின் பெருமிதத்தால், இவன் ''தஞ்சைகொண்ட பரகேசரி'' என்ற பட்டமும் பெற்றான். பல போர்களைப் புரிந்து எத்தனையோ வெற்றிகளை இவன் அடைந்திருக்க வேண்டும். மூவருலாக்களும், விசயாலயனை, ''தொண்ணூற்றாறு விழுப்புண்களை மார்பிலே தாங்கியவன்'' எனப் பாடுகின்றன. கி.பி.881 வரையில் அவனுடைய ஆட்சி நிலவியது.

''ஆதித்த சோழன்''

விசயாலயனை அடுத்து அவன் மகன் ஆதித்த சோழன் (கி.பி.871-907) பட்டத்திற்கு வந்தான். இவன் முதலில் பல்லவ அரசனாகிய

அபராஜிதனின் சிற்றரசனாகத் திகழ்ந்தான். அவனுடன் சேர்ந்து ''திரும்புறம்பயம்'' என்னுமிடத்தில் நடந்த போரில் பாண்டியனைத் தோற்கடித்தான். பிற்காலச் சோழர்களின் எழுச்சிக்கு வித்தாகத் திரும்புறம்பயப் போர் அமைந்துவிட்டது. அதன்பிறகு, ஆதித்தன் தன்னுடைய படைவலியையும் துணைவலியையும் பெருக்கிக் கொண்டு அபராஜிதன் மீதே போர் தொடுத்து அவனைக் கொன்றான். இதுவரை சிற்றரசாகத் திகழ்ந்த சோழஅரசு, பேரரசாகத் தலைதூக்கியது. ஆதித்தன் விரைவில் தொண்டை மண்டலத்தையும் வென்று அதைச் சோழப் பேரரசுடன் இணைத்தான். சேரமன்னன் தாணுரவி என்பவனுடன் நட்புறவு கொண்டான். இங்ஙனமாக, சோழர்களின் புகழ் விரிவடைந்தது. வடக்கே இராட்டிரகூடரின் ஆட்சிவரம்பை, சோழநாடு எட்டியது.

ஆதித்தன் கண்ட வெற்றிகட்கெல்லாம் அவனுக்குக் கங்கர்கள் துணை நின்றனர். பல்லவ இளவரசி திரிபுவனமாதேவி என்பவளைத் திருமணஞ் செய்துகொண்டான். இராட்டிரகூட மன்னன் இரண்டாம் கிருட்டினன் என்கிற வல்லவரையன் மகள் இளங்கோன்பிச்சி என்பவளை ஆதித்தன் தன் பட்டத்தரசியாக்கிக் கொண்டான.

விசயாலயன் தோற்றுவித்த சோழ அரசு அவன் மகன் ஆதித்தன் மேற்கொண்ட பெரு முயற்சிகளால் பேரரசாக அரியணை கண்டது. தந்தையும் மகனும் மேற்கொண்ட அரசுமுறை உறவுகள் பேரரசு உருவாகப் பெரிதும் துணை நின்றன. ஆதித்தன் கடைப்பிடித்த மணமுறை உறவுகள் பேரரசு நிலைத்திருக்க உற்ற துணை புரிந்தன.

கண்டராதித்த சோழன்

இராசகேசரி, பரகேசரி, என்னும் பட்டங்களை மாறி மாறிப் புனைந்து கொண்டு தொடர்ந்து சோழர்கள் தமிழகத்தைச் சிறப்பாக ஆட்சிசெய்து வந்தார்கள். ஆதித்தன் கொங்குநாட்டிலுள்ள 'தலைக்காடு' என்ற ஊரைக் கைப்பற்றியதாகக் ''கொங்கு தேச இராசாக்கள்'' என்னும் நூல் குறிப்பிடுகின்றது. கொங்கு நாட்டிலிருந்து கைப்படுத்திக் கொணர்ந்த பொன்னைக் கொண்டு தில்லையம்பலத்துக்குக் கூரை வேய்ந்தான் என நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார். இச் சோழர் மரபில் வந்த கண்டராதித்தன் என்னும் மன்னன் சைவப்பற்று மிகக் கொண்டு விளங்கினான். அவன் பாடிய ''திருவிசைப்பா'' இருளகற்றி அருளூட்டும் நாயன்மார் பாடல்களுக்கு நிகராகி ஒன்பதாந் திருமுறைமுறையினுள் இடம் பெற்றுள்ளது.

இராசராசன்-இராசேந்திரன்

முதலாம் இராசராசன், அவன் மகன் முதலாம் இராசேந்திரன் ஆகிய இருவரும் ஏற்படுத்திய சாதனைகள் உலக வரலாற்றில் தந்நிகரற்று விளங்குகின்றன. வரலாற்றுப் பேராசிரியர்கள் இவ்விருவரையும் வியந்து எழுதும் பக்கங்கள் தமிழாதம் புகழுக்குக் கிடைத்த விளக்கங்களாகத் திகழ்கின்றன. தென்னாடு மட்டுமன்றி வடக்கே கங்கை வரையிலும் இவர்களுடைய ஆணை சென்றது. கிழக்கிந்தியத் தீவுகளான சாவா, சுமத்திரா அளவும் சோழர்களின் ''திக்குவிசயம்'' நீண்டது. முதலாம் குலோத்துங்கன் என்பவன் ''கலிங்கம் வென்றான்'' எனப் புகழப்படுகின்றான்.

வாரிசுப் பிரகடனம்

மூன்றாம் இராசேந்திரன் (1279) காலம் வரை சோழப் பேரரசு விளங்கியது. நானூற்றைம்பதாண்டுக் கால வரலாற்றை நடத்திச் சென்ற சோழர்களின் தனித்திறன் கவனிக்கத்தக்கது. பெரும்பாலான அரசர்கள் தம் ஆட்சிக் காலத்திலேயே அடுத்து ஆளக்கூடிய இளவரசர்களுக்குப் பட்டஞ் சூட்டிய திறமை போற்றத்தக்கதாக ஆகிவிட்டது.

மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததற்கு இன்றியமையாத காரணம், பிந்துசாரரோ, அசோகரோ தமக்குப் பின், ஆட்சிக்கு வரக்கூடிய வாரிசுக்கு முக்கியத்துவம் அளிக்காததேயாகும். இதனால் வாரிசுரிமைப் போர்கள் ஏற்படவும், அதன் காரணமாக நாட்டில் குழப்பங்கள் உண்டாகவும், அரச பரம்பரையினர் கொல்லப்படவும், அரசு வீழ்ச்சியுறவும் காரணமாகியது. இப்படிப்பினையை அறியும்போது சோழர்கள் பின்பற்றிய இளவரசுப் பட்டம் சூட்டும் முறை பல சூழ்நிலைகளை நேர் கொண்டு செலுத்த உதவியது. சான்றோனாக்கும் தந்தையின் கடமைகளோடு, நன்னடை நல்கும் வேந்தனின் கடமைகளும் நிறைவேறின. அரச வாரிசுகள், ஆட்சியில் பயிற்சி பெறவும் போர்களில் வெற்றிகொள்ளவுமான வாய்ப்புகள் கிடைத்துவிடுகின்றன. இவ்வாறான ''வாரிசுப் பிரகடனம்'' சோழர்களின் தனித் திறமையைப் பறைசாற்றுகின்றது.

விசயாலயனுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற அவன் மகன், முதலாம் ஆதித்தன், தந்தை காலத்திலேயே இளவரசுப் பட்டம் எய்தினான். அரசியலாற்றலும் போர்த்திறனும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பிற்காலச் சோழப் பேரரசை நிலைப்படுத்திய முதல் அரசன் இவனேயாவான். **

உத்தம சோழன்

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே சிறந்த மாமன்னனாகப் போற்றிப் புகழப்பெறும் முதலாம் இராசராசன், தன் சிறிய தந்தை உத்தமசோழனால் இளவரசுப் பட்டஞ் சூட்டப்பெற்றவன் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல, இராசராசன் தன் மகன் முதலாம் இரோசேந்திரனுக்கு இளவரசுப் பட்டங் கட்டிப் பயிற்சிபெற வைத்தான். இராசராசன் பெற்ற பெருவெற்றிகள் பல இராசேந்திரன் ஈட்டித் தந்தவையாகும். ஒரேகாலத்தில் தந்தையும் தனயனும் இரண்டு பேரரசர்களாக இருந்துகொண்டு ஒரு மித்த வலிமையுடன் திகழ்ந்தனர். ஆட்சிக் கலையிலும் போர்க்கலையிலும் பயிற்சிபெற இத்தகைய வாரிசு அறிவிப்பு முறை பெரிதும் துணை நின்றது. இராசேந்திரன் தன் மகன் முதலாம் இராசாதிராசன் என்பவனுக்கு இருபத்தைந்தாண்டுக் காலம் அரசுமுறைப் பயிற்சியளித்தான்.

முதலாம் இராசாதிராசன்

இராசராசன் திறமைகள் அனைத்தும் இராசேந்திரன் பெற்றதால், அவ்விருவர் திறமைகளையும் இராசாதிராசன் பெறுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தான் என்றுதான் கூறவேண்டும். இவ்வாறாக அடுத்தடுத்துத் தோன்றிய சோழப் பேரரசர்களும் வாரிசு அறிவிப்பு முறையைப் பின்பற்றினார்கள்.

மணமுறை உறவுகள்

பேரரசைத் தொடர்ந்து நிலைநிறுத்திய பெருமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது என்னவெனின், முதலாம் ஆதித்தன் - சோழ பேரரசாக்கிய முதற் பெருவேந்தன் - ஏற்படுத்திய தனிச் சிறப்பு ஆகும். அவன் பல்லவரோடும், இராட்டிர கூடரோடும் மணமுறை உறவுகொண்டு பகையை உறவாக்கிய அரசியல் தந்திரம் அடுத்தடுத்து வந்த சோழர்கள் பலராலும் தொடர்ந்து பின்பற்றப்படுவதாயிற்று.

முதலாம் பராந்தக சோழன் சேரர் மரபில் பெண் கொண்டான். வேங்கி நாட்டு மன்னன் முதலாம் சத்தியவர்மனுடைய தம்பியான விமலாதித்தனுக்கு இராசராசனின் மகள் குந்தவை மணம் முடிக்கப்பெற்றாள். கன்னடநாடு, பாண்டி நாடு, சாளுக்கியநாடு, ஈழநாடு முதலான பேரரசுப் பரம்பரையில் மணமுறை உறவு கொண்டனர் சோழர்கள். பழையாறை, கொடும்பாளூர் முதலான சிற்றரசு பரம்பரையினர்களுடனும் சோழர் அரசு பரம்பரையினர் மணம் முடித்துக் கொண்ட வரலாறு காணப்பெறுகின்றது. இத்தனித்திறமை காரணமாக நாட்டின் எல்லை விரிவடைந்தது. ஆங்காங்கே உட்பூசலின்றி நாடு அமைதி கண்டது. அதுமட்டுமா? வேறொரு மிகப்பெரிய நன்மைக்கும் காரணமாக விளங்கியதை வரலாறு கண்டது. அதாவது இராசேந்திர சோழனுக்குப் பிறகு (கி.பி.1070) சோழர் குலத்தில் நேரடி வாரிசு யாரும் இல்லாதபோது, வேங்கி நாட்டு மணமுறை உறவுவழி வாரிசாக முதலாம் குலோத்துங்கன் என்பவன் பட்டத்துக்கு வந்தான்.

முதலாம் குலோத்துங்கன்

முதலாம் குலோத்துங்கன் இருவழியில் இராசராச சோழனின் கொள்ளுப் பேரனாவான். இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரனின் மகள் அம்மங்கா தேவியின் மகன் இவன். இவனுடைய தந்தை கீழைச் சளுக்க மன்னன் முதலாம் இராசராசன். இவன் வேங்கி நாட்டு விமலாதித்தனுக்கும் முதலாம் இராசராசன் மகள் குந்தவைக்கும் பிறந்தவன். குலோத்துங்கனின் உடலில் பெருமளவு ஓடியது சோழர் குலக் குருதிதான். இக்குலோத்துங்கன் தஞ்சையில் பாட்டிவீட்டில் வளர்ந்தவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. கி.பி.1070-இல் சோழநாட்டின் அரியணையை அணிசெய்த முதலாம் குலோத்துங்கன் ஒரு புதுயுகம் தோற்றுவித்தான் என வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப் பெறுகிறான்.

சோழப் பேரரசர் வெற்றிப் பட்டங்கள்

இறுதியாக, சோழர்கள் தங்கள் புகழை நிலைநிறுத்தி அதனை உலகறியச் செய்த தனித்திறன் மிகவும் போற்றற்குரியது. ஒவ்வொரு முறையும் போரில் ஈடுபட்டு ஈட்டிய பெருவெற்றியைக் குறிப்பிடும் வகையில் பட்டஞ்சூட்டிக் கொள்வது குறிப்பிடத்தக்கது. பராந்தக சோழன் மதுரையைக் கைப்பற்றி ''மதுராந்தகன்'' எனப் பட்டஞ் சூட்டப் பெற்றான். சேர பாண்டியரை வென்ற முதலாம் இராசராசன் ''மும்முடிச் சோழன்'' என வழங்கப் பெற்றான். முதலாம் இராசேந்திரனின் ''கங்கை கொண்டான்'', ''கடாரம் கொண்டான்'' பட்டங்களும் முதலாம் குலோத்துங்கனின் ''கலிங்கம் வென்றான்'' பட்டங்களும் புகழ் மிக்கவை. மூன்றாம் குலோத்துங்கனின் ''சோழபாண்டியன்'' சோழ கேரளன்'' ''திரிபுவன வீரதேவன்'' முதலான பட்டங்கள் சோழர்களின் வெற்றிக்கான சான்றுகள். இவ்வாறாக வெற்றிப் பெயர்களாலேயே மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்களுடைய ஆதரவையும் தக்கவைத்துக்கொண்டு நாட்டுப்பற்றை ஊட்டியவண்ணம் இருந்திருக்கின்றனர் என்பது புலனாகின்றது.

கோவில்கள்

கோயில்கள் எடுப்பித்தும் அவற்றின் பராமரிப்புக்காக நிவந்தங்கள் ஏற்படுத்தியும் பெருமை சேர்த்துள்ளனர் சோழர்கள். இராசராசன் எழுப்பிய ''இராசராசேச்சரம்'', இராசேந்திரன் கட்டிய ''கங்கைகொண்ட சோழேச்சுரம்'', மூன்றாம் குலோத்துங்கன் ஏற்படுத்திய ''திரிபுவன வீரேச்சுரம்'' முதலான பல கோயில்களைக் குறிப்பிட முடியும். அரச குடும்பத்தினர்களும், அதிகாரிகளும்கூட நிவந்தங்கள் அளித்திருக்கின்றனர். நாடு முழுவதும் பெரும் பெரும் கோயில்களை எழுப்பியுள்ளனர். சோழர்காலக் கோயில்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை; சோழர்களுடைய ஒப்பற்ற புகழுக்குச் சான்று பகர்பவை. தஞ்சைப் பெருவுடையார் கோயில் உண்ணாழியுள் தீட்டிய ஓவியங்கள் மற்றும் அவற்றின் வழி வெளிப்படும் பக்திச்சுவை முதலியன என்றென்றைக்கும் பெருமை இனிமை சேர்ப்பவை.

மெய்க்கீர்த்திகள்

சாசனங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் முதலானவற்றால் பிற்காலச் சோழர்கள் தங்கள் புகழை உலகறியச் செய்துள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் பொறித்து வைத்துள்ள ''மெய்க்கீர்த்திகள்' அவர்களுடைய வரலாற்றுச் சாதனங்களைப் பறைசாற்றுகின்றன. நாட்டின்ஆட்சிமுறை, காவல், நீதி முதலியனவும் குடவோலை முறைத் தேர்தல் வழி உண்டாக்கிய உள்ளாட்சிப் பாங்கும் சோழர்களுக்குத் தனிப் பெருமை அளிக்கின்றன.

சோழர்கால இலக்கியங்கள்

சோழர்களின் மங்காப் புகழுக்குச்சான்றாக விளங்குகின்றன அக்காலத்திய இலக்கியங்கள். ''திருமுறைகண்ட சோழன்'' என்று இராசராசன் பாராட்டப் பட்டதும், சோழ அரசர்களில் ஒருவனாகிய கண்டராதித்தன், திருவிசைப்பா பாடி; அது திருமுறைகளுள் இடம்பெற்று அதனால் ''சிவஞான கண்டராதித்தர்'' என வழங்கப்பெற்றதும், சோழர் வரலாற்றில் புகழோடு விளங்குகின்றன. கலிங்கத்துப்பரணி, மூவருலா, கம்பராமாயணம், மற்றும் பெரியபுராணம் முதலானவை சோழர்களின் புகழுக்கு விளக்கங்களாக அமைந்துள்ளன. பெரியபுராணம் பாடிய சேக்கிழார் என்னும் பெரும்புலவர் சோழநாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்தவர் என்பதொன்றே, சோழர்களின் தனித்திறனுக்குப் போதிய சான்றாகுமன்றோ!

கருவி நூற் பட்டியல்

1. மூவருலா
2. கலிங்கத்துப்பரணி
3. கே.கே.பிள்ளை, ''சோழர் வரலாறு''
4. சதாசிவப்பண்டாரத்தார், ''பிற்காலச் சோழர் வரலாறு''

எழுஞாயிறன்ன இராசராசன்

தவத்திரு
குன்றக்குடி அடிகளார், M.L.C.

இராசராசசோழன் மனிதரில் உயர்ந்த மாமேதை; மன்னர் மன்னன்; குடி தழுவிய ஆட்சிமுறைக்குக் கால்கோள் செய்தவன்; பத்திமை நெறிக்குப் பகலவன்; பயிலும் கலைகளுக்கு ஓர் கொழுகொம்பு; எழிற்கலைக்கு ஏந்தல்; தமிழ்தழீஇய சாயல் உடையவன்; தமிழ் நெறிக்கு ஓர் அரண், தமிழகச் சமய நெறியில் மண்டிய ஆரியப் புல்லுருவிப் பகையினின்றும் சமய நெறியைக் காத்துத்தந்தவன். அவன் புகழ், தமிழகத்தின் புகழ்.

இராசராசன் 'மக்கட்கு' இறையெனக் கருதப்படும் வள்ளுவத்திற்கு இலக்கியமாய் வந்தமைந்த அரசன்; வெற்றிவேந்தன்; கடலிடைக் கலம் செலுத்தித் தென்கிழக்காசிய நாடுகளை வெற்றிகொண்டவன். தமிழ்ப் பெரும் மண்டலம் கண்டவன்; செருக்களத்தின் செம்மல். அவன் வெற்றித்திரு. தமிழக வரலாற்று ஏடுகளில் ஒளிபெற்று விளங்குகின்றது. ஆட்சியின் அதிகாரம் ஓரிடத்தில் குவிதல் கூடாது. இது இன்றைய அரசியலின்கொள்கை. ஆனால், மன்னர் மன்னனாக முடிமன்னனாக விளங்கிய இராசராசன், அன்றே அந்த அரசியல் நெறியை அறிந்து ஊராட்சி, மன்ற ஆட்சி முறைகளைத் தமிழகத்தில் நடைமுறைப் படுத்தினான். மக்கள் ஆட்சி மலர வழிவகுத்த முதல் மன்னன் இராசராசசோழன்.

இராசராசனது வாழ்க்கை, 'பல' மன்னர்களைப் பற்றிப் படிக்கின்றோமே அத்தகையதல்ல. அவன் சோழநாட்டுக் குடிமக்கள்அனைவரது உடலிடத்தும் உயிரென இடம் பெற்றவன்; சீலத்திற் சிறந்தவனாக விளங்கினான்; எதிலும் உயர்ந்த நோக்கம் உடையவன்; அதனை அவன் எடுத்த தஞ்சைப் பெருங்கோயிலே பறைசாற்றுகின்றது. தமிழகத்தின் புகழுக்குத் தஞ்சைப் பெருங்கோயில் ஓர் அணி. காலம் கருத்தை மறந்தாலும், வரலாறு இராசராசனை மறந்தாலும் தமிழகத்தின்கலையுலகம் இராசராசனை மறக்காது; மறக்க முடியாது. ஓயாது உலகத்தை உருமாற்றும் இயல்புடைய கால தேவதைக்குக்கூட அவனுடைய கலைக்கோயிலை உருமாற்ற முடியாது. அது காலத்தை வென்று நிற்கும் கலைக்கோயில்.

தமிழர்கள் காலத்தால் தோன்றி மூத்த இனத்தினர். அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தில் தோன்றி வளர்ந்த தொன்மையான சமயநெறியுண்டு. தமிழர்களின் சமய நெறி நம்பிக்கைக்கு உரிய நன்னெறி; வாழ்க்கையோடியைந்த நெறி, அதிசயங்களுக்கும் அற்புதங்களுக்கும் அப்பாற்பட்ட நெறி; வேறுபாடுகளைக் கடந்த விழுமிய நெறி; சாதிச் சழக்குகளைக் கடந்த சன்மார்க்க நெறி; பொதுமை மணம் பூத்துக் குலுங்கும் பொது நெறி. இந்த நெறியில் வாழ்க்கைக் கொவ்வா நெறிகளை அயலினத்தார் நுழைத்தனர். புல்லுருவிகளை மரம் எனப் புனைந்து காட்டினர். இப்பொருந்தா வழக்குகளைக் கடிந்து சமுதாயத்திலிருந்து விலக்க; அயல் வழக்கின் துறையைச் செழுந் தமிழ் வழக்கு வென்று விளங்கத் திருஞான சம்பந்தரும், அப்பரடிகளும் திருவவதாரம் செய்து நாடு முழுவதும் நடந்து வலம் வந்து இனிய கருத்துக்களால் எழிற் புரட்சியை உருவாக்கினர்.

திருக்கோயில்களில் எழுந்தருளியிருந்த எம்பெருமான் திருமேனிகளையெல்லாம்பாடிப் பரவி வழிபட்டு, அருள் திருவோலக்கத்தை எழுப்பி அன்றும் இன்றும் நாட்டு மக்கள் வழிபட்டுய்ய வழிவகை செய்தனர். ஆரியப்பகை களத்தில் தோற்றது. ஆனால் மறைவாகச் சதிசெய்து இந்தத் திருமுறை ஏடுகளைக் கவர்ந்து தில்லையில் ஓர் அறையில் இட்டுச் சிறைப்படுத்தியது. அத்திருமுறைச் செல்வத்தை மீட்டுத் தமிழகத்தின் சமயநெறியை அரண் செய்த பெருமை, இராசராச சோழனுக்கே உண்டு. இங்ஙனம் நாடு. இனம், மொழி அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்கிய இராசராச சோழனின் புகழ் எழுஞாயிறென விளங்குகிறது.

— — — — —

புகழ்ஓங்கிய இந்தியத் தருக்கநூல் ஆசிரியர்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(1) கபில முனிவர்:

தத்துவம் அல்லது தருக்கம் பற்றியபழமை யான நூலாசிரியராக சுவேதாசுவதர உப நிடதத்தில் குறிப்பிடப்பெறுபவர் கபிலர் என்பவராவர். இவர் அஜ்மிருக்கு அருகி லுள்ள புஷ்கரம் என்ற இடத்தில் பிறந்தவ ராகத் தெரிகின்றது. ஆனால் இவர் இந்திரப் பிரஸ்த் (டெல்லி) நகரில், வாழ்ந்து வந்தார் என்று பத்மபுராணம் கூறுகின்றது. இவரே சாங்கிய தரிசனம் என்னும் கொள்கையை முதன் முதலில் தோற்றுவித்தவராவர். கபிலர் தம்முடைய கொள்கையை அசூரி என்னும் மாணவருக்குப் போதித்ததாகச் சதபத பிராம் மணம் கூறுகின்றது. இவர் சுமார் கி.மு. 600 ஆம் ஆண்டில் வாழ்ந்தவர். இவர் விஷ்ணு வினுடைய ஐந்தாம் அவதாரமாகவும் தத்தாத் திரேயருக்கு முற்பட்டவராகவும் கருதப் படுகின்றார். கபிலர் 570-490 ஆண்டுகளில் இருந்த புத்தருக்கு முற்பட்டவர். ஆகவே கபிலரைக் கி.மு. 609 முதல் 570 வரை வாழ்ந்தவராகக் கொள்ளலாம். ஆன்மாவைப் புருடன் என்றும், உலகத் தோற்றத்திற்கு மூல மான பொருளைப் பிரகிருதி என்றும், இவைகள் இரண்டும் நித்தியப் பொருள்கள் என்றும் கபிலர் குறிப்பிடுகின்றார்.

(2) தத்தாத்திரேய முனிவர்:

இவர் கபிலமுனிவருக்குப் பிற்பட்டிருந்த வர், திருமாலின் ஆறாம் அவதாரமாகக் கருதப்படுகின்றார். ஆன்வீட்சுகி என்னும் தருக்கநூற் கொள்கையை, இவர் அலாட்கர், பிரகலாதர், முதலியவர்களுக்குக் கற்பித்த தாகப் பாகவதபுராணம் கூறுகின்றது. இவ ருடைய இயற்பெயர் தத்தர்; குடும்பப்பெயர் ஆத்திரேயர். அதனால் இவர் தத்தாத்திரேயர் என வழங்கப்படுகின்றார். கத்தியவார் மாநிலத்தில், கிர்னார் மலைகளில் உள்ள ஒரு கோயிலானது, இவருடன் தொடர்புடையதாய் இன்றும் விளங்கி வருகின்றது.

(3) புனர்வசுஆத்தேய முனிவர் :

இவர், சரகசம்மிதையின் முதல் ஆசிரிய ராவர். அதன்கண் இவர் இந்திரியங்களைப் பற்றி விளக்கியிருக்கின்றார். சரகசம்மிதை ஆயுர்வேதக் கலையைச் சார்ந்தது. இவரிடமிருந்தே புத்தபிரானின் மருத் துவத் தொண்டராக விளங்கிய சீவகர் என்ப வர், தட்சசீலத்தில் கி.மு. 500ல் மருத்துவம் பயின்றார். புனர்வசு ஆத்ரேயர், பாணினி முனிவரைப்போல பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவராவர். பாணினியின் அஷ்டாத்தியா யியைப் போலவே, புனர்வசு ஆத்ரேயருடைய நூலும் எட்டுப் பகுதிகளைக் கொண்டதாக விளங்குகின்றது. ''மனிதனின் கண், காது மூக்கு நாக்கு தோல் என்னும் ஐம்பொறிகளும், முறையே நெருப்பு ஆகாசம் மண் நீர் காற்று என்பவைகளால் அமைந்தது; இவைகள் முறையே நிறம் ஒலி மணம் சுவை ஊறு என்பன வற்றை அறியும். இவைகள் முறையே காணவும் (Visual) கேட்கவும் (Auditory) முகரவும் (Olfactory) சுவையுணரவும் (gestatory) தொட்டு உணரவும் (Tactual) பயன்படும், மனம் என்பது, இவ் ஐந்தனோடும் தனித் தனியே தொடர்புகொண்டு வெவ்வேறு புலன் களை அறியும்'' என்பன போன்ற உண்மை களை, இவர் தம் நூலில் விளக்கியுள்ளார்.

(4) சுலபாதேவி:

இவரைப் பற்றிய குறிப்பு மகாபாரதத் தில் வருகின்றது. ஆன்வீட்சுகி என்னும்தருக்க நூல் பற்றிய கருத்துக்களை விளக்கி, இவர் விரிவுரை நிகழ்த்தியதாக மகாபாரதம் கூறு கின்றது. இவர் மிதிலைமாநகரை ஆண்டுவந்த சனகமன்னரின் அரசவைக்கு, இளமையும் அழகும் மிக்க வடிவத்தை எடுத்துக்கொண்டு சென்று, முக்தி இன்பம் பற்றிய முடிவான உண்மைகளை உபதேசிக்குமாறு வேண்டினார். சனகர் இவர்தம் சித்தியாற்றலால் இளமையும் அழகும் மிக்க வடிவத்தை மேற்கொண்டு வந்து,

இங்ஙனம் தம்மை வினவுவது வஞ்சகம் என்று உணர்ந்து பழித்து இழித்துக் கூறினார். ஆனால் இவரோ சினவாமலும் பதறாமலும் பொறுமையாக இருந்து, 'பேச்சு எவ்வாறு இருத்தல் வேண்டும்?' என்பதற்குரிய இலக்கணங்களை விளக்கினார். ''ஒரு சிறந்த பேச்சானது (1) பொருள் நிறைந்ததாய், (2) மயக்கத்திற்கு இடம் கொடாததாய், (3) நியாயமானதாய், (4) சொற்சிலம்பங்கள் இல்லாததாய், (5) மென்மையானதாய், (6) குறிப்பிட்ட கருத்தைத் தெளிவாக உணர்த்துவதாய், (7) ஆடம்பரமற்றதாய், (8) பிறர் ஏற்றுக் கொள்ளத் தக்கதாய், (9) உண்மை வாய்ந்ததாய், (10) தீங்கு விளைவிக்காததாய், (11) பெருந்தகைமையும் திருத்தமும் உடையதாய், (12) சொற்குறைபாடுகள் இல்லாததாய், (13) திகைக்க வைக்காமல் தெளிவானதாய், (14) ஒழுங்கு படுத்தப்பட்டதாய், (15) பொருத்தமின்றி வலிந்து நலிந்து கூறப்படாததாய், (16) தேவைக்கு மேற்பட்டு மிகுதியான சொற்கள் இல்லாததாய், (17) சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாய், (18) ஏதேனும் ஒரு குறிக்கோள் உள்ளதாய் இருத்தல் வேண்டும்'' என்று விரித்துரைத்து விளக்கினார். பேசும் முறைபற்றி; எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்குமுன்னரே இவர் கூறியுள்ள இலக்கணங்கள் மிகவும் வியக்கத்தக்கனவாக உள்ளன.

(5) அஷ்டவக்கிர முனிவர் :

இவரைப் பற்றிய குறிப்பு மகாபாரதத்தில் காணப்படுகின்றது. நீண்ட நெடுங்காலம் தவம் செய்து முதுமை அடைந்ததனால், இவருடைய உடலானது எட்டுவகையானகோணல்களை உடையதாக ஆகிவிட்டது. அதனால் இவருக்கு அஷ்டவக்கிர முனிவர் என்னும் பெயர் அமைந்தது. இவர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பண்பாட்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகின்றார். சுவேதகேதுவின் தந்தை யாரும், உத்தாலகரின் மருமகருமாகிய காகோதரர் என்பவரின் புதல்வரே, அஷ்டவக்கிரர். மிதிலையில் சனகருடைய அரண்மனையில் நிகழ்ந்த ஒரு வேள்விக்கு இளைஞராக இருந்தபொழுது அஷ்டவக்கிரர் சென்றார். அப்பொழுது வாயிற் காவலர்கள் அவரை உள்ளே விடாமல் தடுத்தனர். சனகர் அவரை உள்ளே அழைத்துச் சென்றார். சனகரின் அரசசபையில், வந்தின் என்னும் பெயருடைய பெரும் புலவருக்கும் அஷ்டவக்கிரருக்கும் பெரும் சொற்போர் நிகழ்ந்தது. அதில் அஷ்டவக்கிரர் வென்றார். ஆதலின் அஷ்டவக்கிரர் ஒரு சிறந்த சொற்போர் வல்லவராகவும், தருக்கநூல் கலையில் தேர்ச்சி மிக்கவராகவும் போற்றி மதிக்கப்படுகின்றார்.

(6) மேதாதிதி கௌதமர்:

தருக்கநூலில் வல்லவர்களாகப் பண்டைக் காலத்தில் எத்தனையோ பலர் இருந்தனராயினும், அவர்களுள் மிகமிக முதன்மையானவராக வரலாற்று முறையில் மதிக்கப்படுபவர், மேதாதிதி கௌதமரே ஆவர். இவர் கி.மு. 500-க்குச் சற்று முன்னரோ பின்னரோ வாழ்ந்தவர். மிதிலையினுடைய எல்லைப் புறத்தில், தர்பங்கா நகரத்திற்கு வடகிழக்கே, 28 மைல் தொலைவில் இருக்கின்ற கௌதமத் தானம் என்னும் இடமே, இவர் பிறந்த இடமாகக் கருதப்படுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதத்தில், நவமிதிதியில், இவருடைய நினைவாக ஒரு விழாக் கொண்டாடப் பெறுகின்றது. அவ்விடத்தில் ஒரு பெரிய மண்குன்று உள்ளது. அதுவே இவரது ஆசிரமமாக இருந்தது என்றும், அருகில் உள்ள கௌதமக் குண்டம் என்னும்கிணறு, இவரால் பயன்படுத்தப்பட்டது என்றும் அதன் நீரானது பால்போன்ற சுவை உடையதாகத் திகழ்வதனால், அதற்கு க்ஷீரோததி (பாற்கடல்) என்னும் பெயர் வழங்குகின்றது என்றும், மக்கள் கூறிவருகின்றனர்.

இராமாயணத்தில் வரும் அகலிகை என்பவளே, இவர்தம் மனைவியாவர், அகலிகை கல்லாகக் கிடந்ததன் அடையாளமாக, அகல்யாஸ்தானம் என்னும் இடத்தில் ஒரு பாறைக் கல் இருந்து வருகின்றது. அதற்கு அருகில் இராமபிரானுக்கு ஒரு கோயில் அமைந்திருக்கக் காண்கின்றோம். குஷான அரசர்களின் காலத்தில் இருந்த பாசர் என்னும் கவிஞர், தாம் இயற்றிய பிரதிமா நாடகத்தில், நியாய சாத்திரத்தைத் தோற்றுவித்தவர், மேதாதிதி கௌதமர் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் நசிகேத கோதமர் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர், கௌதம புத்தரைப்போல, இவரும் ஆங்கிரச கோத்திரத்திற்கு உரியவராவார். தருக்கசாத்திரம் இவரது பெயரால் கௌதமிவித்தியா என்று சிறப்பித்து வழங்கப் பெறுகின்றது.

(7) அட்சபாதர்:

நியாய சூத்திரத்தின் பழைய பேருரைகளில், நியாயசூத்திரத்தின் ஆசிரியர் அட்சபாதர் என்றே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உத்யோதகாரர், தம்முடைய நியாயவார்த்திகம் (கி.பி. 600) என்னும் நூலில், நியாய சாத்திரத்தைத் தெளிவாக விளக்கியவர் அட்சபாதர் என்று புகழ்ந்து கூறுகின்றார். நியாய வார்த்திக தாற்பரிய டீக்கை (கி.பி. 81), நியாய மஞ்சரி என்னும் நூல்களுள், அட்சபாதரே நியாயசாத்திரத்தினை முதன்முதல் வெளிப்படுத்தியவர் என்று போற்றப்படுகின்றார். மாதவாசாரியர் (கி.பி. 1350), தம்முடைய சர்வதரிசன சங்கிரகம் என்னும் நூலில், நியாய தத்துவத்தை 'அட்சபாத தரிசனம்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

8) வாத்ச்யாயனர்:

இவர் நியாய சூத்திரத்திற்கு நியாய பாஷ்யம் என்னும் பேருரை இயற்றினார். நியாயசூத்திரம் தோன்றி, 200 ஆண்டுகள் கழித்த பின்னர், நியாயபாஷ்யம் வாத்ச்யாயன ரால் இயற்றப்பட்டது. இவர் திக்கநாகருக் கும் வசுபந்துவுக்கும் முற்பட்டவர். ஆயினும் இவர் மாத்தியமிக சூத்திரம், லங்காவதார சூத்திரம் என்னும் நூல்களையும், நாகார்ச்சுன ரின் கொள்கைகளையும் ஆங்காங்கே தழுவிக் குறிப்பிட்டுள்ளார். திக்கநாகர் கி.பி. 500லும், வசுபந்து கி.பி. 480லும் வாழ்ந்திருந்தனர். அவ்விருவருக்கும் முற்பட்ட வாத்ச்யாயனர், கி.பி. 400ல் வாழ்ந்திருந்தவராகக் கொள்ள லாம். வாத்ச்யாயனர் காஞ்சிபுரத்தில் பிறந்தவ ராகத் தெரிகின்றது. காஞ்சிபுரம் மிகப்பழைய காலத்தில் மிகவும் புகழ்பெற்ற கல்வி மைய மாகத் திகழ்ந்திருந்தது. திக்ககநாகர் (கி.பி. 500), தருமபாலர் (கி.பி.தி700) போன்ற பௌத்த நூலாசிரியர்கள் காஞ்சிபுரத்தி லேயே தோன்றி வாழ்ந்த தமிழ் நாட்டவர்கள் ஆவர். வாத்ச்யாயனர் புழுங்கல் அரிசியைப் பற்றித் தம் நூலில், ஓர் இடத்திற் குறிப்பிடு கின்றார். அதனாலும் இவர் தென்தமிழ் நாட்டைக், குறிப்பாகக் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகின்றது. காமசூத்திரம் எழுதியவரும், விக்கிரமாதித்தன் என்னும் இரண்டாம்சந்திரகுப்தனின் காலத்தவருமாகிய வாத்ச்யாயனர் என்பவர், இவரின் வேறுபட்ட வராவார்.

(9) உத்யோதகாரர்:

இவர் நியாயசூத்திரத்திற்கு நியாயவார்த் திகம் என்னும் உரை எழுதினார். சுபந்து என்னும் கவிஞர் இயற்றிய 'வாசவதத்தை' என்னும் மாபெரும் காவியத்தில், இவர் போற் றிப் புகழப்படுகின்றார். அர்ஷசரிதம் என்னும் நூல் இயற்றிய பாணர் என்னும் கவிஞர், தானேசுவரம் என்னும் தலைநகரில் அரசு புரிந்து வந்த அர்ஷவர்த்தனர் என்னும் அரச ரின் காலத்தில் (கி.பி. 629-644) வாழ்ந்தவர். இவ்வரசரின் காலத்திலேயே இயூன்-சுவாங் என்னும் சீனயாத்திரிகர் இந்தியா முழுவதி லும், சுற்றுப்பயணம் செய்தார். உத்யோதகா ரர், தம்முடைய நூலில் தருமகீர்த்தி என்னும் பௌத்த ஆசிரியரின் வாதநியாயம் என்னும் நூலைக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே தரும கீர்த்தியும், தம்முடைய நியாயபிந்து என்னும் நூலில், உத்யோதகாரரின் நியாயவார்த்திகம் பற்றிக் குறிப்பிடுகின்றார். அதனால் உத் யோதகாரரும், தருமகீர்த்தியும் (கி.பி. 635) சமகாலத்தவர் என்பது புலனாகின்றது. உத் யோதகாரர் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர். பாசுபத மதத்தின் ஓர் ஆசாரிய ராக விளங்கியதனால், இவரைப் பாசுபதாசாரி யர் என்றும் வழங்குவர். இவர் அர்ஷசக்கர வர்த்தியின் தலைநகராகிய தானேசுவரத் திற்கு 40 கல் தொலைவில், சுருக்னா என்னும் ஊரில் பிறந்தவர் என்பர்.

(10) வாசஸ்பதிமிச்ரர்:

வாசஸ்பதி மிச்ரர், தற்காலத்து வட பீகார் மாநிலத்தில், தர்பங்கா என்னும் இடத் தில் (மிதிலை), கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் நியாயசூசி நிபந்தம் என்னும் நூலைக் கி.பி. 841-ஆம் ஆண்டில் தொகுத்தார். இவர் கி.பி. 1,000 ஆண்டில் வாழ்ந்திருந்த இரத்தினகீர்த்தி என்னும் பௌத்தத் தருக்க நூலாசிரியருக்கு முற் பட்டவர். இவருடைய ஆசிரியர் திரிலோசனர் என்பவர். திரிலோசனர் வைசேடிக தத்துவத் வத்தைப் பற்றிக் கி.பி. ஆயிரம் ஆண்டில் எழுதியவர். வாசஸ்பதி மிச்ரர் நியாயகணிகா என்னும் நூலை எழுதினார். ஆனால் அஃது இப்பொழுது கிடைக்கவில்லை. வாசஸ்பதி மிச்ரர் பல்வேறு தத்துவங்களைப் பற்றியும் விளக்கவுரைகள் இயற்றியதாகக் கூறப்படுகின் றது. அவருடைய வேதாந்த பாஷ்யம்(பாமதி டீக்கா) என்னும் உரையும், சாங்கிய தத்துவ கௌமுதி என்னும் நூலும், இந்தியத் தத்துவ இலக்கியங்களில், மிகமிகச் சிறப்பான இடத் தைப் பெற்றுள்ளன. இவருக்குச் ''சர்வ-தந்திர-சுதந்திரர்'' (எல்லாத் தத்துவங்களிலும் தேர்ச்சிமிக்கவர்; ஆனால் தனிப்பட்ட எதனை யும் சார்ந்தவர் அல்லர்) என்னும் சிறப்புப் பெயர், வழங்குகிறது.

இவர் தம்முடைய நியாய-வார்த்திக-தாற்பரிய டீக்கா என்னும் நூலில், மாத்ய மிகம், விஞ்ஞானவாதம், சௌத்திராந்திகம்; வைபாடிகம் என்னும் நான்கு பௌத்தமதக் கூறுகளையும், வாத்சிபுத்ரீயம் என்னும் பிரிவை யும் குறிப்பிடுகின்றார். அடிக்கடி திக்கநாகர், தர்மகீர்த்தி ஆகியோரின் கொள்கைகளை மறுக்கின்றார்.

(11) உதயணர்:

உதயனாசாரியர், கல்யாணரட்சிதர் (கி.பி. 879), தர்மோத்தராச்சாரியர் (கி.பி. 847 என்னும் இரு பௌத்தத் தருக்கநூல் ஆசிரியர் களை, எதிர்த்து மறுத்தவர். கல்யாணரட்சிதர் தம்முடைய ஈசுவர-பங்க-காரிகை என்னும் நூலில் கடவுளுண்மையை மறுத்திருப்பதனை உதயணாசாரியர் தம்முடைய குசுமாஞ்சலி என்னும் நூலில், ஆபோகம்-கணபங்கம்-சுருதி அப்ரமாண்யம் என்னும் கல்யாணரட்சிதர் கொள்கைகளைக் குறைகூறி மறுத்துள்ளார். இவருடைய குசுமாஞ்சலி என்னும் நூலில், கட வுளுண்மையைப் பெரிதும் வற்புறுத்திப் பல காரணங்களைக் கூறி விளக்கியிருக்கின்றார்.

(12) ஜயந்தர்:

இவர் நியாய சூத்திரத்திற்கு உரை வகுத்தார். இவரது நூல் நியாயமஞ்சரி என்னும் பெயருடையது. இவர் பண்டிதசந்திரர் என்பவரின் புதல்வராவார். இவரை விருத்திகாரர் என்றும் வழங்குவர். இவர் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் காசுமீரத்தில் வாழ்ந்தவர். இவர் தம்முடைய நூலில் வாசஸ்பதி மிச்ரர் (கி.பி. 841), மாகர் (கி.பி. 957), என்பவர்களின் கருத்துக்களைக் குறிப்பிட்டு மறுத்துரைக்கின்றார். தோல்வித்தானங்கள் 22 என்று தர்மகீர்த்தி என்னும் பௌத்த நூலாசிரியரும் கூடக் கூறுகின்றார் என்று குறிப்பிட்டு, 'அபார்த்தகம்' என்னும் தோல்வித்தானத்திற்குச் சௌத்திராந்தகம் யோகாசாரம் மாத்தியமிகம் வைபாடிகம் என்னும் நால்வகைப் பௌத்தர்களின் கூற்றுக்களை உதாரணமாகக் காட்டுகின்றார். ''பௌத்தர்களே! நீங்கள் உயிர் என ஒன்று இல்லை என்கின்றீர்கள். ஆயினும் மேல் உலகத்தில் இறந்ததன் பின்னர் இன்பம் அனுபவிக்க விரும்பிப் புத்தர் பெருமானுக்குச் சைத்தியங்கள் கட்டுகிறீர்கள். கணபங்கவாதம் பேசுகின்ற நீங்கள், எண்ணில்லாத பல நூற்றாண்டுகள் நிலைபெற்று விளங்கவேண்டுமென்று, உங்களுடைய மடங்களைக் கட்டுகின்றீர்கள். உலகமே மாயை என்று கூறுகின்ற நீங்கள், ஆன்மீகத்தைப் போதிக்கும் புத்த பிட்சுகளுக்கு ஏராளமான செல்வங்களை வழங்குதல் வேண்டும் என்கிறீர்கள். புத்தர்களாகிய நீங்கள் கொண்டிருக்கின்ற குணங்கள் அதிசய மானவை. உண்மையிலேயே அவைகள் ஒரு பெரும் மோசடியாகும்'' என்று, ஜயந்தர் தம்முடைய நியாயமஞ்சரியில் பௌத்தர்களைக் கண்டனம் செய்கின்றார்.

(13) ஸ்ரீகண்டர்:

இவர் கி.பி. 1409ஆம் ஆண்டுக்கு முன்னால் வாழ்ந்தவர். நியாய சூத்திரத்திற்கு, நியாய அலங்காரம் என்னும் உரைநூலை இயற்றியிருக்கின்றார். சமணராகிய குணரத்தினர் என்பவர், தம்முடைய 'ஷட்தரிசன சமுச்சய விருத்தி' என்னும் நூலில், ஸ்ரீகண்டரைக் குறிப்பிட்டுள்ளார்.

(14) அபயதிலகோபாத்தியாயர்:

இவரைக் குணரத்தினர் என்னும் சமண தத்துவஞானி, தம்முடைய ஷட்தரிசன சமுச்சய விருத்தியில் குறிப்பிடுகின்றார். இவர் நியாய சூத்திரத்திற்கு நியாயவிருத்தி என்னும் உரைநூல் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி. 1400-க்கும் முற்பட்டதாகும்.

(15) அரிபத்திரசூரி (கி.பி. 1168):

இவர் இயற்றிய ஷட்தரிசன சமுச்சயம் என்னும் நூல், நையாயிகர்களைச் சைவர்கள் என்று குறிப்பிடுகின்றது. மலதாரி இராஜசேகரசூரி (கி.பி. 1348) என்பவரும் இவ்வாறே நையாயிகர்களைச் சைவர்கள் என்கின்றார். வைசேடிகர்கள், பாசுபதர்கள் எனப்படுகின்றனர். இனதத்தசூரி இயற்றிய விவேக விலாசம் என்னும் நூல், நையாயிகர்கள் வைசேடிகர்கள் என்னும் இருவரையும் சைவர்கள் என்றே கூறுகின்றது. மலதாரி இராஜசேகரசூரி, நையாயிக சைவர்கள் ஆடை அணியாமல், தலையிற்சடைகளுடன், உடம்பு முழுவதும் திருநீறு பூசிக் கொண்டு, காய்கனி கிழங்குகளை உண்பவர்கள் என்று குறிப்பிடுகின்றார். அவர்கள் சிவபெருமானின் பதினெட்டு வடிவங்களை வழிபடுகிறார்கள் என்றும், ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தை உச்சரிக்கின்றார்கள் என்றும் கூறுகின்றார்.

நியாயசூத்திரம் இயற்றிய அட்சபாதர், சிவபிரானின் அவதாரமாகக் கருதப்படும் சோமசர்மரின் புதல்வராவார். வாத்ச்யாயனர் தம் நியாயபாஷ்யத்தில், இறைவனைச் சிவபெருமானாகவே வருணனை புரிந்துள்ளார். அட்சபாதர், வாத்ச்யாயனர் ஆகியோரின் கொள்கைகள் எப்படியிருப்பினும், எல்லா நையாயிகப் பிராமணர்களும் சைவர்களேஎன்பதில் ஐயமில்லை. உத்யோதகாரர் பாசுபத சைவர்களின் தலைவராகத் திகழ்ந்தார் என்பது, அவருடைய நியாயவார்த்திகத்தால் புலனாகிறது. வாசஸ்பதி மிச்ரரின் நியாய வார்த்திகத் தாற்பரிய டீக்காவானது, பினாகபாணி ஆகிய சிவபிரானின் துதியுடன் தொடங்குகின்றது. உதயணாசாரியரின் நூல்கள் அவர் சைவர் என்பதை ஏராளமான சான்றுகளால் வலியுறுத்துகின்றன. நியாயசாரம் இயற்றிய பாசர்வக்ஞர், தத்துவசிந்தாமணி இயற்றிய கங்கேசஉபாத்தியாயர் ஆகியவர்களின் நூல்கள், சம்புவாகிய சிவபெருமானின் துதிப்பாடல்களுடனேயே தொடங்குகின்றது.

(16) இந்திரபூதி (கி.மு. 607-515):

இவர் சைனசமயத்தைத் தோற்றுவித்த மகாவீர வர்த்தமானரின் மாணவராவார். இவருக்குக் கௌதமர் அல்லது கோதமர் என்றும் பெயர் வழங்கும். இவருடைய தந்தையாரின் பெயர் பிராம்மணவசுபூதி. தாயார் பிராம்மணீபிருத்திவி. மகதநாட்டில் கோர்பாரா என்னும் சிற்றூரில் இவர் பிறந்தார். இராசகிருகத்தில் குணாவா என்னும் இடத்தில் 92ஆம் வயதில் மறைந்தார். மகாவீர வர்த்தமானர் நிர்வாணம் அடைந்ததற்குப் பிறகு, 12 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து, இவர் பின்னர் மறைந்தார்.

சைனர்களின் நூல்கள், சித்தாந்தங்கள் அல்லது ஆகமங்கள் என வழங்கும். இவைகள் 11 அங்கங்களாகவும், 12 உபாங்கங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இவைகள் அர்த்தமாகதி அல்லது பிராக்ருத மொழியில், அமைந்திருக்கின்றன. இவ்வாறே பௌத்தமத நூல்கள் மாகதி அல்லது பாலிமொழியில் இயற்றப்பட்டுள்ளன. முதன்முதலில் அங்கங்கள் பன்னிரண்டாகவே இருந்தன. பன்னிரண்டாம் அங்கம் சிருட்டிவாதம் எனப்பெற்றது. அது சம்ஸ்கிருதத்திலேயே இயற்றப்பட்டிருந்தது. அது இப்பொழுது கிடைக்கவில்லை.

(17) மூத்த பத்திரபாகு (கி.மு. 433—357):

சைன சமய நூல்களின் இடையிடையே தருக்க சம்பந்தமான சொற்களும் குறியீடுகளும் ஆங்காங்கே காணப்படினும், தொடக்கத்தில் சமய நூல்களில் தருக்கநூல் ஒன்றாகச் சிறப்பிடம் பெறவில்லை. பத்ரபாகு, உமா சுவாதி ஆகியோர்களின் நூல்களிலேயே தருக்க நூற் கருத்துக்கள், ஆங்காங்கே பெரிதும் ஆராயப்படுகின்றன. பிராசீனகோத்திரத்தைச் சேர்ந்த பத்திரபாகு என்பவர், தசவைகலிக சூத்திரத்திற்கு இயற்றிய, தசவைகலிக நிருத்தி என்னும் உரைநூலில் தருக்கநூல் பற்றிய விரிவான கருத்துக்கள் ஆராயப்படுகின்றன. பத்திரபாகு 45 ஆண்டுகள் இவ்வுலகில் சாதாரண மனிதராக வாழ்ந்தார். 17 ஆண்டுகள் சைனசமய விரதங்களைக் கடைப்பிடித்தார். 14 ஆண்டுகள் அவரது காலத்தில் தலைசிறந்த மனிதர் (யுகப்பிரதானர்) என்று போற்றப்பெற்று விளங்கினார். திருஷ்டிவாதத்தில் 14 பூர்வங்களிலும், இவர் தேர்ச்சி பெற்றிருந்தார். சுவேதாம்பரர்களும் திகம்பரர்களும் இவர் வாழ்ந்த காலம் பற்றிச் சிறிது கருத்துவேறுபாடு உடையவராக இருக்கின்றனர். எவ்வாறு இருப்பினும் பத்திரபாகு என்பவர், இரண்டாம் சந்திரகுப்தர் என்னும் விக்கிரமாதித்தியரின் காலத்தில், அதாவது சற்றேறத்தாழ கி.பி. 375இல் வாழ்ந்தார் எனக் கொள்ளலாம். இவர் அவாசியக சூத்திரம், உத்தராத்யயன சூத்திரம், ஆசாரங்க சூத்திரம், சூத்திரகிருத்தாங்க சூத்திரம், தசஸ்சுருதஸ்கந்த சூத்திரம், கல்பசூத்திரம், வியவகாரசூத்திரம், சூரியப்பிரக்ஞாபதி சூத்திரம், ரிஷிபாகித சூத்திரம் என்னும்சைன நூல்களுக்கு விளக்கவுரைகள் இயற்றியுள்ளார்.

இவர் தம்முடைய தசவைகலிகநிருத்தி என்னும் நூலில், பத்து உறுப்புக்கள் கொண்ட தசஅவயவ வாக்கியம் என்பதனை அமைத்துக் காட்டி, சைனசமயக் கொள்கைகளை விளக்கினார். அப்பத்துவகையான (தசஅவயவ) வாக்கியமானது பிரதிக்ஞை, பிரதிக்ஞா விபக்தி, ஏது, ஏதுவிபக்தி, விபட்சம், விபட்சப் பிரதிசேடம், திருட்டாந்தம், ஆ ச ங் கை, ஆசங்காபிரதிசேதம், நிகமனம் என்பவையாகும்.

பத்திரபாகு தம்முடைய மற்றொரு நூலாகிய சூத்திரகிருதாங்க-நிருக்தி என்னும் மற்றொரு நூலில் சியாத்துவாதம் அல்லது சப்தபங்கிநயம் என்பவற்றைக் குறிப்பிடுகின்றார். சியாத்துவாதமானது, ஏழுவகையாக ஓர் உண்மையைக் கூறும். (1) அது இருத்தல் கூடும், (2) அது இல்லாமலும் இருக்கலாம். (3) இருந்தாலும் இருக்கும், இல்லாவிட்டாலும் இல்லை. (4) அது சொல்ல முடியாததாகவே இருக்கலாம். (5) அது இருக்கலாம் எனினும் சொல்லமுடியாது. (6) அது இல்லாமலும் இருக்கலாம், சொல்லமுடியாததுமாக இருக்கலாம், (7) அது இருக்கலாம் இல்லாமல் இருக்கலாம், சொல்ல முடியாததாகவும் கூட இருக்கலாம்.

(18) உமாசுவாதி:

இவர் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வாசகசிரமணர் எனப் பெரிதும் போற்றப் பெறுபவர். மாதவாசாரியர் என்னும் இந்து சமய தத்துவஞானி இவரை உமாசுவாமி வாசகாசாரியர் என்று தம்முடைய சர்வ தரிசன சங்கிரகத்தில் குறிப்பிடுகின்றார். இவர் 84வயது உயிர் வாழ்ந்திருந்து,(கி.பி.0001-0084) 85ல் மறைந்தார். தத்துவார்த்தா திகம சூத்திரத்தில், இவரே பின்வருமாறு தம்முடைய வாழ்க்கையைப் பற்றிக் குறித்துள்ளார். இவர் நியக்குரோதிகம் என்னும் சிற்றூரில் பிறந்தார். ஆனால் தத்துவார்த்தாதிகம சூத்திரம் என்னும் நூலைப் பாடலிபுத்திரம் அல்லது குசுமபுரம் எனப்படும் தற்காலப் பாட்னா நகரத்தில் இயற்றினார். இவர் தந்தையாரின் பெயர் சுவாதி. அதனால் இவர் சுவாதிதனயர் என வழங்கப்படுவதுண்டு. இவருக்கு வத்சிசுதா எனவும் ஒரு பெயர் வழங்கும். ஏனெனில் இவருடைய தாயாராகிய உமா என்பவர், வத்ச கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

—தொடரும்

ஆழ்வார் அருளும்
அர்த்த பஞ்சக ஞானம்

திரு. நா. வேணுகோபால நாயகர், B.A.,B.L.,
செயலாளர், ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கம், சென்னை-1.

ஒரு மதத்தின் சிறப்பை உலகம் அறிய வெளியிடுவதற்கு, ஐந்து சிறந்த உரைகல்கள் உள்ளன. ஒருமதத்தின் சிறந்த கொள்கைகளை அறிந்து, (1) பகுத்தறிவு பாராட்ட வேண்டும்; (2) மனச்சான்று மார்புதட்டி மகிழ வேண்டும்; (3) தர்க்கம் தலைவணங்கி நிற்க வேண்டும்; (4) மேதா விலாசம் மெச்சிப் புகழவேண்டும்; (5) பக்திப் பயிர் தழைத்து முத்திநெறி ஓங்க வேண்டும். இவைகள் ஐந்தும் இல்லையெனில், மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்சொல்லு வதில் ஓர் மகிமை இல்லை!

இந்த ஐந்து உரைகல்களிலும் ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தின் சிறப்புக் கொள்கையைச் சிறிது தேய்த்துத் தீட்டி நுவல 'நோற்ற நோன்பி லேன்; நுண்ணறிவிலேன்' நியமனம் வேண்டு கின்றேன். எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்கும் இச்செவிக்கினிய சிந்தைக்கினிய செஞ் சொற்களை, அழுக்குடம்பு எச்சில் வாயால் தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லு கேன், என் பிறவித் தொல்லை தீர!

ஸ்ரீவைணவம் என்ற ஐந்து எழுத்துக் களால் மகுடம் அமைந்த நமது தரிசனத் திற்குக் குலநாதன் என்ற ஐந்து எழுத்துக் களால் ஆன விருது சூட்டி வணங்கப்படுபவர், சடகோபர் என்ற ஐந்து எழுத்துக்களாலான திருநாமம் உடையவர். மகிழ்மாறன் ஆகிய நம்மாழ்வார்க்கு மற்றும்பல திருநாமங்கள் இருப்பினும், ஆழ்வார் தம்மைப் பத்துப் பத்துக் களால் அமைந்துள்ள நூறு திருவாய்மொழி களிலும் 'குருகூர்ச் சடகோபன்' என்றே குரல் கொடுக்கின்றார். கம்பநாட்டாழ்வார் தாம் இயற்றிய இராமகாதையை அரங்கேற்ற அரங் கன் திருமுன் எழுந்தருளவும், நம்பெருமாளும் 'நம் சடகோபனைப் பாடினையோ?' என்று அருளப்பாடு இடவும், கவிச்சக்கரவர்த்தியா கிய கம்பர் சடகோபர் அந்தாதியினைச் சாதித்தருளினார்.

மிகுஞானச் சிறுகுழவியான சடகோபரும் அர்த்தபுஷ்டியுள்ள வைணவ ஞானத்தைத் தமது பிரபந்தங்களில் ஐந்து துறைகளாக்கி, ஐந்து எழுத்துக்களால் ஆன பஞ்சகம் என்றும், 'அர்த்தபஞ்சகம்' என்றும் வெளியிட்டு அருளி னார். முன்னே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங் களிலும் சுருக்கமாக அருளிச் செய்யப்பட்ட ஐம்பொருள் ஞானத்தைத் திருவாய் மொழி யிலே, இருபது திருவாய்மொழிகளைக் கொண்டு தெளிவாக அருளிச் செய்து, ஏனைய எண்பது திருவாய்மொழிகளிலே மேலும் பரப்பியருளிய தால், திருவாய் மொழியும் ஐந்து எழுத்துக் களால் ஆன 'தமிழ்மறை' என்றே உச்சிமேற் கொண்டு போற்றப்படுகின்றது. இமையோர் தலைவனும், இந்தத் தமிழ்வேத இசையை இருந்த இடத்தைவிட்டு எடுத்து அடிவைக்கா மல், மெய்ந்நின்று கேட்டருள்கின்றான்.

குருகூர்ச் சடகோபன் சொன்ன, அவாவில் அந்தாதிகளாய் அமைந்த ஆயிரம் பாடல் களிலே அருளப்பெற்ற அர்த்தபஞ்சகத்தை, ஐம்பொருள் ஞான அமுதை விவரித்தருள் கின்றார், பட்டர் ஒரே பாடலிலே!

மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்,
தக்க நெறியும், தடையாகித்-தொக்கியலும்
ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன்
யாழின்இசை வேதத் தியல்.

திருவாய்மொழி ஆயிரம் பாடல்களில் அமைந்த ஞானஅமுதை ஒரே பாடலில் வடித்துத் தந்தமையால், மொழியைக் கடக்கும் பெரும் புகழாளர் ஆன கூரத்தாழ்வானின் திருக்குமாரர் ஆகிய பட்டரும், 'பறப்பதன் குஞ்சு தவழுமோ?' என வியந்து போற்றப் பட்டார் போலும். நாம் அறியவேண்டிய பொருள்கள் ஐந்தே. இவைகளைக் கூட்டவோ குறைக்கவோ முயன்றால், அனர்த்தமே நேரி டும் என்பதை உணர்தல் வேண்டும்.

'மூன்றும் மூன்றும் ஆறு' என்பது கணிதம். ஆனால், 'மூன்றும் மூன்றும் ஐந்தே' என்று

ஐயம்திரிபற அருளிச் செய்கின்றார் ஆழ்வார். (1) அசித்து-சித்து-ஈசுவரன் என்பது தத்துவத் திரயஞானம். (2) தத்துவம் - இதம் - புருஷார்த்தம் என்பது மதத்தின் மூன்று கூறுகள். இவைகளை இணைத்தால் பெறுவது ஆறு அல்ல; அர்த்த பஞ்சகமான ஐந்தேயாகும். அசித்து-தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை. சித்து - மெய்யாம் உயிர் நிலை. ஈசுவரன்-மிக்க இறைநிலை. தத்துவம் - ஈசுவரனே தத்துவம்; தத்துவம் வேறு, ஈசுவரன் வேறு அல்லன். ஈசுவரன் இல்லையென்றால் தத்துவம் இல்லை. தத்துவமாக அமைய ஈசுவரன் தேவை. எனவே ஈசுவரனும் தத்துவமும் ஒன்றே. இதம் - தக்க நெறி. புருஷார்த்தம் - வாழ்வினை (வீட்டின் இயல்).

ஸ்ரீவைணவ ஞானத்தை எப்படிக் கூட்டினாலும், குறைத்தாலும், அர்த்தபஞ்சகம் ஆகவே அமையும். ஆகையினால் அறிய வேண்டிய பொருள்களெல்லாம் இதற்குள்ளேயே அடங்கியிருக்கும்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார், பட்டொளி வீசிப் பறக்கவிட்ட 'அர்த்த பஞ்சகம்' என்னும் ஐந்துவண்ணக் கொடியே, ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தின் ஞானக் கொடியாகும். பண்தரும் மாறன் பசுந்தமிழால்ஆகிய இந்த ஐவண்ணக் கொடியைக் கண்டு, பகுத்தறிவு பாராட்டுகின்றதா? மனச்சான்று மார்பு தட்டி மகிழ்கின்றதா? தர்க்கம் தலைவணங்கி நிற்கின்றதா? மேதா விலாசம் மெச்சிப் புகழ்கின்றதா? பக்திப் பயிர் தழைத்து முத்திநெறி ஓங்கி வளர்கின்றதா? என்பதை, நடுநிலைமையுடன் இங்கு நாம் சுருக்கமாகக் காண்போம்.

1. மிக்க இறைநிலை:

மதத்திற்குத் தலையான கருத்து கடவுளே யாவர். கடவுளை ஒப்புக் கொள்ளாத மதம் தலையில்லாத உயிரற்ற வெற்றுடம்பே! கடவுளை ஒப்புக் கொள்ளாமல், சீவகாருண்யத்தை மட்டுமே வலியுறுத்திய மதங்கள் மருங்கறத் தேய்ந்து மறைந்து ஒழிந்துவிட்டன; நாடு கடந்து நழுவி ஒழிந்தன! ''புலையறம் ஆகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம் கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ? கேட்பரோதாம்?'' என்று கேள்விக் கணையை எதிர்மறையால் ஏவுகின்றார், துளவத் தொண்டு புரிந்த தொல்சீர்த் தொண்டர் அடிப்பொடி யாழ்வார்.

கடவுளை ஒப்புக் கொண்டாலும் அவரைப் பூரணமாக நன்கு அறியாத மதங்களும் உண்டு. கடவுளுக்குக் குணங்கள் இல்லையென்றார்கள் சிலர். கடவுளுக்கு உருவம் இல்லையென்றனர் சிலர். ஆனால், எடுத்த எடுப்பிலேயே, அவர்களுடைய கழுத்தில் கைவைப்பதுபோலக் கருணா மூர்த்தியான கார்வண்ணனின் கல்யாண குணங்களையும் கண்ணன் கவரும் திருவடிமுதல் திருமுடி வரையிலான திருவுருவ அழகையும் போற்றித் திருவாய் மொழியை ஆரம்பித்தருளினார் நம்மாழ்வார் என்று, குதூகலிப்பராம் கூரத்தாழ்வான். திருமால் ஏனைய பிற தெய்வங்களின் குணங்களைவிட, மிக மேலான சிறந்த பல குணநலங்களை உடையவன். இவ்வுண்மையினை,

''உயர்வற உயர்நலம் உடையவன் யவன்? அவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவன்? அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன்? அவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே''

என்று நம்மாழ்வார் திருவாய்மொழியின் தொடக்கத்திலேயே திருமாலின் உயர்வற உயர்ந்த சிறந்த குணநலங்களைப் போற்றித் துதித்து மகிழ்ந்திருத்தல் காணலாம். பக்தர்களின் துயரை அறுத்துச் சுடர்விடும் திருவடி என்பதைவிட, பக்தர்கள் படும் துயரைக்கண்டு இறைவன் தானே பெரிதும் துயரம் அடைவதால், அவன் தன்னுடைய துயரையும்அறுத்துக் கொண்டு பொலிவடையச் செய்யும் திருவடி என்று இப்பாடலுக்கு எம்பெருமானார் பொருள் பணிப்பராம்.

நம்மாழ்வார், நாவினால் நவின்று தலைச்-கட்ட முடியாத நாராயணனின் திருக்கல்யாண குணங்களை நான்கு வகையாக வடித்தெடுத்து,

''அகல கிலேன் இறையும்என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்? உலகம்
மூன்றுடையாய்! என்னை ஆள்வானே !
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''

என்று வரும் பாசுரத்தில் விளக்கியருள்கின்றார். 'நிகரில் புகழாய்' என்பதனால் வாத்சல்யம் என்னும் குணம் உணர்த்தப்பெற்றது. வாத்சல்யமாவது குற்றங்களைக் குணமாகக் கொள்ளுதற்குரிய அன்பு; கன்றினிடத்துப் பசுவிற்கு உள்ள அன்பு போன்றது. கன்றின் அழுக்கினையும் பசுவானது விரும்பித் தன் நாவினால் தடவி உண்ணும். அதுபோன்று இறைவனும் அடியார்களின் குற்றங்களைக் குணமாகக் கொண்டருள்கின்றான். இத்தகைய அன்பே வாத்சல்யம் எனப்படும்.

'உலகம் மூன்றுடையாய்' என்பதனால், சுவாமித்துவம் சுட்டப் பெற்றது. அதாவது பிறர் எவருக்கும் தாழாமல், உயர்ந்து நிற்கும்

பெருமை. எல்லா உலகங்களுக்கும் இறைவனே அதிகாரி, உடையவன் தலைவன்.

'என்னே ஆள்வானே' என்பதனால் சௌசீல்யம் என்னும் குணம் சொல்லப் பெற்றது. சௌசீல்யமாவது, தானே வலிந்து வந்து பெருங்கருணையுடன் அடியார்களை ஆட்கொள்ளும் இயல்பு. 'திருவேங்கடத் தானே' என்பதனால் சௌலப்பியம் என்னும் குணம் கூறப்பெற்றது. சௌலப்பியமாவது எல்லோருக்கும் சுலபமாக எளிமைத் தன்மை யோடு எழுந்தருளி அருள்புரியும் தன்மை. திருமால் திருவேங்கடமலையின்மீது இவ்வாறு எல்லோரும் எளிதிற் கண்டு வணங்கித்தொழுது உய்யும்படியாக வீற்றிருக்கின்றான். ஆதலினால், 'திருவேங்கடத்தானே' என்னும் தொடரால், திருமாலின் சௌலப்பியம் என்னும் எளிமைத் தன்மை தெளிவுறப் புலப்படுத்தப் பெற்றது.

இனி, திருமால் பரம் வியூகம் விபவம் அந்தர்யாமி அர்ச்சை என்கிற ஐந்து நிலைகளில் விளங்கி அடியவர்களுக்கு அருள்புரிந்து வருகின்றான் என்பது, ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தின் கொள்கை. இந்த ஐவகை நிலைகளையும் நம்மாழ்வார் பின்வருமாறு ஒரே பாசுரத்தில் அழகுற அருளிச் செய்கின்றார்:

''விண்மீது இருப்பாய்! மலைமேல் நிற்பாய்!
கடல் சேர்ப்பாய்!
மண்மீது உழல்வாய்! இவற்றுள் எங்கும்
மறைந்து உறைவாய்''

எனவரும் திருவாய்மொழிப் பாசுரத்தில் மேற்குறித்த ஐவகை நிலைகளும் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம். 'விண்மீது இருப்பாய்' என்பது பரமபதத்தில் வீற்றிருக்கும் பரம் என்னும் நிலையையும்; 'மலைமேல் நிற்பாய்' என்பது யாவரும் அர்ச்சித்து வழிபடும் அழகிய திருவுருவத்துடன் 'திருமலையில் நிற்பவனே' என்று அர்ச்சை நிலையையும்; 'கடல் சேர்ப்பாய்' என்பது, திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு கண்வளர்ந்தருள்பவனே என்று வியூக நிலையையும்; 'மண்மீது உழல்வாய்' என்பது, இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்கள் எடுத்து, மண்மீது உலவியவனே என்று விபவ நிலையையும்; 'இவற்றுள்எங்கும் மறைந்துறைவாய்' என்பது இந்த உலகில் எல்லாப் பொருள்களிலும் உயிர்க்குயிராய் மறைந்து உறைபவனே என்று, அந்தர்யாமித்துவ நிலையையும் முறையே எடுத்து விளக்கி மொழிந்திருத்தல் எண்ணி இன்புறுதற்குரியது.

—(தொடரும்)

சீக்கியர் வேதம்

சீக்கிய வேதம், 'கிரந்த சாகிப்' எனப்படும். அது 29,480 செய்யுட்கள் கொண்டது; வெவ்வேறாக அமைந்த செய்யுள் வகைகளையுடையது. இதன்கண் கபீர்தாசர், நாமதேவர், இராமாநந்தர் போன்ற பல சிறந்த பெரியோர்களின் பாடல்களும் உண்டு. இந்துக்களும் இசுலாமியரும் ஆக மொத்தம் 37 பெரியார்களின் பாடல்கள், இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ளன. பிற மதங்களின் வேதங்கள் அவ்வவற்றிற்குரிய ஒரு மொழியிலேயே பெரும்பாலும் அமைந்திருக்கும். சீக்கிய மதத்தின் வேதமோ, பஞ்சாபி, மூல்ட்டானி, பாரசீகம், பிராகிருதம், இந்தி, மராத்தி ஆகிய ஆறு மொழிகளில் ஒருங்கே அமையப் பெற்றுள்ளது. அமிர்தசரஸ் என்னும் இடத்திலுள்ள பொற்கோயிலின் கருவறையில், சீக்கியர்களின் வேதம் ஆகிய 'கிரந்த சாகிப்' என்பது, உருவம் கொண்ட ஒரு கடவுள்போல், வைத்துப் பெரிதும் போற்றப்படுகின்றது. அவ்வேதம், நாள்தோறும் காலையில் சரிகை பின்னிய பட்டு ஆடைகளால் அணி செய்யவும், விலையுயந்த அணிகலன்கள் பதித்த விதானத்தின் கீழ் அமர்த்தவும், இரவில் பொற்கட்டிலில் ஓய்வு கொள்ளுமாறு உபசரிக்கவும் பெறுகின்றது. நாள் திங்கள் பருவம் ஆண்டு என்னும் எல்லாக்காலத்திலும், இரவு பகல் என்னும் வேறுபாடு இன்றி, அமிர்தசரஸ் நகரிலுள்ள பொற்கோயிலின் ஒருபுறத்தில், அவ்வேதம் இடையறாது தொடர்ந்து ஓதப்பெற்று வருகின்றது.

—ஆசிரியர்

இராசராசன் ஆட்சியும்-மாட்சியும்

"சித்தாந்த கலாநிதி"
ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

அருமையாம் தமிழ்ப்பண் பாட்டின்
அற்புதச் சின்னம் ஆகத்,
திருமுறை கண்ட சோழன்
சிறந்தநல் இராச ராசன்,
பெருமையாம் கலைகள் போற்றிப்
பெருவுடையார் கோயில் கண்டான்;
இருநிலத்து இணையில் லாத
அவன்புகழ் இனிது வாழ்க!

—ந. ரா. முருகவேள்

முன்னுரை:

இராசராசன், தமிழ்நாட்டில் அரசு செலுத்திய எண்ணற்ற பல அரசர்கள் எல்லோரிலும் தலைசிறந்த ஒரு பேரரசனாவான். அவனுக்கு நிகரான ஒரு சிறந்த பேரரசன் வேறு எவனும் இருந்திருக்க முடியும் என்று தோன்றவில்லை. 'இனி யார் உளரோ? முன்னும் இல்லை!' என்னும் நிலையில், அவன் ஒப்புயர்வற்ற பேரரசனாகச் சிறந்து விளங்கினான். வரலாற்றில் உருவாகியவர் என்றும், வரலாற்றை உருவாக்கியவர் என்றும் (Creatures of History and Creators of History), அரசர்கள் அனைவரையும் இருவகையாகப் பிரிக்கலாம். அவர்களில் இராசராசன், ஒரு புதிய மாபெரும் வரலாற்றையே உருவாக்கிய மாட்சிமைக்கு உரியவனாவான்.

எழில்வளர் ஊழி:

உரோமநாட்டு வரலாற்றில் அகஸ்டரின் காலம் (Augustan age) என்றும், இந்திய நாட்டு வரலாற்றில் குப்தர்களின் பொற்காலம் என்றும், புகழ்ந்து சொல்லப்படுவதற்கும் மேலாக, இராசராசன், தமிழ் நாட்டில் அரசு செலுத்திய இனிய காலம், ஈடும் எடுப்பும் அற்று விளங்கியிருந்தது எனலாம். இராசராசனின் கல்வெட்டுகளில் 'எழில்வளர் ஊழி' எனக் குறிப்பிடப் பெறுதல், இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். இராசராசனின் ஆட்சிக் காலம் இனியதோர் எழில் வளர் ஊழியே ஆகும் என்பதில் ஐயம் இல்லை.

தன்னிகரற்ற சான்றோன்:

இராசராசன், இரண்டாம் பராந்தகன் (கி.பி. 957-970) என்னும் சுந்தர சோழனின் மைந்தனாகத் தோன்றியவன். சுந்தரசோழர் 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' எனப்பாராட்டப்பெறும் வீரமுடையவர். இவர் திருவியலூர்ச் சிவயோகநாதர் கோயிலுக்குச் சிறந்த திருப்பணிகள் செய்தவர். இவர் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தி வந்தார்.

'பழையாறை நகர்ச் சுந்தரச்சோழரை யாவர் ஒப்பார்கள் இத்தொல் நிலத்தே' என வரும் வீரசோழிய மேற்கோட் செய்யுளால், இவர் தம் சிறப்பை யாவரும் இனிது உணரலாம். இராசராசனின் தாய் வானவன்மாதேவி என்பவர் ஆவர். தன் கணவன் உயிர் நீத்த போது, தானும் உடன் கட்டை ஏறி உயிர் நீத்த கற்புக்கரசி ஆகிய உத்தமி இவள்! இவ்விரு தந்தை தாயருக்கும் மைந்தனாகப் பிறந்தவன் என்பதே, இராசராசனின் சிறப்பை விளக்கப் போதியதாகும்.

இராசராசனின் உடன் பிறந்த தமையன், ஆதித்த கரிகாலன் (கி.பி. 962-970). இவன் 'வீரபாண்டியன் தலைகொண்டவன்' என்று சிறப்பிக்கப் பெறுவான். இவனது காலத்திலேயே நம்பியாண்டார் நம்பிகள் வாழ்ந்திருந்தார் என வரலாற்று ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். இராசராசனின் பெரிய பாட்டனார், கண்டராதித்த சோழர் (கி. பி. 953-957). இவர் சிவபக்தியிற் சிறந்து ஞான நெறியில் நின்று ஒழுகியவர் ஆதலின், இவரைச் 'சிவ ஞான கண்டராதித்தர்' எனக் கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும். ஒன்பதாம் திருமுறை ஆகிய திருவிசைப்பாவில் இவர் பாடிய பாடல்கள் சேர்த்துத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

இராசராசனின் பெரிய பாட்டியாரும், அவனை இளமையில் வளர்த்து ஒழுக்கப் பண்பாடுகளில் விழுத்தக்கவனாக விளங்குமாறு

செய்தவரும், சிவஞான கண்டராதித்தரின் மனைவியாராகிய செம்பியன்மாதேவியார் என்னும் சீலம் மிக்க சிறந்த அம்மையார் ஆவர். அவ்வம்மையாரது பக்தியுணர்வின் சிறப்பும், பண்பாட்டின் மேன்மையும், மிகவும் வியந்து போற்றத்தக்கனவாகும். திருநல்லம் (கோனேரிராசபுரம்), திருமுதுகுன்றம், திருக்கோடிகா, திருவாரூர் அரனெறி, திருத்துருத்தி, ஆநாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை, நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள செம்பியன் மாதேவித் திருக்கயிலாயமுடையார் கோயில், என்னும் பத்துத் தலங்களில், மிகச் சிறந்த விழுமிய திருப்பணிகளைச் செய்துள்ளவர், இராசராசனுக்குப் பெரிய பாட்டியாராய் அவனைப் பேணி வளர்த்து ஆளாக்கிய, இச் செம்பியன் மாதேவியாரே ஆவர்!

இராசராசனின் உடன் பிறந்த தமக்கையார் குந்தவைப் பிராட்டியார் என்பவர். இவரும் மிகச்சிறந்த பண்பு நலங்கள், வாய்ந்து தமது தம்பியாகிய இராசராசனைத் தமது கண்ணின் மணியெனப் பெரிதும் போற்றி வளர்த்தவராவர். வல்லவரையர் வந்தியத் தேவர் என்னும் வீரப்பெருமகனார்க்கு வாழ்க்கைத் துணையாக அமைந்த இவர், தஞ்சைப் பெரிய கோயிலில் தமது தந்தையாகிய பராந்தகச் சுந்தர சோழர்க்கும், தாயாராகிய வானவன் மாதேவியார்க்கும், திருவுருவப் படிமங்கள் எழுந்தருளச் செய்வித்தார். மேலும், தம் தந்தையாரின் நினைவாகத் தஞ்சையில் சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர் சாலை (**Hospital**) ஒன்று நிறுவி, மருத்துவக் காணியாக அதற்கு நில தானங்கள் பல அளித்துள்ளார்.

இராசராசனின் பட்டத்தரசியாக விளங்கியவள் உலகமாதேவி என்னும் பெயரினள், இவளுக்குத் 'தந்தசக்தி விடங்கியார்' எனவும் பெயர் வழங்கும். திருவையாற்றில் அறப் பெருஞ் செல்வி (தரும சம்வர்த்தனி) ஆகிய அம்பிகையின் கோயிலை 'உலகமாதேவீச்சரம்' என்னும் பெயரால் திருப்பணி செய்து எடுப்பித்தவள், இப்பெருமாட்டியே ஆவள். கங்கை கொண்ட சோழன் என்னும் புகழ் பெற்ற இராசேந்திர சோழன், இராசராசனின் இனிய தவமைந்தன் ஆவன். மாதேவடிகள் சந்திர மவுலி, குந்தவைப் பிராட்டி என்னும் இருவரும் இராசராசனின் அருந்தவப் புதல்வியர் ஆவர். இவ்வாற்றால் இராசராசன் தோன்றிய அரச குடும்பத்தின் சீரும் சிறப்பும் இனைய எனத் தெளிவதுடன், அவனது தன்னிகரற்ற சான்றாண்மை நலங்களையும், நாம் நன்கினிது உணரலாம்.

இணையற்ற பெருவீரன்:

இராசராசன், சோழப் பேரரசை நிறுவி வளர்த்துப் பெருக்குவதற்காக, எத்தனையோ பல பெரும் போர்களில் ஈடுபட்ட இணையற்ற பெருவீரன். அவன் காந்தளூர்ச்சாலைக் கலம் அறுத்தருளினான்; வேங்கை நாட்டை வென்றான்; கங்க நாட்டைக் கைப்பற்றினான்; தடிகை பாடியையும் நுளம்பபாடியையும் தன் வயப்படுத்தினான்; குடமாலைநாடும் கொல்லமும் கலிங்கமும் ஆகியவற்றை வென்று, தன் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டான்; ஈழமண்டலத்தைச் சோழமண்டலத்திற்கு அடிமையாக்கினான்; முரட்டு எழிற் சிங்களரைச் செருக்கு அடக்கினான்; இரட்டபாடி ஏழரை இலக்கமும், தன் திண்டிறல் தண்டால் வென்றி கொண்டான். அவனது ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டின் எல்லை பெரிதும் விரிவடைந்து வளர்ந்தது. இதனால் அவனது இணையற்ற வீரத்தின் சிறப்பை இனிது உணரலாம்.

சிறப்புப் பெயர்கள் :

இராசராசன், தான் செய்த போர்களில் எல்லாம் தோல்வி என்பதனைச் சிறிதும் அறியாது எங்கும் எப்போதும் வெற்றியே பெற்று வந்தான். அதனால் அவனுக்குச் சயங்கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரும் உண்டாயிற்று, சேர அரசனின் செருக்கை அழித்துக் கேரளாந்தகன் எனவும், பாண்டிய மன்னரின் படைகளை அழித்துப் பாண்டியகுலாசனி எனவும், அவன் புகழ்பெற்றான். இங்ஙனம் சேரர் பாண்டியர் சோழர் என்னும் மூவேந்தர்களின் முடி உரிமையையும் தான் ஒருவனே பெற்றுச் சிறப்புற்றதனால், மும்முடிச் சோழன் என்னும் பெயர் இவனுக்கு வழங்குவதாயிற்று. க்ஷத்திரிய சிகாமணி என்னும் நிலையில், கல்வி கேள்விகளிலும் கலை உணர்வுகளிலும் மேம்பட்டு, அவற்றைப் போற்றி வளர்ப்பதில் இவன் நித்த வினோதன் எனப் புகழ் பெற்று விளங்கினான்.

ஆட்சித்திறன் :

(1) அரசர்களிற் பலர் உலக வரலாற்றில் வெற்றி வீரர்கள் (**Great Conquerers**) எனச் சிறந்து விளங்கியிருந்தனர். ஆனால் அவர்களிற் பலர் நல்ல ஆட்சித்திறன் உடையவர்களாய் (**Able Administrators**) இல்லாமல் சீரழிந்து சிதைந்தொழிந்ததைக் காண்கின்றோம். அங்ஙனமின்றி, நம் இராசராசன், வெற்றிப் பெருவீரனாகவும், ஆட்சித்திறன் மிக்கவனாகவும் ஒருங்கே ஒப்புயர்வற்றுச் சிறந்தோங்கித் திகழ்ந்தான். அவனது ஆட்சி நல்லாட்சியாகவும் வல்லாட்சியாகவும் ஒருசேரத் திகழ்ந்தோங்கியது. அவன் தனது ஆட்சிக் காலத்தில் முதன் முதலாகச் சோழநாட்டில் உள்ள நன்செய் புன்செய் நிலங்களையும் காடுகளையும் எல்லாம் அளந்து கணக்கெடுக்கும்படி கட்டளை இட்டான். அதற்காகச் ''சேனாதிபதி குரவன் உலகளந்தானான இராசராச மாராயன்'' என்னும் உயர் அலுவலாளனை நியமித்தான். கி. பி. 1001-ஆம் ஆண்டில் சோழநாடு முழுவதும் முற்றிலும் திருத்தமாகச் செவ்வனே

அளந்து கணக்கெடுக்கப் பெற்றது. நிலத்தின் எத்துணைச் சிறுபகுதியும் விடாமல் நுட்பமாக அளக்கப்பெற்றது என்பது, ''இறையிலிநீங்கும் நிலம் முக்காலே இரண்டு மாகாணி அரைக் காணி முந்திரிகைக்கீழ், அரையே இரண்டுமா முக்காணிக்கீழ் முக்காலே நான்குமா அரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவினால்இறை கட்டின காணிக்கடன்'' எனவரும் கல்வெட்டுப் பகுதியினால் நன்கு விளங்கும். விளைநிலங் களுக்கு மட்டுமே வரிவிதிக்குமாறு இராசராசன் ஆணையிட்டான். இதனால், நீதி நெறி சிறிதும் பிறழாத அவனது நேர்மைக் குணம் எவர்க்கும் இனிது புலப்படும். இது இராசராசனின் நல் லாட்சித் திறனுக்கு நனிமிகச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

(2) இங்ஙனமே இராசராசன் செய்த மற்றொரு செயலும், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடற்பாலது. இன்று நம் முன்னோர் களின் வரலாற்றை நாம் ஓரளவேனும் உணர்ந்து கொள்ள வரலாற்று ஆராய்ச்சிக்குத் துணைபுரியும் கருவிகள் சிலவற்றுள், கோயிற் சுவர்களில் அரசர்களின் மரபுநெறியினையும் அருஞ்செயல்களையும், அருட்கொடைகளை யும், பின்னுள்ளோர் அறிந்து கொள்ளும் வகை யில், மெய்க்கீர்த்திகள் எனப்படும் ஒருவகைக் கவிதை நடைக் கல்வெட்டுக்களை முதன்முத லாகச் செதுக்கி வைக்குமாறு செய்தவன் இராச ராசனே ஆவன். தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், இன்று நாம் சதயப் பெருநாள் விழாவை இங்ஙனம் மிகப் பெரும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கும், வேறு பிற வரலாற்றுச் செய்திகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் எல்லாம், இராச ராசன் முதன் முதலாகச் செதுக்குமாறு செய் வித்த மெய்க்கீர்த்திகளே காரணமாகும்.

(3) இவ்வாறே இராசராசன் செய்தஅரிய பெரிய சிறந்த தொண்டுகளுள் ஒன்றாகக் குறிப் பிட்டு நாம் பெரிதும் போற்றத்தகுவது, அவன் திருமுறைகளைக் கண்டெடுத்துப் பரப்பிய அருஞ்செயலாகும். ஒரு சிலர் திருமுறைகண்ட வன் இராசராசன் அல்லன் என்பர். ஆயினும், திருமுறைகண்ட புராணம், 'அலகில் புகழ் பெறும் இராசராச மன்னன் அபயகுலசேக ரன்' தான், திருமுறைகளைக் கண்டெடுத் தான் எனக் கூறுகின்றது. நம்பியாண்டார் நம்பி களைக் கொண்டு ஆதித்தகரிகாலன் தான் (கி.பி. 965-970), திருமுறைகளைக் கண்டெடுத்தான் என்பது உண்மையே ஆகலாம் எனினும், தன் னுடைய தமையனது தொண்டுகளுக்குத்தம்பி யாகிய இராசராசன் பெரிதும் துணைபுரிந்தி ருப்பான்; தமையன் விடுத்துச்சென்ற பணி களைத் தான் எடுத்து மேலும் வளர்த்துப் பரப்பியிருக்கின்றான்; ஆதலின் திருமுறை கண்ட பெருமையில் இராசராசனுக்கும் பங் குண்டு என்பதில் சிறிதும் ஐயத்திற்கு இட மில்லை. இராசராசனின் ஆட்சித் திறனுக்கும் அறிவாற்றல் திறனுக்கும், அருங்கலைத்தொண் டினுக்கும், சிறந்த சமய நெறிப் பண்பாட்டிற் கும், பக்தி உணர்வு ஒழுக்கங்களுக்கும், திரு முறைகண்டு பரப்பிய செயல், நல்ல சிறந்த சான்றாகும்.

பண்பு நலங்கள் :

இராசராசன் உயரிய பண்பு நலன்களுக் கெல்லாம், ஓர் உறைவிடமாக விளங்கினான். தன் தாய் தந்தையர்களிடத்திலும் பாட்ட னார் பாட்டியார் தமக்கையார் ஆகியோரிடத் திலும் மிக்க பேரன்பும் பெருமதிப்பும் வைத்து, அவர்களைப் பெரிதும் போற்றி வந்தான். தன் பாட்டனார் ஆகிய அரிஞ்சயன் (957-970) நினைவாக, வடஆற்காடு மாவட்டத்தில் மேற் பாடி என்னும் இடத்தில், அரிஞ்சயேச்சரம் என்னும் கோயில் எடுப்பித்தான். தனது தமக் கையாரின்மீது கொண்டிருந்த அன்பும் மதிப் பும் காரணமாக, தனது அருமை மகளுக்கும் குந்தவை என்றே பெயரிட்டான். தன் தாய் தந்தையரின்திருவுருவப்படிமங்களைத்தஞ்சைப் பெரிய கோயிலில் தமக்கையாரின் விருப்பத்தின் படி எழுந்தருளச் செய்வித்தான். தன் பெரிய பாட்டனாரையும், பெரிய பாட்டியாரையும் முறையே 'சிவஞான கண்டராதித்தர்' 'செம்பி யன் மாதேவடிகள்' எனக் கல்வெட்டுக்களிற் புகழ்ந்து போற்றினான்.

தன் தமையனாகிய ஆதித்த கரிகாலன் (957-970) இறந்த பிறகு, அவனுக்குப் பின்னர் அரியணையைக் கைப்பற்றித் தானே ஆட்சி புரிந்திருக்கவல்ல ஆற்றல்கள் மிக்கவனாகஇருந் திருந்தும், அங்ஙனம் செய்யாமல், கண்டரா தித்தர், செம்பியன்மாதேவியார் ஆகிய இருவர் திறத்தும் தான் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் காரணமாக, அவர்களின் புதல் வனும் தனது சிறிய தந்தையும் ஆகிய உத்தம சோழன் ஆட்சிக்குரியவனாய் முடிசூடிக் கொள் ளும்படி இராசராசன் அன்புடன் விட்டுக் கொடுத்தான், ''தன் சிறிய தந்தை, ஆகிய உத்தம சோழனுக்கு (கி.பி. 970-985)நாட்டை ஆட்சி புரிவதில் விருப்பம் உள்ள வரையில் தான் மனத்தால்கூட அரசாட்சியை விரும்புவ தில்லை'' என்று இராசராசன் தன் குடிகளிடம் கூறினான் என்பது, திருவாலங்காட்டுச் செப் பேடுகளால் அறியக் கிடக்கின்றது.

இங்ஙனம் தனது உரிமையினைத் தியாக வுணர்வுடன் விட்டுக்கொடுத்து, பதினைந்து ஆண்டுகள் (கி.பி. 970-985) அளவும் அமைதி யாகக் காத்திருந்த இராசராசனின் பெருந் தகைமைப் பண்புநலன், உலக வரலாற்றிலேயே ஒப்புயர்வற்றதாகும். அரச பதவியைக் கைப் பற்றுவதற்காக, எத்தனை எத்தனை நினைக் கொணாக் கொடிய அட்டூழியங்களெல்லாம் செய்யப்பட்டுள்ளன என்பதனை, உலக வர

லாற்றேடுகளில் காணுங்கால், இராசராசனின் இணையற்ற பெருமாட்சிமை இனிது புலனாகும்.*

சிவபாத சேகரன் :

பற்பல போர்களில் வெற்றிமேல் வெற்றி பெற்று, நாட்டின் பரப்பளவை நனிபெருக்கி, இணையற்ற தனிப் பேரரசனாக விளங்கியிருந் தனன் ஆயினும், இராசராசன் எத்தகைய அகந்தையும் செருக்கும் அடையாமல் ''வாழ் வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனும் தன்மையோடு சைவ மாம் சமயம் காரும் ஊழ்'' பெற்று, உயர்ந்து சிறந்து ஒளிர்ந்திருந்தமை, நினைத்தொறும் வியக்கத் தகுவதாகும், ''அதிகாரம் கெடுக்கின் றது; எல்லையற்ற அதிகாரம் எல்லையின்றிக் கெடுக்கின்றது. பெரிய மனிதர்கள் அனை வரும்பெரும்பாலும் கெட்டவர்களாகவே இருக் கின்றார்கள்'' (**Power Corrupts; Absolute Power Corrupts, Absolutely. Great men are always bad.**) என அறிஞர் ஒருவர் கூறி யுள்ளது அனைவரும் அறிந்ததே. ''செல்வம் எங்கே குவிகின்றதோ அங்கே மனிதர்கள் சீரழி கின்றார்கள்'' (**Where wealth accumulates there men decay**) என ஆலிவர் கோல்ட்ஸ்மித் பாடி யிருக்கின்றார்! ''அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும், பெறலரும் திருப்பெற்ற பின் சிந்தனை பிறிதாம்''எனக் கம்பரும் குறிப் பிடுவர்.

உலக வரலாற்று நூல்களில் உரோம நாட்டு நீரோ (**Nero**), ஃபிரெஞ்சு நாட்டுப் பதினாலாம் லூயி (**Louis-xiv**), மங்கோலியத்துச் செஞ்சிஸ்கான் (**Chenchiskhan**), துருக்கியத்துத் தாமர்லேன் (**Tamerlane**), முதலிய பற்பல தீயகொடுங்கோல் அரசர்களைப் பற்றிப் படிக் கின்றோம். அத்தகைய கொடுங்கோலர்களைப் போல் அல்லாமல், அறநெறி சிறிதும் பிறழாது இராராசன் அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தான், அறிவு திரு ஆற்றல் ஆகியவைகளிற் சிறந்து விளங்கியதுடன், நீதி நேர்மை பக்தி ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் இராசராசன் இணையற்றுத் திகழ்ந்திருந்தான். வெற்றிமேல் வெற்றி பெற்ற போதும், இறு மாப்புக் கொள்ளாமல், இவைகளெல்லாம் இறைவன் திருவருளால் பெற்றவையே என்று தெளிவுற எண்ணிச் சிந்தைநைந்து உருகினான். இவ்வுண்மை அவனது கல்வெட்டுக்களில் ''சத்தியாசிரயனை எறிந்து போந்து ஸ்ரீபாத புஷ்பமாக அட்டின பொற்பூ'' எனக் குறிப் பிட்டிருத்தல் கொண்டு செவ்விதின் தெளியப் படும். 'பெருக்கத்து வேண்டும் பணிதல்'எனத் திருவள்ளுவர் கூறியபடி,மேன்மேற் பலவெற்றி களைப் பெறுந்தோறும், இராசராசன் இறைவ னின் திருவருளையே நினைந்து வியந்து பணிந்து நின்றான்.

ஐப்பசிச் சதயமாகிய தன்னுடைய பிறந்த நாளில், பிறவியின் பயனைத் தான் பெறு வதற்காக, இறைவனுக்கு வழிபாடுகள் நிகழ்த் தத் தஞ்சை திருவையாறு முட்டம் திருவெண் காடு முதலிய இடங்களில் சிறப்பான ஏற்பாடு களைச் செய்தான். தில்லைக்கூத்துப் பெரு மானிடத்திலும், திருவாரூர் வீதி விடங்கப் பெருமானிடத்திலும் அவனுக்கு எல்லையில் லாத ஈடுபாடும் பக்தியும் இருந்தன. இராச ராசனது பக்தி யுணர்வு, சமயநெறி ஆர்வம் ஆகியவற்றின் விளைவாகவே, தஞ்சைப்பெரிய கோயில் எழுவதாயிற்று. 'சிவபாதசேகரன்' என்னும் சிறந்த பெயர், இராசராசனுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

இறையன்பின் திறம்:

இராசராசன் இப்பெரிய கோயிலுக்காக, மொத்தம் 41559 கழஞ்சு எடையுள்ள பொற் கலங்களை அளித்தான்; 10200 காசுகள் விலை மதிப்புள்ள அணிகலன்களை வழங்கினான்; 50650 கழஞ்சு நிறையுள்ள வெள்ளிக் கலன் களைக் கொடுத்தான். ஆண்டுதோறும் ஒரு லட்சத்துப் பதினாறாயிரம் (116000) கலம் நெல்லும், ஆயிரத்துநூறு காசுகளும் வருவாய் உள்ள கிராமங்கள் பலவற்றைத் தானமாக விடுத்தான். இவைகளினாலெல்லாம் அவனது சிறந்துயர்ந்த தெய்வபக்தியின் திறனை நாம் உணரலாம்.

இப்பெரிய கோயிலின் வளர்ச்சிக்காக அவன் மிகவும் நுனித்துணர்ந்து நினைத்துச் செய்துள்ள ஏற்பாடுகள் யாவும் மிகமிக வியக் கத்தக்கவை. இறைவனுக்கு ஆட்டும் திரு மஞ்சன நீரில் இடுவதற்காகப் பெருஞ்சண்பக மொட்டு, ஏல அரிசி, இலாமிச்சம் ஆகியவற் றின் அளவையெல்லாம் வரையறுத்துக் குறிப் பிட்டு, அவன் ஏற்பாடுகள் செய்திருந்தான்.

---

*''Despot succeeded despot, each rivalling each in cruelty. Claudius had his wife, Messalina, murdered; Nero, his mother, Agrippana; Commodus his Sister and his wife; Caraculla, his brother.

Such gentle attentions appear to have been the rule in the Imperial Families. To make up for this out of 50 emperors who occupied the throne in the first 3 centuries of the regime 37 died violent deaths - were poisoned, beheaded, stabbed, had their throats cut or Committed suicide. They were the victims of their relations, their wives, their mistresses, their soldiers or themselves. The Roman principate was to offer an inexhaustible supply of Subjects for the tragic writers of future Centuries.''

—Rene Sedillot,
The History of the World, p. 75

இறைவனின் அமுதுபடிக்காகப் போனகப் பழவரிசி பூரிநெல் பருப்பு மிளகு நெய் கடுகு சீரகம் சர்க்கரை புளி தயிர் உப்பு வெற்றிலை பாக்கு சீதாரி விறகு முதலிய பலவற்றையும் குறைவற வழங்குதற்கு ஏற்பாடுகள் புரிந்திருந் தான். நிசதம் கற்பூரம் குறைந்தது மூன்றுமா பயன்படுத்தப்படல் வேண்டுமென்று விதித் தான். பிள்ளையாருக்கு நிசதம் வாழைப்பழம் குறைந்தது நூற்று ஐம்பது (150) படைத்தல் வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளான். இவற்றினாலெல்லாம் இராசராசனுடைய இறையன்பின்திறம் எத்தகையது என்பது நமக்கு இனிது விளங்கும்.

பேருள்ளம் :

இராசராசன் பெருமனம் படைத்தவன்; அவனது உள்ளம் பரந்து விரிந்த பெருநோக் குடையது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பது அவனுக்கு இயல்பாகவே அமைந் திருந்தது. அவன் "சிறியன சிந்திக்கத் தெரியா தவன்". அதனாலேயே அவன் பெரியகோயில், பெரிய விமானம், பெரிய பிராகாரம், பெரிய லிங்கம், பெரிய நந்தி என எல்லாவற்றையுமே பெரிய அளவில் அமைத்துப் பெருமகிழ்ச்சியுற் றான். இவற்றையெல்லாம் நோக்கும்போது பரந்துவிரிந்த அவனது பெரிய உள்ளத்தின் பெற்றியினை நினைந்து நினைந்து வியக்கின் றோம். ஏறத்தாழ 1000 ஆண்டுகளாக எத் துணையோ கோடிக்கணக்கான மக்கள் இப் பெரிய கோயிலைக் கண்டு வியந்து, இதனை எடுப்பித்தருளிய இராசராசனின் பேருள்ளத் தினைப் புகழ்ந்து பாராட்டிச் சென்றிருப்பர். இதனை நினைக்குங்கால், நம்முடைய உள்ளக் கண்ணுக்கு ஒரு கற்பனைக் காட்சி மின்னலிட்டுத் தோன்றுகின்றது.

கற்பனைக் காட்சி:

இக்கோயிலை நாம் கண்டு வியப்பது போலவே, சிவநெறிப் பெருஞ்சான்றோராகிய சேக்கிழார் பெருமானும் வந்து கண்டு பார்த்து வியந்து மகிழ்ந்திருப்பார். இராசராசன் கி.பி. 985 முதல் 1014 வரை அரசாண்டான். சேக் கிழார் பெருமான், கி.பி. 1112 முதல் 1144 வரையில் அரசு செலுத்திய இரண்டாம்குலோத் துங்கனின் தலைமையமைச்சராத விளங்கியிருந் தார் என்பது வரலாறு. ஆதலின் அவர் இக் கோயிலை வந்து கண்டு வியந்திருப்பார் என்ப தில் ஐயமில்லை. நாம் சேக்கிழார் பெருந் தகையைக் கண்டு மகிழும் வாய்ப்பைப் பெற்றி லோம். ஆயினும், அவர்கண்டு மகிழ்ந்த இக்கோயிலையும் விமானத்தையும் கண்டு மகிழ் கின்றோம் என்று எண்ணும்போது, நம்உள்ளம் இறும்பூது எய்துகின்றது.

கவிஞர்கள் தாம் காணும் காட்சிகளையும், தம் வாழ்வில் அமையும் நிகழ்ச்சிகளையும், எங் ஙனமேனும் தம் நூல்களிற் குறித்து வைப்பர் என்பது அனைவரும் அறிந்ததே. அம்முறையில் எண்ணும்போது, இத்தஞ்சை இராராசேச் சுரத்தைக் கண்டு சேக்கிழார் எய்திய வியப் புணர்ச்சிகள், பெரியபுராணத்தில் எங்கேனும், அமைக்கப்பெற்றிருத்தல் கூடுமோ என்று, நம் உள்ளத்தில் ஒரு வகை ஆர்வ உணர்வு எழு கின்றது. ஒரு சில பெரிய புராணப் பாடல்கள் இப்பொழுது நம் உணர்வுச் செவிகளில் முற் போந்து ஒலிக்கின்றன.

சேக்கிழார்:

இப்பெரிய கோயிலைக் கண்டு, இதனை அமைத்த இராசராசனின் பேருள்ளத்தினை எண்ணி வியந்த சேக்கிழார், அவ்வியப்புணர் வினைப் பெரிய புராணத்தில் ஓரிடத்தில் சிறப் புற இணைத்து இயைத்துக் குறிப்பிடுகின்றார். கயிலாய மலையைப் பற்றிப் பெரிய புராணத் தின் தொடக்கத்தில் பாடவேண்டிய இன்றிய மையாமையும், இயைபும் அவருக்கு நேர்ந்தன. அந்நிலையில் அவர் கயிலாய மலையை யும், தட்சிணமேரு என்னும் இப்பெரிய கோயிலை அமைத்த இராசராசனின் பேருள் ளத்தினையும் இணைத்து எண்ணி, இரண்டிற் கும் இடையே பல பொருத்தங்களும் ஒப்புமை களும் காண்கின்றார்.

கயிலாயமலை அளப்பரும் பெருமைஉடை யது. மெய்ஒளி தழைப்பது, மிகவும் தூய்மை வாய்ந்தது. ஓங்கி உயர்ந்து நிற்பது. சிவ பெருமான் எழுந்தருளியிருப்பது. இவ்ஐந்து வகை இயல்புகளும் இராசராசனின் திருவுள் ளத்திலும் இயல்பாக அமைந்துள்ளன. அவனது திருவுள்ளம் அளப்பரும் பெருமை உடையது. சத்தியம் ஞானம் முதலிய உயர்ந்த பண்புகள் ஒளிமிக்குத் திகழ்வது; மிகப் பெரிதும் தூய்மை வாய்ந்தது; உயர்ந்த நோக்கங்களும் குறிக் கோள்களும் உடையது. எப்பொழுதும் மற வாது நினைத்துப் போற்றுதலால் இறைவன் எழுந்தருளி இருப்பது, இவ்வாற்றால் திருக்கயி லாய மலையும் சிவபாதசேகரனாகிய இராச ராசனின் திருவுள்ளமும் ஒத்த தன்மை உடை யன என்பதனைச் சேக்கிழார் பெருமான்,

''கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி'
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்,
அளப்பரும் பெருமையி னாலும்,
மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்,
வென்றிவெண் குடைஅந பாயன்-
செய்யகோல் அபயன்-திருமனத் தோங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு"!;

எனவரும் பெரியபுராணப் பாடலில் இனிது இயைத்துப்பாடியிருக்கும், திறம் அறிஞர்களின் உள்ளங்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும்.

ஆட்சிக்கால மாட்சி:

இராசராசன், இப்பெரிய கோயிலை எழுப்புவித்ததோடு மட்டுமல்லாமல், இங்கே பற்பல விழாக்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்தான். அவனுடைய காலத்தில் ஓர் ஆண்டில் மொத்தம் 34 பெரிய விழாக்கள் நடைபெற்றன என்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது. மாதந்தோறும் நிகழும் சதயத் திருவிழாக்கள் 12. மாத சங்கராந்தி விழாக்கள் 12. வைகாசி உற்சவ விழாக்கள் 9. கார்த்திகை விழா 1. ஆக ஓராண்டில் 34 விழாக்கள் நிகழ இராசராசன் ஏற்பாடுகள் செய்திருந்தான். இவ்வாறே தனது ஆட்சிப் பரப்பிற்கு உட்பட்ட நாடு முழுவதும் உள்ள கோயில்கள் அனைத்திலும், பூசையும் விழாவும் பொற்புற நடைபெறச் செய்தான். தனது சிறிய தந்தையாகிய உத்தம சோழனின் புதல்வன், மதுராந்தகன் கண்டராதித்த சோழன் என்பவனைக்கொண்டு, தனது ஆட்சியிற் கோயிற் காரியங்களும், பிற அறநிலையங்களும் நன்கு நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்கச் செய்தான். திருநெறிய தமிழிசையும், தெய்விக நடனமும், சிற்பம் ஓவியம் முதலிய கலைகளும் யாண்டும் செழித்தோங்கப் புரிந்தான். இராசராசனால் கோயில்களிலெல்லாம் பூசைகள் நீடினிது நிகழ்ந்தன; ஏழிசைப் பாடல் ஆடல்கள் எழிலுற மலிந்தன; அருங்கலைகள் பலவும் ஆதரித்துப் போற்றப் பெற்றன; தமிழ்நாடே, ஒரு பெரும் புத்துயிர்ப் புணர்ச்சியும் மறுமலர்ச்சி வளமும் பெற்று நின்றது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கின. கருவூர்த் தேவர் போன்ற சிவநெறிச் சான்றோர்களும், சிவனடியார்களும் போற்றி வழிபடப் பெற்றனர்.

''மங்கையைப் பாக மாக
வைத்தவர் மன்னும் கோயில்
எங்கணும் பூசை நீடி,
ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்!
தங்கள்நா யகருக்கு அன்பர்
தாளலாற் சார்புஒன் றில்லார்''

எனவரும் பெரியபுராணப் பாடல், ஒருவகையில் இராசராசனின் ஆட்சிக்காலச் சூழ்நிலையின் மாட்சிமையினையே, குறிப்பின் நெறிப்படப் புலப்படுத்துகின்றது எனலாம்.

முடிவுரை :

நமது தமிழகத்தில் உள்ளஎண்ணற்ற பல கோயில்களுள், ஒப்புயர்வற்ற கலைநலத்தினாலும், கட்டிட அமைப்புத் திறனாலும், வரலாற்றுப் புகழினாலும், மிகவும் தலைசிறந்தோங்குவது தஞ்சைப் பெரிய கோயில்! 'உலகத்திலேயே கோயில்கள் அமைக்கும் திறனில் ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்பவர்கள் தமிழர்களே யாவர்' என அயல்நாட்டு அறிஞர்களும் அக மகிழ்ந்து போற்றிப் பாராட்டும் நிலையில், இப்பெருவுடையார் கோயிலை எடுப்பித்த இராசராச சோழனின் அருமை பெருமைகள் எல்லையற்றன. தமிழகப் பெருவேந்தனாகிய அவனது சிறப்புக்களை நினைத்துணர்ந்து, தமிழராகிய நாம் அனைவரும், பெருமிதம் எய்தி இன்புற்று மகிழ்வதுடன், நம் தமிழ் நாட்டிற்கு அப்பேரரசன் ஆற்றியுள்ள அரும் பெருந்தொண்டுகளுக்காகத் தமிழ்மக்களாகிய நாம் அனைவரும், என்றென்றும் நன்றி செலுத்திப் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். வாழ்க இராசராசன் புகழ்! வளர்க சதயநாள் விழாச் சிறப்பு!

எங்காயி னும்காண இயலாத
எழில்நலஞ்சேர்ந் திணையுந் றோங்கி,
இங்காரும் வியந்துவக்கும் இனியதஞ்சைப்
பெருவுடையார் கோயில், என்றும்
மங்காத வகைஅமைத்த இராசராச
சோழன்விழா, மாண்பிற் கண்ட
நங்காதல் தமிழரசின் நல்லதமிழ்
நலங்களெலாம் நன்றே வாழ்க!

—ந. ரா. முருகவேள்

இறைவா! எங்கள்உயிர் எம்.ஜி.ஆர்., விரைவில் நலம்அடையச் செய்க!

உலகமெலாம் படைத்துக்காத் தருள்புரியும்.
இறைவா! நீ, 'ஒப்பில் லாஎம்
தலைவர்! 'தமிழக முதல்வர்'! தகைசால் 'பொன்
மனச்செம்மல்'! எளியோர் தங்கள்
நிலைசிறக்கப் பெரிதுழைப்போர்! 'புரட்சிநெறிப்
பெருந்தலைவர்'! நிகரில் வள்ளல்!
வலவர்! எங்கள் உயிர்! எம் ஜி. ஆர்! விரைவில்நலம்
அடைந்து, எமைவாழ் விக்கச் செய்க!

—ந.ரா. முருகவேள்

சைவாகமம்

திரு. மு. அருணாசலம்

ஞானபாதம்

சைவ பாதம் நாலுபாதம் என்று எடுத்துக் கொண்டவிடத்து, ஆகமங்கள் இந்நாலினுள் முதலாவதாக எடுத்துக் கொண்டு வித்தியா பாதம் என்ற பெயரில் ஞானபாதமாகும். ஆகம சாத்திரத்திற் கண்ட மெய்ப்பொருள் அல்லது தத்துவ நிலையை இப்பகுதி கூறுவது. ஆகமாந்தத்தின் தத்துவப்பொருளே இப்பகுதி. இதன் தோற்றம், தர்க்கரீதியான விளக்கம், இம்மார்க்கத்தின் நோக்கம் அல்லது லட்சியம் என்பவற்றை இது கூறும். ஆகமங்கள் வேதத்துக்கு மாறுதலில்லை. வேதத்தை ஏற்று; அதிற் சொல்லாத மெய்ப்பொருளையும் உணர்த்தி, மேல் கட்டிடத்தை எழுப்புவதே ஆகமம். ஆகம மெய்ப்பொருள் துணிபுக்கு வேதாந்தம் அதாவது உபநிடதமே தோற்றுவாய் என்றால் தவறில்லை. இங்கு பரம்பொருள் ஒன்றே. அப்பொருள் இங்குச் சிவம் என்று சொல்லப்பெறும். அதுவே எல்லாம்; அன்றி ஒன்றில்லை.

வேதாந்தத்தில் பிரதானம் ஆன்மாவும், மனமும். ஆனால் ஆகமமானது ஆய்வுக்குரிய பொருளாக முழுமனிதனையே கொள்கிறது. இதற்குக் காரணம், வேதாந்தத்தில் இல்லாதது ஆகமத்தில் மட்டுமுள்ள தெய்வக் கொள்கை, வேதாந்தம் பொருள் என்று மட்டுமே கொள்கிறது. ஆகமம் அதை வழிபடுபொருள் எனக் கொள்கிறது. இதுவே பிற எல்லா வேற்றுமைக்கும் அடிப்படை. அதுவே சைவத்துக்கும் வைணவத்துக்குமுள்ள ஒற்றுமை. அதாவது, பரம்பொருள் இங்கு அறிவுக்கு அல்லது ஞானத்துக்கு மட்டும் விஷயமல்ல. அது இதயத்துக்கும் உணர்வுக்கும் விஷயமாகும். ஆகவே ஆகம ஆய்வு மனிதனுடைய இச்சை ஞானம் இவற்றுக்கு வெளிப்பாடாகிய ஞானம் ஆகிய மூன்றையும் தழுவுகிறது. இதுவே ஆகமத்தின் ஞானபாதப் பொருள்.

ஆகமங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்துகிறது. இதையொட்டியே ஆகமத்தின் பொருளடக்கமும் வித்தியாசப்படுகிறது. பதி-அதாவது கடவுள் இலக்கணம், பசு உயிர் இலக்கணம், பாசம் - தளையின் தன்மை இவைகளே ஆகமம் கூறும் பொருள். இவற்றுக்குள்ள பரஸ்பரத் தொடர்பு, சாதனம், பாசத்தளையறுத்து, பதியோடு ஒன்று கூடுவதற்கு உயிருக்குள்ள வழிகள் இவற்றை ஆகமம் கூறுகிறது. சில ஆகமங்கள் பாசத்தையே விரிவாய்ப் பேசுகின்றன. ஆன்ம தத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்ற தத்துவத் தொகுதிகளைப் பற்றியும், பொதுவாகத் தத்துவங்களைப் பற்றி விரிவாகவும் பேசுகின்றன. மதங்க பாரமேசுவரம் தன் பல படலங்களிலும் தத்துவ விளக்கமே முக்கியமாய்க் கொண்டிருக்கிறது. மிருகேந்திரமாகிய உபாகமம் தன் வித்தியாபாதத்தில்; நடராச வடிவத்தையும் அதுஉணர்த்தும் பொருளாகிய பஞ்ச கிருத்தியத்தையும் மட்டுமே உரைக்கிறது பிற ஆகமங்கள் இத்தன்மை உடையனவே.

கிரியாபாதம்

இந்தப் பகுதியானது தனிச் சைவருடைய பூசைநெறி முறைகளைக் கருதாமல் சமூகத் தொடர்பான பூசைநெறி முறைகளையே கருதுகிறது. கோயிலைச் சூழ்ந்து வாழும் சைவ மக்களின் சமயவாழ்வை இது குறிக்கோளாகக் கொள்ளுகிறது. கோயில் என்பது, இந்தச் சைவமக்களிடத்து ஆகமம் காட்டும் பரிசின் புறச் சின்னமேயாகும். தனிமனிதன் சமூகத்தைப் பாதிக்கிறான். சமூகமும் தனிமனிதன் சமய வாழ்வைப் பாதிக்கிறது. ஒருவருடைய கருத்துக்கள் லட்சியங்கள் செயல் யாவும் மக்கள் சமூகம் முழுவதையுமே பாதிக்கிறது. சைவ சமூகமானது நாட்டில் தனியொரு அங்கமாக முழுப்பிணைப்புடன் விளங்க வேண்டுமானால், இந்தக் குறிக்கோளிலும்

செயல்பாட்டிலும் இரண்டும் ஒன்றிப்போடு இயங்குவது இன்றியமையாதது. கருத்துக் களோ தத்துவங்களோ மட்டும் மக்கள் மனத்தை முழுமையும் கவர்ந்து விடுவதில்லை. சடங்கு கள், பூசை, விழாக்கள் போன்ற உருவான செயற்பாடுதான் மக்களைக் கவருகின்றது. இச் செயற்பாடுகளில் மக்களுக்கும் பூரண மான நேர்முக ஈடுபாடு உண்டாகிறது. சமூக மானது பிளவுபட்டுச் சிதறுண்டு போகாமல் கட்டிப் பிடிக்கின்ற ஒரே பெருஞ்சத்தி விழாக் களும் பூசைக் காலங்களான கூட்டு வழிபாட்டு நிகழ்ச்சிகளும் ஆகும். இவற்றிற்கு ஆகமக் கிரியா பாதமானது ஒரு நெறி வகுத்துத் தரு கிறது. இந்த நெறி வெறும் சட்டமன்று, இது உணர்வையும் ஊட்டவல்லது, இயல்பாகவே அழகுணர்ச்சியையும் பேணி வளர்த்து இந்தக் குறிகளும் அடையாளமும் என்று சொல்வதெல் லாம், மனிதனோடு முழுமையாய் ஒன்றிவிடு கின்றன. ஒன்றி அந்தராத்மாவாக விளங்கும் சர்வேசுவரனை அவன் உணர்ந்து கொள்ள உதவுகின்றன. பெருந்திரளான மக்கள் ஒன்று சேர்ந்து ஓர் ஆன்மார்த்த நெறியில் கருத் தைச் செலுத்தும்போது, அது பெருந் தியான மாகிறது. ஒவ்வொருவரும் அதில் ஒருநிறை வும் வளர்ச்சியும் ஆன்மபலமும் ஆக்கமும் பெறுகிறார்கள். உரிய காலத்தில் இறையரு ளால் அனுபூதி நிலையடைவதிலும் வியப் பில்லை.

இந்து சமய வரலாற்றில் பிற சமயங்கள் பண்பாடுகள் நடைமுறைகளில் பல வந்து மோதின. அரசியல் பொருளாதாரச் சீர் குலைவுகள் எத்தனையோ ஏற்பட்டன. இத் தனைக்குள்ளும் எண்ணற்ற நூற்றாண்டுகளாகச் சமூகம் சீர்குலையாமல் கட்டுக்கோப்புடன் இருந்து வந்திருப்பதற்கு ஆதாரம் இந்தச் செயற்பாடு. கோயிலை மையமாகக்கொண்ட சமூக வாழ்க்கை, ஆகமம் கூறுகின்ற கிரியா பாதம் என்பது கோயில் வழிபாடு, வேதங்களில் சொல்லப்பட்ட யக்ஞுங்களுக்கு ஒப்பான தென்று கருதலாம்.

கோயில்களிலும் யாகசாலைகள் உள்ளன. இவை தினமும் செயல்படாவிட்டாலும், நைமித்திக பூசைக் காலங்களில் - விழா, விசேட அபிடேகம் முதலான காலங்களில் யாகசாலைப் பூசை நடத்தியே உற்சவம் தொடங்குகிறது. பிரதிட்டை-கும்பாபிஷேகம் என்பன சிறப்பாகச் சொல்லத்தக்கவை.

ஒன்று நினைவில் கொள்ள வேண்டும். நாட்டில் பல பாகங்களிலும் இன்று நடை பெறும் ஹோமங்கள் சதசண்டி ஹோமம் துர்க்காஹோமம் கணபதிஹோமம் முதலியவை யாவும் தந்திரநெறி பற்றியவை ஆகம நெறியல்ல. ஆகமங்களில் அவை சொல்லப்பட வில்லை.

கோயில் பரார்த்த பூசை சம்பந்தப்பட்ட வரையில், இந்தக் கிரியைகள் மூன்று பகுதி களாக உள்ளன. அவையாவன: 1. கர்ஷணம் முதல் பிரதிஷ்டாந்தம் அதாவது கோயில் நிர் மாணத்துக்காகப் பூமியை உழுவதிலிருந்து தெய்வ வடிவங்களைப் பிரதிட்டை செய்வது வரையில். 2. பிரதிட்டை முதல் உற்சவாந்தம் அதாவது மூர்த்தியைப் பிரதிட்டை செய்வ திலிருந்து நித்திய நைமித்திக உற்சவங்கள் யாவும். 3. பிராயச்சித்தக் கிரியைகள்-விடு பட்ட அல்லது பிழைபட்ட கிரியைகளுக்குப்பரி காரமாகச் செய்யப்படும் கிரியைகள்.

இந்த முன்னுரையோடு இனிக் கிரியா பாதத்தைப் பார்ப்போம். எல்லா ஆகமங்களி லும் கிரியாபாதமே மிக்க விரிவானது. இப் பாதம் பூசை முறையை விரித்துரைக்கிறது. ஆன்மார்த்த பூசையையும் பரார்த்த பூசை யையும். ஆன்மார்த்த பூசையாவது தக்க ஆசிரியரிடத்தில் விசேட தீட்சை பெற்ற ஒருவர் தம் இல்லத்தில், தாம் பெற்ற ஒரு லிங்கத் திருவுருவை முறைப்படி பூசை செய்வது. இந்த உருவை அவரவர் விருப்பம்போல் ஐயாறப்பர் வன்மீகநாதர் காளத்திநாதர் மகாலிங்கம் எனப் பூசை எழுந்தருளிவிக்கும் நோக்கத்தில் பாவித்துக் கொள்வது. இது உடையவர் பூசை எனப்படும். இது பூசை பெற்றவர் ஆயுள் முடியச் செய்தற்குரியது. அவர் நோய்ப்பட் டால், பெட்டியோடு ஒரு மலரிட்டு நிவேதனம் செய்வாவது வேண்டும். தம் இல்லத்தில் செய்வது என்பது, ஒரு தீர்த்தக்கரையில் (ஆறு அல்லது குளம்) கோயில் மடம் போன்ற இடங் களிலும் செய்யலாம். இது சமூக நலன்கருதிய பூசையன்று. தனியொரு மனிதன் தமக்காக வும், தம், நன்மைக்காகவும், தம் குடும்ப நன்மைக்காகவுமே செய்வது. பொதுவாக எந்தச் சிவபூசையும் உலக போகத்தைக் கருதி செய்வதன்று. சிவபோகத்தைக் கருதிச் செய் வது. இறைவனும் உயிரும் இரண்டறக் கலத்த லாகிய அத்துவித முத்தியைக் கருதிச் செய்வது.

பரார்த்தபூசை என்பது எல்லோருக்கும் பொதுவான ஓர் ஆலயத்தில் விதிப்படி பிர திட்டை செய்யப்பட்டுள்ள இலிங்கமூர்த்திக்கு ஆசாரியாபிடேகம் பெற்ற ஒரு சிவாசாரியார் குறித்த காலங்களில், சமூகத்தின் பொதுநன்மை கருதி முறைப்படி செய்கின்ற அபிடேக ஆரா தனையுடன் கூடிய பூசையாகும். இதனையே கிரியாபாதம் மிக விரித்துக் கூறுகிறது. பூசை, மக்கட் சமூகத்தின் நலன் ஆகிய இவற்றுள் ஆகமம் கருதி விதி வகுக்காத பொருள் எதுவும் இல்லை என்றே சொல்லலாம்.

ஒன்று குறிப்பிடத் தக்கது. பரார்த்திக பூசை நித்தியம், நைமித்திகம், காமியம் என்று மூன்று வகை. நித்திய பூகை அன்றாடம் நடைபெறும் காலபூசை. 1, 2, 3, 4, 6 முத

லான காலங்களில், இவை உஷத்காலம், காலை, உச்சி, மாலை, அர்த்தசாம பூசை என்ற பெயர்களால் சொல்லப்பெறும். நைமித்திக பூசை என்பது விசேட நிமித்தம் காரணமாகச் செய்யும் பூசை. உற்சவங்கள், கார்த்திகை, பிரதோஷ பூசை, நவராத்திரி விழாக்கள் முதலியன இவ்வகையைச் சாரும். இவையும்கோயில்களில் சிவாசாரியரால் செய்யப்பெறும். காமிய பூசை என்பது ஒரு பொருளை விரும்பிச் செய்யும் பூசை. கோயில் எல்லோருக்கும் உரிய இடமாதலால் அங்கு ஒரு தனி மனிதனின் விருப்பத்தைத் தெரிவித்து வேண்டுகிற காமிய பூசை செய்யக்கூடாது என்று ஆகமம் விதிக்கிறது. அவ்விதியின்படி பார்த்தால் இன்று நாம் கோயிலில் செய்கிற எத்தனையோ சிறப்புப்பூசைகளும் விழாக்களும் (அறுபதாண்டு நிறைவு முதலியன) கோயிலில் செய்யக்கூடாது. ஆயினும் வளர்ந்தும் மாறியும் வரும் மனித சமூகத்தின் தேவைகளுக்குக் கோயில் இடங்கொடுப்பது, காலமாறுதலின் அடையாளம்.

கிரியாபாதத்தின் தொடக்கத்தில் எல்லா ஆகமங்களும் தந்திராவதாரம் மந்திராவதாரம் என்று இரண்டு சொல்லப்பட்டுள்ளன. தந்திராவதாரம் என்பது, ஆகமங்களின் எண்ணிக்கை, பெயர், வரலாறு, உபதேசக்கிரமம் என்பன கூறுவது. மந்திராவதாரம் என்பது, மந்திரங்கள், அவற்றின் சொரூபம். பீஜமந்திரம் பஞ்சாட்சரத்தின் பல வடிவங்கள் முதலிவற்றை விரித்துச் சொல்லுகின்றன.

கிரியாபாதமே கோயில் கட்டிட அமைப்பு சிற்ப அமைப்பு முதலியவற்றை விரித்துப் பேசுகிறது. இங்கே சொல்லப்பட்டுள்ள கட்டிடச் சிற்பக்கலை, இக்காலத்தில் மனோபாவம் மிக்க எந்தச் சிற்பியும் செய்ய முடியாத கலையம்சங்களைக் கொண்டுள்ளது. கோயில் தேர், நந்தவனம், நகரமைப்பு, நிவேதனம், முதலான வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் விளக்கிச் சொல்கிறது. சுருங்கச் சொன்னால், 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் சமூக வாழ்க்கையிலுள்ள எல்லாத் துறைகளும் இங்கு விளக்கப்பட்டிருக்கக் காணலாம்.

சரியாபாதம்

மெய்ப்பொருளை நாடுகிறவன் சாதிகன். ஞானபாதம் கூறும் மெய்ஞ்ஞானத்தை அவன் தன் அறிவின் மூலம் உணர்வதற்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டியவன். இதற்குப் பல்வேறு கிரியைகளும் துணைபுரிகின்றன. கோயிலில் சென்று வழிபாடாற்றுவதும் விழாக்களைத் தரிசிப்பதும் துணைகளே. இத்துணைகளோடு, இவன் தன் கருவி கரணங்களையும் புறச்சூழலையும் பக்குவப்படுத்திக் கொள்வதும் அவசியம். இவ்வாறு இவன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளுதலும், நடந்து கொள்ளுதலும், ஆசாரத்தோடு ஒழுகுதலும் செயற்படுதலும் சரியை எனப்படும். சரியாபாதத்தில்கடினமானதோ சிக்கலானதோ, நிறைவேற்ற முடியாததோ எதுவுமில்லை.

இது ஒரு வகையாள ஆயத்த முயற்சி. மனம், மொழி மெய் மூன்றையும், உடலையும் தூய்மைப்படுத்துவதற்கான வழி. இவ்வழி இறையனுபவம் பெறுவதற்காக இவனை நடத்திச் செல்வது. சாதகன் என்ற நிலையில் இவன் நடையுடை பாவனையாவும் பிறருடைய கண்ணையும் மனத்தையும் கவருகின்றன. இந்தச் சிறிய அளவில், புறநிலையில், இவன் பிறருக்கு வழிகாட்டுகிறான் என்றோல் தவறில்லை. தனது வாழ்கையாலும், விருப்பு வெறுப்புக்களாலும், இவன் ஒரு முன்மாதிரியாகிறான். இவனுடைய புறஒழுக்க நிலையும் முன்னேற்றமும் வெற்றியும் பிறரை நிச்சயம் பாதிக்கின்றன. கிரியாபாத விதிகள் மிக்க கடுமையானவை என்பது சொல்ல வேண்டியதில்லை. ஆனால் சரியாபாத விதிகள் நெகிழ்ந்து கொடுக்கும். இவ்விதிகள், காலையில் துயில் எழுதல் முதல், தந்தசுத்தி, நீராடுதல், அனுட்டானம், உணவு, வழிபாடுஎன்று எல்லாத் தினசரிக் காரியங்களுக்கும் பொருந்துவன. வாழ்க்கைக்கு ஏற்றபடி இவற்றில் தளர்ச்சியும் மாற்றமும் உண்டு.

அட்டாங்கயோகம் என்பது இயமம் நியமம் முதலான எட்டு அங்கங்களைக் கொண்ட ஒரு படிமுறை. அதனுள் முதல் இரண்டாகிய இயமமும் நியமமும் சரியைப் பகுதிகளே. இயமம் என்பது, பொய் கொலை களவே காமம் பொருள்நசை இவ்வகைஐந்தும் அடக்கியது இயமம். நியமம் என்பது, பெற்றதற் குவத்தல், பிழம்புநனி வெறுத்தல், கற்பன கற்றல், கழிகடுந் தூய்மை, பூசனைப் பெரும் பயன் ஆசாற்களித்தலொடு பயனுடை மரபின் நியமம் ஐந்தே எனவும் பண்டை உரையாசிரியர் கூறுவர்.

சரியாபாதமானது இதுவரை கூறியபடி சாதகனுடைய நித்திய கருமக் கடமைகளை விதிப்பது. மூன்று ஆகமங்களில்தான் சரியாபாதப் பகுதி இன்று கிடைக்கிறது. இவற்றுள் சுப்பிரபேத ஆகமமே இப்பகுதியை விரிவாய்ப் பேசுகிறது. இங்குப் பிறப்பு முதல் நிகழவேண்டிய சுத்திக் கிரியைகள் தீட்சைகள், போன்றன விரித்து விளக்கப்படுகின்றன.

தஞ்சைப் பெரிய கோயில்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பு அச்சோ
அங்ஙனே அழகிதோ, அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் திங்கள்
இலைகுலாம் பதணத்து இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்து இவர்க்கே

—திருவிசைப்பா

முன்னுரை

நமது தமிழகத்தில் உள்ள எண்ணற்ற பல கோயில்களுள், ஒப்புயர்வற்ற கலை நலத்தினாலும், கட்டிட அமைப்புத்திறனாலும், வரலாற்றுப் புகழினாலும் மிகவும் தலைசிறந்தோங்குவது, தஞ்சைப் பெரியகோயில். "உலகத்திலேயே கோயில்கள் கட்டுவதில் ஈடும் எடுப்பும் அற்றுச் சிறந்து திகழ்பவர்கள் தமிழர்கள்! இந்தியாவிலேயே மிகவும் சிறந்ததொரு பெருங்கோயிலாக எழில் மிக்கு விளங்குவது தஞ்சைப் பெரிய கோயிலே ஆகும்" *(1)*, என, அயல்நாட்டறிஞர்களும் இக்கோயிலின் எழில்மிக்க இனிய தோற்றத்தினைக் கண்டு, வியந்து புகழ்ந்து போற்றி மகிழ்ந்தின்புறுகின்றனர். தமிழர்களின் கட்டிடக்கலையின் உச்சநிலைச் சீர்த்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக எழில்மிக்கு விளங்குவது, தஞ்சைப் பெரிய கோயிலே *(2)* எனத் துணிந்து கூறலாம்.

1. "The Tamil races were perhaps the greatest temple builders in the world; the great pagoda at Tanjore is by far the grandest temple in India."

—Encyclopaedia Brittanica

2. "The Tanjore temple is the most beautiful specimen of Tamil architecture, at its best. Temples became centres of religious and social life, and the Tanjore temple set the model to the whole of the chola country"

—K.A.N. Sastri, The Cholas

தஞ்சைமா நகரம்

தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாகத் திகழும் தஞ்சாவூர், சோழப் பேரரசு ஏற்படுவதற்கு முன்னரே, பெரிதும் சிறப்புற்றிருந்தது. இங்கேயுள்ள தஞ்சை மாமணிக் கோயில் பூதத்தாழ்வாராலும் *(2,251)*, திருமங்கை மன்னராலும் *(953, 1090, 1,576)*, மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் விளங்கிய திருநாவுக்கரசர் 'தஞ்சைத் தளிக்குளத்தார்' எனக் குறிப்பிட்டிருப்பதும், இந்நகரத்தின் பழமையைக் குறிக்கும் சான்றாகும்.

தஞ்சை மாநகரம், முத்தரையர் என்னும் குறுநில மன்னர்களின் ஆட்சியின்கீழ்க் கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை இருந்து வந்தது. இதனை முத்தரையர்களிடம் இருந்து கைப்பற்றிச் சோழர்களுக்குரிய தலைநகரமாகச் செய்தவன் 'தொண்ணூற்றாறு விழுப்புண் கொண்ட சோழன்' எனப் போற்றப்பெறும் விசயாலய சோழனே (கி.பி. 846-880) ஆவான். இச்செய்தி, திருவாலங்காட்டுச் செப்பேட்டினாலும், திருக்கோவலூர் வீரசோழபுரத்துக் கல்வெட்டினாலும் புலனாகின்றது. 'பாண்டியகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்' என இந்நகரம் கல்வெட்டுகளிற் குறிப்பிடப் பெறுகின்றது.

சோழப் பேரரசின் ஆட்சியின்கீழ், 10ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரையிலும்; பாண்டியர் ஒய்சளர் ஆகியோரது ஆட்சியின்கீழ் 13ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரையிலும்; தஞ்சை மாநகரம் இருந்து வந்தது. கி.பி. 1535 முதல் 1672 வரையில், விசயநகர அரச மரபினர் இதனை ஆண்டு வந்தனர். கி.பி. 1674 முதல் 1885 வரை மகாராட்டிர மன்னர்கள் இதன்கண் அரசு செலுத்தியிருந்தனர். 1855ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரையில் இஃது ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

தஞ்சையிலுள்ள பெரிய கோயில் என்னும் பிருகதீசுவரர் கோயிலைக் கட்டியவன், முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) என்னும் புகழ்மிக்க பேரரசன் ஆவான், போர்த் திறனும் ஆட்சித்திறனும் மிக்க பெருவீரன் ஆகப் பிறங்கிய இவன் காலத்தில், சோழப் பேரரசு கடல் கடந்த பிற நாடுகளிலும் பரவி மிக்க வலிவும் பொலிவும் பெற்றுச் சிறந்தோங்கியிருந்தது. இராசராசசோழன் சேரனை வென்றான்; பாண்டியனைப் புறங்கண்டான்; சிங்களரை அடக்கினான்; குடகு நாட்டைக்கவர்ந்தான்; கங்கபாடி கல்யாணி வேங்கிநாடு மாலத்தீவு ஆகியவைகளைக் கைப்பற்றினான்; இவனது இயற்பெயர் அருண்மொழி வர்மன் என்பது. முதற்பராந்தக சோழனைப் போலத் தில்லைக் கூத்தப்பிரானின் கோயிலுக்கு நிபந்தங்கள் அளித்து வழிபட்டமையின், தில்லை வாழ் அந்தணர் இவனது ஆட்சியின் 19ஆவது ஆண்டில் இராசராசன், சிவபாத சேகரன் என்னும் பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்தனர், பாண்டியர்களையும் சேரர்களையும் அடக்கி வெற்றிகொண்டதனால், இவனுக்குப் பாண்டியகுல அசனி, கேரள அந்தகன் என்னும் சிறப்புப் பெயர்களும் வழங்கும். மும்முடிச் சோழன், ஜெயங்கொண்டசோழன் என்பனவும் இராசராசனுக்கு உரிய சிறப்புப் பெயர்கள் ஆகும்.

இராசராசன் உறவினர்

இவனது தந்தையார் 'பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்' எனப்படும் இரண்டாம் பராந்தக (சுந்தர) சோழன் ஆவார். தாயார்; வானவன் மாதேவி. பெரிய பாட்டனார், சிவஞான கண்டராதித்தர், பெரிய பாட்டியார், செம்பியன்மாதேவி. தமக்கையார், குந்தவைப்பிராட்டி, மைத்துனர் வல்லவரையர் வந்தியத்தேவர், மனைவியர், உலக மாதேவி, திரை லோக்கியமாதேவி, அபிமான வல்லி, சோழமாதேவி, பஞ்சவன் மாதேவி, இலாடமாதேவி, பிருதிவி மாதேவி என்போர். புதல்வன் 'கங்கைகொண்ட சோழன்' என வழங்கும் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044), புதல்வியர், மாதேவடிகள், அருமொழி நங்கை (இரண்டாம் குந்தவை) என்போர்.

இராசராசனது ஆட்சிக்கு உறுதுணையாக இருந்து பணிபுரிந்த உயர் அலுவலர்கள் பலர். அவர்களுள் இராசராசமூவேந்தவேளான், பராந்தகப் பல்லவரையன், மும்முடிச் சோழப் பிரமாதிராயன், கேரளாந்தக விழுப்பரையன், தென்னவன் மூவேந்தவேளான், உத்தம சோழப் பல்லவராயன் என்போர் குறிப்பிடத் தக்க சிறப்புடையவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஒவ்வொரு வகையில் திருப்பணிசெய்துள்ளனர்.

தஞ்சைப் பெரிய கோயில்

தஞ்சைப் பெரியகோயிலை இராசராச சோழன் தனது 19ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1003), கட்டத் தொடங்கினான். ஆறு ஆண்டுகள் இக்கோயிலின் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. அவனது 25ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1009) இக்கோயில் முழுவதும் செம்மையுறக் கட்டி முடிக்கப்பெற்றது.

> ''பாண்டிய குலாசனி வளநாட்டுத்
> தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்,
> நாம் எடுப்பித்த திருக்கற்றளி
> ஸ்ரீராசராசேச்சுவரம்''

எனவரும் கல்வெட்டுப் பகுதியினால் இப்பெரிய கோயிலின் பெயர் இராசராசேச்சரம் என்பது, இனிது உணரப்பெறுகின்றது. கோயிலின் முன்புறத்தை ஒரு பெரும் அகழி சூழ்ந்துள்ளது. இக்கோயில் மூன்று திருவாயில்களையுடையது. முதற் கோபுரவாயில் 'கேரளாந்தகன் திருவாயில்' எனவும்; இரண்டாவதுகோபுர வாயில் 'இராசராசன் திருவாயில்' எனவும்; மூன்றாவது 'திருவணுக்கன் திருவாயில்' எனவும் வழங்கப்பெறும். திருவணுக்கன் திருவாயிலின் இருபுறமும் அமைந்துள்ள படிகளே, பண்டைக் காலத்திற் கருவறையின் உட்செல்லுதற்குரிய வழியாக இருந்தன. கோயில் எடுப்பித்த போதே அமைந்த படிகள் இவை, ஆதலின் இராசராச சோழன் இறைவனை வழிபடச் செல்லும் போதெல்லாம், இப்படிகளின்மீது ஏறியே உட்சென்றிருப்பான். அவனது திருவடிகள் பதியப்பெற்ற புனிதமுடைய படிகள் இவை. 'விக்கிரமன் திருவாயில்' என்னும் வாயில் ஒன்றும் இங்கு உள்ளது.

திருவணுக்கன் திருவாயிலுக்கு எதிரே, இப்போது மகாமண்டபத்தின் முன்பாக அமைந்துள்ள நேர்வழிப் படிகள், அண்மைக் காலத்தில் சரபோஜி (கி.பி. 1797-1832) அரசரால் அமைக்கப்பெற்றன. இக்கோயிலின் அர்த்த மண்டபம் ஆகியவைகளையும். கி.பி. 1801ஆம் ஆண்டில் சரபோஜி மகாராசரே கட்டுவித்தார்.

இக்கோயில் கருப்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்னும் ஆறுபகுதிகளையுடையது. கோயிலின் உள்ளேயுள்ள ஏழு வாயில்களிலும், 18 அடி உயரமும் 8 அடி அகலமும் உள்ள ஏழு துவார பாலகர்கள் அழகுறச் செய்து நிறுத்தப்பட்டுள்ளனர். கோயிலின் வெளிப்புற நீட்டளவு 793 அடி. குறுக்களவு 397 அடி. செங்கல் பரப்பப் பெற்றுள்ள உட்புறப் பரப்பு 500 அடி நீளமும், 250 அடி அகலமும் உடையது.

கோயிலின் விமானத்திற்கு எதிரில் அமைந்துள்ள நந்தியின் திருவுருவம் 12 அடி உயரமும், 19½ அடி நீளமும், 8¼ அடி அகலமும் உடையது. இஃது ஒரே கல்லிற் செதுக்கப் பெற்றது. மிகப் பெரியது. இந்தியாவிலுள்ள மிகப் பெரிய நந்திகளுள் முதலாவது - அநந்தப்பூர் மாவட்டம் இந்துப்பூர் வட்டம், லேபாட்சி என்னும் இடத்தில் விளங்கும் வீரபத்திர சுவாமியின் கோயிலில் இருப்பதாகும். அதனை அடுத்த இரண்டாவது பெரிய நந்தியாகத் திகழ்வது, இங்குள்ளதேயாகும். இதனைப் பாதுகாப்பதற்காக அமைந்துள்ள மண்டபம், பிற்காலத்தில் இருந்த தஞ்சை நாயக்க அரசர்கள் கட்டியது.

இக்கோயிலின் அடிநிலை முதல் தூபி வரை, யாவும் கருங்கற்களாலேயே முழுவதும் இயன்றதாகும். கோயிலின் கருவறைக்குமேலேயுள்ள அழகிய விமானம் சதுர வடிவமானது. 13 நிலைகள் கொண்டது. உச்சியில் சதுர வடிவமுள்ள பிரமரந்திரத் தளக்கல்லின்மேல் கலசமும், அதன் மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் நிறுவப்பெற்றுள்ளன. இச்சிறந்த விமானம் தட்சிணமேரு என வழங்கும். இது 216 அடி உயரமுள்ளது. இதன் மேல் உள்ள செப்புக்குடம் 3083 பலம் நிறையுடையது. அதன்மேற் போர்த்துள்ள பொற்றகடு 2926 ½ கழஞ்சு அளவுடையது. விமானத்தின் உச்சியில் வியத்தகு முறையில் ஏற்றப்பெற்றுள்ள பிரமரந்திரத் தளம், முழுப்பெருங் கருங்கல். அது 25 அடி சதுரம் 80 டன் நிறையுடையது. சதுரக்கல்லின் நான்கு மூலைகளிலும், முறையே இரண்டு இரண்டு நந்திகள் உள்ளன. அவை தனித் தனியே 6 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டவை. திருக்கோயிலின் நாற்புறமும் உயர்ந்த மதில்களின் மேல் இப்போது எஞ்சியுள்ள நந்திகள் மட்டுமே 343 ஆகும்.

இராசராசசோழன் சிறந்த சிவபக்தன்; கலையுணர்வு படைத்தவன். ஆதலின் நடனம் சிற்பம் ஓவியம் முதலிய கலைகளை அவன் பெரிதும் ஆதரித்தான். தில்லைக் கூத்தப்பிரானின் நடனக் கலைக்குரிய 108 கரண வகைகளைக் கோயிலின் இரண்டாம் தளத்தின் உட்பாகத்து அடிவரிசையில் சிற்ப வடிவங்களாக அமைக்கச் செய்துள்ளான். கருவறையைச் சுற்றியுள்ள அர்த்த மண்டபத்தில் இராசராசன் காலத்தில் தீட்டப்பெற்ற அழகோவியங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. விமானத்தில் பிள்ளையார் திருமால் பிச்சாடனர் தென்முகக் கடவுள் மார்க்கண்டேயர் நடராசர் இலிங்கோற்பவர் அர்த்தநாரீசுவரர் கல்யாணசுந்தரர் மகிஷாசுரமர்த்தனி ஆகியோர் திருவுருவங்கள் கவின்மிகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு 41559 கழஞ்சு எடையுள்ள பொற்கலங்களும், 10200 காசு விலை மதிப்புள்ள அணிகலங்களும், 50650 கழஞ்சு எடையுள்ள வெள்ளிக் கலங்களும், அளித்ததுடன் ஒரு லட்சத்துப் பதினாயிரம் (1,16,000) கலம் நெல்லும், ஆயிரத்து நூறு (1,100) காசும் வருவாய் உடைய கிராமங்களையும் தானமாக வழங்கி இராசராசன் மகிழ்ந்தான்.

இக்கோயிலில் உள்ள பெருமானுக்கு இராசராசேசுவரர், தட்சிணமேருவிடங்கர், பிருகதீசுவரர், பெருவுடையார் எனப் பல பெயர்கள் வழங்கும். அம்பிகையின் கோயில் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான்' என்னும் அரசரால் கட்டப்பெற்றது. உலக முழுதுடைய நாச்சியார், உமா பரமேசுவரியார், திருக்காமக் கோட்டம் உடை நாச்சியார், பிருகதாம்பாள், பெரிய நாயகி என அம்பிகைக்குப் பல பெயர்கள் வழங்கும்.

இக்கோயிலின் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவர், ஸ்ரீகிருஷ்ணன் இராமனான மும்முடிச்சோழன் பிரமாதிராயர் என்பவர். பிராகாரத்தில் உள்ளனவற்றுள் சண்டேசுவரர் கோயில் ஒன்றே பண்டைக் காலத்தில் இராசராசசோழனாற் கட்டப்பெற்றது. ஏனையவை பிற்காலத்தில் ஏற்பட்டவை. பிராகாரத்தில் உள்ள பிள்ளையார் கோயில், சரபோஜி அரசர் கி.பி. 1803ஆம் ஆண்டில் திருப்பணி செய்து கட்டுவித்தது. கோயிலின் வடமேற்குப் பிராகாரத்தில் உள்ள முருகன் கோயில், தஞ்சை நாயக்க அரசர்கள் அமைத்தது. இதன்கண் உள்ள ஆறுமுகப் பெருமானின் திருவுருவம், சிற்பக் கலைத்திறன் மிக்கது. மயிலும், முருகனின் வடிவமும், திருவாசியும் உட்பட ஒரே சிலையில் அமைந்தது. யானையும் குதிரைகளும் பூட்டிய தேரின் வடிவத்தில் இக்கோயில் அழகுற இனிதமைக்கப்பட்டுள்ளது. இதன்கண் உள்ள துவாரபாலகர்களின் இரு திருவுருவங்களும், வேலை நயப்பாடு மிகவும் வாய்ந்தது. மேலைப் பிராகாரத்தில் வேம்பும் மந்தாரையும் நிழல் செய்ய விளங்கும் கருவூரார் சந்நிதி மிகவும் பழமையுடையதேயாயினும், அண்மையில் 50 ஆண்டுகட்கு முன்னேதான் செவ்விதிற் கட்டப்பட்டதாகும். இராசராசரின் குருவாக இருந்தவரும், திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் சிலவற்றைப் பாடியவரும் ஆகிய கருவூர்த் தேவர் என்னும் சித்தர்பெருமான், இதன்கண் எழுந்தருளியுள்ளார். கோயிலின் உட்பிராகாரத்தில் வடகிழக்கில் உள்ள 'ஆடல்வல்லான்' கோயிலும் பிற்காலத்ததே. அதற்கு அடுத்திருந்த தேரைத் தீர்த்தம் என்பது மூடப்பெற்று, ஒரு கிணற்றளவில் அமைக்கப்பட்டதாகச் சரபோஜி அரசர் கல்வெட்டொன்று கூறுகின்றது.

இராசராசன் இப்பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள், மிகப் பலவாகும். இக்கோயிலுக்கு வேண்டிய அமைப்புகளுள் ஒன்றும் குறைவுபடாமல் நிரம்பச் செய்வதில்,

அப்பேரரசன்பெரிதும் கருத்தூன்றியிருந்தான்' தான் புரிந்த போர்களில் வென்று கொணர்ந்த பொருள்கள் அனைத்தையும், இக்கோயிலுக்கே அளித்தான். ஏராளமான விளை நிலன்களும், விலையுயர்ந்த அணிகலன்களும் பொற்கலன்களும் அவனால் இக்கோயிலுக்கு வழங்கப்பட்டன. தேவாரத் திருப்பதிகம் பாடுவதற்காக மட்டும் 48 ஓதுவார்கள் நியமிக்கப்பெற்றிருந்தனர். கோயிற் பணிகளைச் செய்ய, இசையிலும், நடனத்திலும் தேர்ச்சிபெற்ற 400 தளிப்பெண்டுகள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருவித்துக் கோயிலின் அருகே குடியேற்றுவிக்கப் பெற்றனர். அவர்கட்குத் தனித்தனியே வீடுகள் கட்டிக்கொடுத்தும், 100 கலம் நெல் விளையக்கூடிய ஒவ்வொரு நிலம் அளித்தும், தக்க வசதிகள் பலவும் செய்யப்பட்டன. இவர்களுள் இசை பயிற்றுவிக்கும் காந்தர்வர்கள் என்போர், 70 பேர் இருந்தனர். மற்றும் கொட்டி மத்தளக்காரர் பக்கவாத்தியர் வீணை வாசிப்போர், முரலியம் வங்கியம் பாடவியம் உடுக்கை முத்திரைச்சங்கு முதலிய இசைக் கருவிகளை முழக்குவோர், பற் பலர் இருந்தனர். உவச்சு சகடை கரடிகை என்னும் பறை வகைகளும் இருந்தன. பண்டாரகர் கணக்கர் மெய்காப்பாளர் பரிசாரகம்புரிவோர் திருவிளக்கிடுவார் மாலை தொடுப்பார் வண்ணம் இடுவார் சோதிடர் தச்சர் தட்டார் கன்னார் குயவர் நாவிதர் வண்ணார் முதலிய பலவகைத் தொழிலாளர்களும், இக்கோயிலுக்கென மிகப் பலர் அமைந்திருந்தனர்.

இக்கோயிலில் காலை நண்பகல் இரவு என்னும் மூன்று வேளைகளிலும் வழிபாடு நடைபெற்றது. சண்பகமொட்டு ஏலவரிசி இலாமச்சம் ஆகியவைகளை ஊறவைத்த நீரால், திருமஞ்சனம் ஆட்டப்பெற்றது. பழவரிசியாற் சமைத்த போனகம், நெய்யமுது தயிரமுது அடைக்காயமுது கறியமுது பருப்பமுது முதலியன பலவும், நிவேதனம் செய்யப்பட்டன. உப்பு முதல் கற்பூரம் வரையில் கோயிலுக்கு வேண்டிய எல்லாப் படித்தரங்களும், ஒரு குறைவுமின்றி நிரம்பக் கிடைக்கும்படி நுண்ணிதின் எண்ணித் தக்க பலஒழுங்குகள் செய்யப்பெற்று விளங்கின. இராசராசன் பிறந்த சதயநாள் விழா, மாதந்தோறும் சிறப்பாக நடைபெற்றது. கார்த்திகைத் தீபத் திருவிழா நன்கினிது நிகழ்ந்தது. வைகாசி மாதத்தில் பெரிய விழா 9 நாட்கள் நடத்தப்பட்டது. திருவாரூர்க் கோயிலைப் பின்பற்றிப் பின்னர், இக்கோயிலின் ஆண்டுப் பெரிய விழா, சித்திரை மாதத்தில் 18 நாட்கள் நடைபெறுவதாயிற்று. நாடகமாராயன், சாக்கைக் கூத்தன், . கானம்பாடி, வாத்தியமாராயன் முதலிய கலைஞர்களும், இக்கோயிலிற் பணியாற்றி வந்தனர். அவர்களால் ''இராசராசேசுவர நாடகம்'' நடிக்கப்பெற்று வந்தது. பிற்காலத்தில் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய ''சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்'' சித்திரை விழாவின்போது நிகழ்ந்ததெனத் தெரிகின்றது.

பிறகோயில்கள்

இராசராசன், தஞ்சைப் பெரிய கோயில் மட்டுமேயன்றி, வேறு பல கோயில்களையும் கட்டியுள்ளான். (1) ஈழமண்டலத்தில் மாதோட்ட நகரில், தன் பெயரால் இராசராசேச்சரம் என்னும் கோயிலும்,(2) அங்கேயே பொலன்னருவா என்னுமிடத்தில் தன் தாயாரின் நினைவாக வானவன்மாதேவீச்சரம் என்னும் கோயிலும் கட்டுவித்தான்.(3) பெங்களூர் மாவட்டத்தில் உள்ள மணலூரில் செயங்கொண்ட சோழவிண்ணகரம் எனவும், (4) கங்கர்களின் தலைநகரமாகிய தலைக்காட்டுக்கு அருகில் இரவிகுலமாணிக்க விண்ணகரம் எனவும் திருமால் கோயில்கள் இரண்டு கட்டியுள்ளான். (5) தன் பாட்டனார் ஆகிய அரிஞ்சயசோழரின் நினைவாக அரிஞ்சயேச்சரம் என்னும் கோயிலை வடாற்காடு மாவட்டத்து மேற்பாடி என்னும் ஊரில் கட்டுவித்தான். (6) தனது பெரிய பாட்டியாரும், கண்டராதித்த சோழனின் மனைவியாரும் ஆகிய செம்பியன் மாதேவி அம்மையாரின் நினைவாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் செம்பியன்மாதேவிப் பெருமண்டபம் கட்டுவித்துள்ளான். இவற்றிற்கெல்லாம் இவன் வழங்கிய அறக்கட்டளைகள் மிகப் பலவாகும்.

முடிவுரை

இங்ஙனம் வரலாற்றுச் சிறப்பும், கலைச் சிறப்பும், தெய்விகச் சிறப்பும் மிக்கதாக விளங்கும் தஞ்சைப்பெரியகோயில், அருளாளர்களின் பாடல்பெற்ற சிறப்பும் உடையதாகத் திகழ்கின்றது. சைவத் திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவின்கண், கருவூர்த்தேவர் பதினொரு பாடல்களால் இக்கோயிலினைப் புகழ்ந்து துதித்துள்ளார்: கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விளங்கிய அருணகிரிநாதர், பாடிய மூன்று திருப்புகழ்ப் பாடல்களும், இக்கோயிலைப் புகழ்ந்து போற்றியுள்ளன. இங்ஙனம் தமிழ் மக்களின் கலை நாகரிகப் பண்பாட்டு ஒளிநிலையமாகத் திகழும் தஞ்சைப் பெரிய கோயிலையும், அதனை எடுப்பித்த இராசராசசோழப் பெருவேந்தனையும், நாம் பெரிதும் போற்றிச் சிறப்புறுவோமாக!

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனோ:
விஞ்சுறு மாறுன தடிசேர
விம்பம தாய்அருள் அருளாயோ!
நஞ்சமு தாஉணும் அரனார்தம்
நன்கும ரா!உமை அருள்பாலா!
தஞ்சென வாழ்அடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே!

—அருணகிரிநாதர்

— — — — —



இராசராசனும் திருமுறைகளும்

'திருமுறை ஆராயச்சிக் கலைஞர்'
பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை :

தமிழகத்தில் இடைக்காலத்தில் வந்து புகுந்த அயலவர் ஆட்சியை மாற்றித் தமிழ் மக்களது உள்ளத்திலே 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் நல்லுணர்வினைத்தூண்டி நாட்டில் உரிமையுணர்வு நிலைபெறுவதற்கு இன்றியமையாத தெய்வக் கொள்கையினைக் கடைப்பிடித்தும் பழைய திருக்கோயில்களைக் கற்றளிகளாக்கியும், புதிய கோயில்களை நிறுவியும், அக்கோயில்களில் நாளும் இன்னிசையால் தமிழ் வளம் பெறத் தேவார ஆசிரியர்கள் அருளிச் செய்த திருப்பதிகங்களைப் பாடுதற்கு ஓதுவார் பலரை நியமித்தும், செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரவும் நாட்டு மக்கள் பசியும் பிணியும் பகையும் நீங்கி நல்வாழ்வு பெறுதற்கான நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றியும் தமிழக மக்கள் வாழ்வுக்கு ஆக்கந் தரும் நெறிமுறைகளை அமைத்துதவிய பெருமை பிற்காலச் சோழமன்னர்க்குரிய தனிச் சிறப்பாகும்.

இராசராசசோழன் :

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு முடியத் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சோழமன்னர்களுள் கல்வி தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதப் பண்புகள் அனைத்தும் வாய்ந்து, பகைவரைப் புறங்கண்டு தமிழகத்தையும் அதனைச் சூழ்ந்துள்ள நாடுகளையும் தன்னடிப் படுத்தி ஆட்சிபுரிந்த பெருவேந்தன் முதலாம் இராசராச சோழன் என்பது வரலாற்றறிஞர் பலரும் அறிந்த வுண்மையாகும்.

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழனுக்கு வானவன் மாதேவி வயிற்றிற் பிறந்த இளையமகன் அருண்மொழிவர்மன் என்ற பெயருடைய இராசராசனாவன். இவன் பால் பருகும் குழந்தையாயிருந்த காலத்திலேயே தந்தை சுந்தரசோழன் இறந்தனன். தாய் வானவன்மாதேவியும் தீப்பாய்ந்து உடனுயிர் துறந்தாள். இச்செய்தி,

> செந்திரு மடந்தைமன் சீராச ராசன்
> இந்திர சமானன் இராசசர் வஞ்ஞன் எனும்
> புலியைப் பயந்த பொன்மான், கலியைக்
> கரந்து கரவாக் காரிகை, சுரந்த
> முலைமகப் பயந்து முழங்கெரி தழுவித்
> தலைமகற் பிரியாத் தையல்;
> மாதவித் தொங்கல் மணிமுடி வளவன்
> சுந்தர சோழன் மந்தர தாரன்
> திருப்புயம் முயங்கும் தேவி''
>
> — (தெ.இ.க.தொ.7, எண்.863)

எனவரும் திருக்கோவலூர்க் கல்வெட்டால் இனிது விளங்கும்.

இவ்வாறு பாலுண்ணும் பருவத்திலேயே பெற்றோரை இழந்த அருண்மொழிவர்மன் கண்டராதித்த தேவர் மனைவியாரும் தன் சிறிய பாட்டியும் ஆகிய செம்பியன்மாதேவியாராலும், தமக்கை குந்தவையாராலும் அன்புடன் பேணி வளர்க்கப் பெற்றான். செம்பியன் மாதேவியாரும் குந்தவையாரும் அறிவுறுத்திய அறிவுரைகளை இவன் கடைப்பிடித்தொழுகினமையே சிவநெறித் தொண்டிலும், சிற்பம் ஓவியம், இசை முதலிய கலை வளர்ச்சியிலும் பெரிதும் ஈடுபட்டு உழைத்ததற்குக் காரணமாகும்.

மும்முடிச்சோழன் :

தன் சிறிய தந்தை உத்தமசோழனது ஆட்சியில் இளவரசனாக விளங்கிய இவன், உத்தம சோழன் இறந்தபின்னர்க் கி.பி. 985-இல் இராசகேசரியென்னும் பட்டத்துடன் சோழநாட்டின் பெருவேந்தனாக முடிசூடினான். இவ்

வேந்தன் கி.பி.988 இல் சேரனையும் அவனுக்கு உதவியாக வந்த பாண்டியனையும், காந்தளூர்ப் போரிற் புறங்கண்டு வாகை சூடினான். அது பற்றியே இராசராசன்(அரசர்க்கு அரசன்) என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். சேரநாடு பாண்டியநாடு சோழநாடு என்னும் மூன்றிற்கும் இவன் ஒருவனே பெருவேந்தனாகத் திகழ்ந்தமையால், மும்முடிச்சோழன் என்ற சிறப்புப் பெயரும் இவனுக்கு உரியதாயிற்று.

சனநாதமங்கலம் :

காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய வேந்தர் பெருமானாகிய இராசராசன், தமிழகத்தைச் சூழ்ந்துள்ள வேங்கைநாடு, கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம் முதலிய நாடுகளை வென்றடக்கியதுடன், அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்தி, ஈழநாட்டையும் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும் வென்றடக்கினான். இவ்வெற்றிகள் அனைத்தும் இவனது மெய்க் கீர்த்தியில் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளமை காணலாம். இலங்கைத் தீவாகிய ஈழமண்டலம் இராசராசனுக்குரிய சிறப்புப் பெயரால் மும்முடிச் சோழமண்டலம் என வழங்கப்பட்டு, இராசராசன் ஆட்சிக்குள் அடங்கியிருந்தது என்பதும், இராசராசன் ஆட்சிக்காலத்தில் ஈழநாட்டின் தலைநகராகிய பொலனறுவாநகரம், அவ்வேந்தன் பெயரால் சனநாதமங்கலம் என வழங்கப்பெற்றதென்பதும், ஈழநாட்டு மாதோட்டம் இராசராசபுரம் என இவனது பெயரிடப்பெற்றதென்பதும் இலங்கையிலும் தமிழகத்திலும் வரையப்பெற்றுள்ள கல்வெட்டுகளால் நன்கு விளங்கும். ஈழநாட்டிற் சோழர் தலைநகராக விளங்கிய பொலனறுவாவில் உள்ள சிவாலயச் சிற்ப அமைப்பில் பத்துப் பதினோராம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சோழர் நிறுவிய கோயில்களைப் போன்று அமைந்துள்ளமையும், இங்குக் குறிக்கத்தகுவதாகும்.

பெருவுடையார் கோயில் :

தன்னிகரற்ற பெருவேந்தனாகத் தமிழகத்தை ஆட்சிபுரிந்த இராசராசன் தான் பெற்ற வெற்றிச் செயல்களுக்கு உரிய அடையாளமாகச் சோழநாட்டின் தலைநகராகிய தஞ்சையிலே சிவபெருமானுக்குரிய திருக்கோயிலாகத் தன்பெயரால் எடுப்பித்த இராசராசேச்சரம் என்னும் பெருந்திருக்கோயில், இவ்வேந்தர் பெருமானது சிவபக்தித் திறத்தையும் சிற்பம், ஓவியம், இசை, முதலிய கலைகளில் இவனுக்குள்ள பேரார்வத்தையும் புலப்படுத்தும் திருவருள் நிலையமாகத் திகழ்கின்றது. கலைநலம் பொருந்திய இப்பெருங் கோயிலையுருவாக்கிய இராசராசன் இதன்கண் நாள் வழிபடும் திருப்பதிகம் ஓதுதலும் ஆடலும், பாடலும் நாடொறும் நிகழ விளைநிலங்களையும் பிறபொருள்களையும் நிவந்தமாக வழங்கியுள்ளமை, இவனது சிவபத்தியின் மேன்மையினையும் கலையுணர்வினையும் நன்கு புலப்படுத்துவதாகும்.

சிவபாதசேகரன் :

இராசராசனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் சிவபாத சேகரன் என்பதும் ஒன்று. சிவபெருமான் திருவடியினைத் தன் முடியிற் கொண்டவன் என்பது இதன் பொருள். வடநாட்டின் மேற் படையெடுத்துச் செல்லும் சேரமன்னன் செங்குட்டுவனை வாழ்த்தி வழியனுப்பும் நோக்குடன் ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்த திருமாலுக்கு அணிந்த மலர் முதலிய சேடத்தினை ஏந்தித் திருமாலடியார் வந்து ஏத்திய போது அம்மன்னன் தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுளாகிய சிவபெருமானது வண்ணச் சேவடியினை மணிமுடியிற் கொண்டிருந்தமையால் ஆங்கது வாங்கித் தன் தோளில் அணிந்து கொண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறும். இதனைக் கூர்ந்து நோக்குங்கால், தமிழ் வேந்தர்கள் சிவனடிபொறித்த முடியினைச் சூடிக்கொள்ளுதலைத் தெய்வ வழிபாட்டு மரபாகக் கொண்டிருந்தனர் என்பது நன்கு துணியப்படும். சங்ககாலத் தமிழ்வேந்தனாகிய சேரன் செங்குட்டுவனைப் போன்றே பிற்காலச் சோழ மன்னனாகிய இராசராசனும் சிவனடி பொறித்த முடியினையணிந்திருந்தான் என்பது சிவபாதசேகரன் என வழங்கும் சிறப்புப் பெயரால் உய்த்துணரப்படும்.

நம்பியாண்டார் நம்பிகள்:

''திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே'' எனத் திருநாவுக்கரசர் அருளிய வண்ணம், சிவபெருமான் திருவடியைச் சென்னிமேற்கொண்டு ஆட்சிபுரிந்தமையாற் சிவபாதசேகரன் எனப் பாராட்டப்பெற்ற இராசராச சோழன், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் நம்பியாரூரர் ஆகிய மூவரும் அருளிய தேவாரப் பதிகங்கள் அனைத்தையும் தேடித் தொகுக்கும் பேரார்வமுடையவனாய்த் திருநாரையூரிற் பொல்லாப் பிள்ளையார்பால் நல்லருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு, தில்லையில் தேவாரப் பதிகங்களாகிய திருமுறைகளைத் தேடிக்கண்டு அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்துத் திருவெருக்கத்தம்புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் தோன்றிய பாடினியார் ஒருவரைக் கொண்டு அப்பதிகங்கட்குப் பழைய முறையிற் பண்ணமைக்கச் செய்தனன்.

திருமுறைகண்ட சோழன் :

நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு தில்லைப் பெருங்கோயிலில் தேவாரத் திருமுறைகளைத் தேடித்தொகுத்து அவற்றை முன்போல ஏழுதிருமுறைகளாக வகுத்துப் பண்ணடைவு செய்த சோழமன்னன், திருவாரூர்த் தியாகராசப்பெருமானை வழிபட்டுச் சோழநாட்டை ஆட்சிபுரிந்தவன் என்றும், இராசராசன், அபயகுலசேகரன் என்னும் பெயர்களையுடையவன் என்றும் திருமுறைகண்டபுராணம் கூறுகின்றது.

''ஆயுமறை மொழி நம்பியாண்டார் நம்பி
அருள் செயதகலித்துறையந்தாதி தன்னைச்
சேயதிருமுறைகண்ட ராசராச
தேவர்சிவாலய தேவர் முதலாயுள்ள
ஏயகருங்கடல்புடை சூழுலகமெல்லாம்
எடுத்தினிது பாராட்டிற்று''

எனத் திருமுறைகண்ட புராண ஆசிரியர் கூறுதலால், இப்பொழுது கிடைத்துள்ள தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்தையும் தேடிக்கண்டு ஒரு சேரத்தொகுத்தமையால் திருமுறைகண்ட சோழன் எனப் போற்றப்பெறும் சோழமன்னன் இராசராசன் என்னும் பெயருடையவன் என்பது திருமுறை கண்டபுராண ஆசிரியர் கருத்தாதல் நன்கு தெளியப்படும்.

பன்னிரு திருமுறைகள் :

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் நான்கு, ஐந்து ஆறு, திருமுறைகளாகவும் சுந்தரர் அருளிய பதிகங்கள் ஏழாந்திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பெற்றன. மூவர் அருளிய தேவாரப்பதிகங்கள் பன்முறையெனப் பெயர்பெற்றன. இம்முறையமைப்பினை அடியொற்றிய மணிவாசகப்பெருமான் அருளிய திருவாசகம் திருக்கோவை எட்டாந்திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் சேந்தனார் முதலிய ஒன்பதின்மர் பாடியருளிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய திருப்பதிகங்கள் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரம் முதல் நம்பியாண்டார்நம்பி அருளிய திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை ஈறாகவுள்ள பனுவல்களின் தொகுதி பதினோராந் திருமுறையாகவும் வகுக்கப்பெற்றன. அருண்மொழிவர்மனாகிய இராசராசன் காலத்திற்குப்பின், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருண்மொழித்தேவராகிய சேக்கிழார்நாயனார் இயற்றியருளிய வரலாற்றுக் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணம் மேற்குறித்த பதினொரு திருமுறைகளையடுத்துப் பன்னிரண்டாந் திருமுறையெனப் போற்றப் பெறுவதாயிற்று.

முதலாம் இராசராச சோழனது இயற்பெயர் அருண்மொழித்தேவன் என்பதாகும். 'சிந்தையருட் சிவமாகத் தெளிவித்தான் அருள் சென்னி' எனத் திருமுறைகண்ட புராணவாசிரியர் 'அருட்சென்னி' எனக்குறித்துப் போற்றுதலால் திருமுறைகண்ட சோழன் தஞ்சை இராசராசேச்சரச் திருக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசராச சோழனே என்பது ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்பமுடிந்த முடிவாயிற்று.

கருவூர்த்தேவர் :

சிவநெறிச் செல்வனாகிய முதலாஜ இராசராச சோழனது 19-ஆம் ஆட்சியாண்டில் தொடங்கப்பெற்ற தஞ்சைப் பெருங்கோயில் திருப்பணி இவ்வேந்தனது 25-ஆம் ஆட்சியாண்டில் நிறைவேறியது. அவ்வாண்டிலேயே நீர் தெளித்தலாகிய குடமுழக்கு விழாவும் நிகழ்த்தப் பெற்றது. திருவிசைப்பா ஆசியர்களுள் ஒருவராகிய கருவூர்த்தேவர் சிவபாதசேகரன் மேற்கொண்டு நிகழ்த்திய தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயில் திருப்பணிக்குப் பல்லாற்றானும் உடனிருந்து உதவிபுரிந்தார் என்பது, செவிவழி செய்தியாலும், தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயிற் கருவறை முதற்சுற்றில் இராசராசனுடன் அவர் உடனிருப்பதாக வரையப்பெற்றுள்ள ஓவியத்தினாலும், தஞ்சைப் பெருங்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமானைப் பரவிக் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாத் திருப்பதிகத்தினாலும் நன்கு விளங்கும்.

தென்னவன் மூவேந்த வேளான் :

முதலாம் இராசராச சோழன் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் திருநல்லம் கோயிலில் நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்ய ஓதுவார் இவருக்கு நிலமளித்த செய்தி அவ்வூர் கோயிற் பொறிக்கல பெற்றுள்ளது. இப்பெருவேந்தது ஆட்சியில் அரசியலதிகாரியாயிருந்த பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பான் தேவார ஆசிரியர்களாகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரையர் நம்பியாரூரர் என்னும் மூவர் திருவுருவங்களையும் தஞ்சைப் பெருங்கோயிலில் எழுந்தருள்வித்து நாள் வழிபாட்டிற்கு நிவந்தமளித்துள்ளான்.

ஓதுவார்கள் நியமனம் :

இராசராச சோழன் தஞ்சையில் தன்னாற் கட்டப்பட்ட இராசராசேச்சரத் திருக்கோயிலல், நாள்தோறும் தேவாரத் திருப்பதிகங்களள இசையுடன் பாடுதற்குப் பிடாரர் (ஓதுவார்) நாற்பத்தெண்மரும், அவர்களுக்குத் துணையாக உடுக்கை வாசிப்போர், மத்தளம்

முழக்குவோர் இருவரும் ஆக ஐம்பதின்மரை நியமித்து நிவந்தம் வழங்கியுள்ளான். இச் செய்தி, ''ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் கொடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜ ராசரியோடொக்கும ஆடவல்லானென்னும் திக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத் திலே பெறவும்'. (தெ. இ. க. தொ.எண். 65) எனவரும் கல்வெட்டுப் பகுதியால் நன்கு புல னாகின்றது.

தஞ்சைக் கோயிலில் தேவாரம் பாடுதற்கு நியமிக்கப் பெற்ற பிடாரர்கள் ஐம்பதின்மர் பெயர்களும், சிவன் என்ற பட்டத்துடன் மேற் குறித்த கல்வெட்டிற் பொறிக்கப் பெற்றிருத் தல், திருப்பதிகம் விண்ணப்பஞ்செய்யும் பிடா ரர்கள்பால், இராசராசன் கொண்டுள்ள நன் மதிப்பினைப் புலப்படுத்துவதாகும். இவர் களிற் பலர், தேவார ஆசிரியர் மூவர்க்குரிய திருப்பெயரையே தனக்குரிய பெயராகக் கொண்டுள்ளனர். இவர்தம் பெயரமைப்பினை யெண்ணுங்கால், இவர்கள் விண்ணப்பஞ்செய் யும் திருப்பதிகங்கள் மூவர் முதலிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் என்பது நன்கு விளங்கும். முதலாம் இராராசனுக்கு முன்னிருந்த சோழமன்னர் அனைவரும் திருக் கோயில்களில் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய் தற்கு நிபந்தம் வழங்கியுள்ளார்கள் என்றா லும், அருண்மொழித் தேவனாகிய இவ்வேந் தர் பெருமானைப் போன்று ஐம்பதின்மர் என்ற பெருந்தொகையில் ஓதுவார்களை நிய மித்துத் திருக்கோயில்களில் நாளும் இன்னிசை திருமுறைத் தமிழைப் பரவச் செய்யத்திட்டம் வகுத்ததாகத் தெரியவில்லை.

தேவாரத் திருப்பதிகங்களைத் தேடித் தொகுத்து முறைப்படுத்தித் தந்த நம்பியாண் டார் நம்பியின் திருமுறைப் பகுப்பினை உளத் துட்கொண்டு இயலிசை வல்லார் பலரும் ஒருங்கு கூடிப் பண்பொருந்தப்பாடி, இறை வனை வழிபாடு செய்தற்குரிய திருமுறை வழி பாட்டினை, முதன்முதல் வகுத்து வழிகாட் டிய பெருமை, முதலாம் இராசராச சோழ னுக்கேயுரிய தனச் சிறப்பாகும். இவ்வேந்தன் இசையுடன் ஆடற்கலையினை வளர்த்தல் வேண்டித் தஞ்சையிற் குடியமர்த்திய தளிச் சேரிப் பெண்டுகளுக்கு எடுத்தபாத, மழலைச் சிலம்பு, சீருடைக்கழல் எனவரும் திருமுறைத் தொடர்களைப் பெயராகக் குறித்துள்ளமை, திருமுறைகளை நாட்டுமக்களுள்ளத்தே நிலை பெறச் செய்யுந் திறத்தில் இவ்வேந்த கொண்ட பேரார்வத்தினை இனிது புலப் படுத்துவதாகும்.

முடிவுரை :

சிவபாத சேகரன் ஆகிய இராசராசன்தான் நாள்தோறும் நிகழ்த்தும் சிவபூசையில் இசை யில் வல்ல பிடாரர்களைக் கொண்டு தேவாரப் பதிகங்களைப் பண்பொருந்தப் பாடும்படி செய்து திருமுறைத் தெய்வ இசையால் சிவ பரம்பொருளை நினைந்து போற்றும் தூய சிந்தையனாகத் திகழ்ந்தான் இவ்வாறு உலக மக்கள் பலருங்கூடும் திருக்கோயில் வழிபாடு களிலும் தான் தனித்தமர்ந்து செய்யும் சிவ பூசையிலும் திருமுறைகள் இடம்பெற இவ் வேந்தர் பெருமான் செய்த திருமுறைத் தொண்டினை யுளத்துள் கொண்டே 'சீசய திருமுறை கண்ட ராசராசதேவர்' எனச் சேக்கிழார் புராணமுடையார் இம்மன்னனைச் சிறப்பித்துப் போற்றியுள்ளார் எனக்கொள்ளு தல் ஏற்புடையதாகும்

கல்வெட்டும், சமயநெறியும்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்,

பேரூராதீனம், பேரூர்

தோற்றுவாய் :

தமிழகம் பல்லாயிரம் ஆண்டுகளாகப்பண்பட்ட சமய நெறியைப் போற்றி வருகிறது. சமயக் கொள்கைகள் மக்களிடையே ஊன்றி வளர்ந்த பாங்கைச் சங்க இலக்கியங்களிலும், அவற்றையொட்டி எழுந்த பேரிலக்கியங்களிலும் காண முடிகிறது.

சமய ஆசிரியர்கள் :

அயல் வழக்குகள் தமிழ்நெறியைத்தடைப்படுத்த முயன்றன. எனினும் செந்தமிழ்ச் சான்றோர்கள் தமிழ்ப் பாடலால் தமிழ்ச் சமயத்தை தமிழ் நெறியை வளர்ந்தனர். பல்வேறு ஆதிக்கங்களால் வருந்திய தமிழ் மரபினர் ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு, மீண்டும் புத்துணர்ச்சியுடன் மொழியாலும், கலையாலும், நாட்டாட்சியாலும் மேம்பட்டனர். முடியுடை மூவேந்தர்களது ஆட்சி மீண்டும் புத்தொளியுடன் பரவத் தொடங்கியது.

அரசர்கள் :

அரசர்கள் அங்கங்கே பல கோயில்களை எடுத்தனர். சமய குரவர்கள் அருளிய திருமுறைகளும், ஆழ்வார்கள் அருளிய நற்றமிழ்ப் பாடல்களும் மக்களது சமய உணர்வைத் தூண்டி நெறிப்படுத்தின. திருக்கோவில்களில் நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடுகளும்மேம்பட்டு விளங்கின. வழிபாடு சிறக்கவும் விழாக்கள் இனிது நடைபெறவும், கோவிலுக்குஉரிமையுடைய குடிமக்கள் அறங்களை ஏற்படுத்தினர்.

சோழப் பேரரசு :

இத்தகைய பண்பான தெய்வீகநெறி 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் குறிப்பாகச் சோழநாட்டில் ஒவ்வொரு குடிமக்களிடத்தும் பரவியிருந்தது. காரணம் ''மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி'' என்பதற்கேற்ப அரசனது பக்தியுணர்வும், தமிழ்நெறியுணர்வும் அவ்வாறிலங்கியது. 9-ஆம் நூற்றாண்டிறுதியில் தஞ்சைப் பகுதி பாண்டிய குலாசனி வளநாடாகத் திகழ்ந்தது. முதலாம் இராசராசனும் அவன் முன்னோரும் ஆட்சியை விரிவுபடுத்துவதிலும், நாட்டை உயர்வடையச் செய்வதிலும், பெரிதும் மனஞ்செலுத்திச் சமய நெறியை வளர்த்தனர். மக்கள் சமய நெறியில் ஈடுபட்டிருந்த பாங்கினை, இராசராசனது பதினெட்டாவது ஆட்சி ஆண்டிலெழுந்த மிலட்டூர்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பாண்டிய குலாசனி வளநாட்டு விறைக்கூற்றத்து திவ்வியப் பகுதியாகிய இவ்வூர் அகத்தீச்சுரமுடையார் திருக்கோயில் திருப்பணிகளுக்காக, ஆளும் நாயன் என்பான் நிலம் அளித்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. (தெ. இ. கோ. சா. 661) அவ்வூரார் கோயில் திருப்பணிக்கும் சிறப்பு வழிபாடுகட்கும் பூசத் திருநாள் விழாவுக்குமாக நிலங்கள் அளித்தனர். அவ்வூரில் ஆதி சண்டேசுவரத் தேவர் திருவாதிரை நாள், இடபவாகனத் திருநாள் முதலியன நடைபெற அறங்கள் ஏற்படுத்தினார். (தெ. இ. கோ. சா. 664-665) என்ற செய்தியைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இவ்வாறு அறங்கள் நிகழக் காரணமாக இருந்தவை திருமுறைகள். அப்பரடிகள் திருவாதிரைத் திருநாள் திருஆரூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதைத் தாமும் உடனிருந்து உணர்ந்தாங்கு.

''நணியார் சேயார் நல்லார்
தீயார் நாடோறும்
பிணி தான்திரு மென்று
பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா
மணாளா என்பார் கட்கு
அணியார் ஆரூர் ஆதிரை
நாளால் அதுவண்ணம்''

என அருளியுள்ளார். திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூரில் சுட்ட வெள்ளென்பு ஒரு

தோகை நல்லாள் எனத் தோன்ற அருளிய பதிகத்தில்,

''மைப்பூசும் ஒண்கண்மட நல்லார்
மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்
சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண் புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ
பூம்பாவாய்.''

என அருளியுள்ளார்.

இத்தகைய அருளாரமுதப் பாடல்களை ஓதியுணர்ந்த மக்கள், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் முறையில் விழாக்களை யெடுத்தனர். அறங்கள் நிறுவினர். அரசும் துணையாக இருந்தது. இவற்றால் நாட்டி லுள்ள மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய ராய்ச் சிறப்பொடு பூசனைகளைச் செய்து தானம் தவம் உலகில் நிலைபெறச் செயலாற்றி வாழ்ந்து வந்தனர். விழாக்கள் எடுப்பதும் திருக்கோயிலைப் பேணுவதும், கண்டு மகிழ் வதும், மற்றவர்க்கு வழிகாட்டுவதுமாக வாழ்ந் தனர். அவர்கள் குறைவில்லாத வருவாய்க் குரிய விளைச்சல்களாலும் பண்புடைய தகுதி யாலும், செல்வச் சிறப்பாலும் சிறந்திருந்தனர் என்பது புலனாகிறது. இத்தகைய நாட்டினை ஆண்ட சோழன், அருள்மொழி வர்மன் என்ற பெயருடன் திகழ்ந்து, பாண்டிய குலாசனி என்ற பெயர் பெற்றான். பின், மும்முடிச் சோழனாகி மேலும் நாட்டை விரிவுபடுத்தி னான். கடல்கந்த நாடுகளையும் தன்னகப் படுத்தி, கடற்படைகளை யுடைய மாமன்ன னாக விளங்கினான். அதனால் இராசராசன் என்று பெயர் வந்தது.

இராசராசனாகிய இம்மாமன்னன் 18, 19-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1000 தொடக் கத்தில்) இவ்வாறு சிறப்புற்றுத் தெய்வத் தமிழும், சிவநெறியும் செழிக்கப்பணி புரிந் தான். தில்லைப் பெருங்கோயிலுக்கு அறங்கள் பல செய்தான். கூத்தப்பெருமானிடத்து அயரா அன்புடையவன் ஆயினன். எனவே தில்லைவாழ்ந்தணர்கள் 'சிவபாதசேகரன்' என்ற பெயரைச் சூட்டினர் எனக் கருதலாம்.

நாடு பலவற்றையும் தன்னகப்படுத்தி வெற்றிப் பெருமிதத்துடன் அயரா அன்பில் சிவனடி மறவாச் சிந்தையனாகிய இராசராசன் தலைநகராகிய தஞ்சையில் தனக்கு முன்னும் பின்னும் எவரும் செயற்கரிதாகிய ஒரு பெருங் கோயிலை அடிமுதல் முடிவுரை கருங்கல்லால் அமைக்கத் தொடங்கினான், என்பது புலனா கிறது. அவன் இத்திருப்பணியைத் தொடங் கிய அத்திருப்பணி தமிழகத்தின் சிறந்த கலை ஞர்களது கைவண்ணத்தில் ஆறு ஆண்டில் நிறைவுற்றிருக்க வேண்டும்.

ஏனெனில் இராசராசேசுவரமாகிய இத் திருக்கோயிலில் விமானத்தின் உச்சியாகிய தூபித்தறியில் நிறுவிய செப்புக் கும்பத்தின் அளவும், பிறதகடுகளின் நிறையும்பற்றி, அவனது 25-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கீழ்வருமாறு கூறுகிறது.

''யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் ஒரு நூற்
றெழுபத்தைஞ்சினால், உடையார் ஸ்ரீராசராச
தேவர் ஸ்ரீராசராசேசு வரமுடையார் ஸ்ரீவிமா
நத்துச் செம்பின் தூபித்தறியில் வைக்கக்
குடுத்த செப்புக்குடம் ஒன்று நிறைமூவா
யிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கிய
தகடு பலபொன் ஆடவல்லா னென்னுங்
கல்லால் நிறை இரண்டாயிரத்துத் தொளா
யிரத்து இருபத்தறு கழஞ்சரை''

என்னும் கல்வெட்டால் இராசராசனது 25-வது ஆண்டு நூற்று எழுபத்தைந்தாம் நாளில் நம்மை ஆளுடைய பெருமானாகிய, இராச ராசேச்சுவரம் உடையார் திருவிமானத்து உச்சியில் பதித்துள்ள நடுதறியில் (கவசம்) நிற்பதற்காக உச்சியில் நாட்டியுள்ள கட்டை) பொருத்துதற்குக் கொடுத்த செம்பாலாகிய கும்ப வடிவத்தின் எடை மூவாயிரத்து எண் பத்துமூன்று பலம். அதற்கு மேல் கலசத்தில் சுருங்கிய பகுதிகளாக வாழைப்பூ அமைப்பில் செய்த கலசத் தகடுகளின் எடை இரண்டா யிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறரைக் கழஞ்சு, இவை இராசராசனுக்கு வழிபடுகடவு ளாக விளங்கிய கூத்தப்பெருமான் பெயரால் தன் நாட்டில் எடைக் கல்லாக வழங்கப்பெற்ற ஆடவல்லான் என்னும் கல்லால் நிறுத்தப்பெற் றது. இக்கலசத்தில் பல பொன்னும் கலந்து மேற்பகுதி விளங்குகிறது. ஐம்பொன்னும் திடகம், கிளிச்சிறை ஆகியனவும் அதில் சேர்ந்திருக்கலாம். இராசராசனது ஆட்சி யாண்டு இருபத்தைந்தின் நிறைவில் இத் திருக்கோயிலில் கருவூர்த்தேவர் நற்றுணை யுடன் குடமுழுக்கு நடந்திருக்கிறது. இத் திருக்கோயிலைப் பற்றிக் கருவூர்த்தேவர்,

''உலகெலாம் தொழுவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ!
அங்ஙனே யழகிதோ! அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண்டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசராசேச் சரத்தி வர்க்கே''

எனப்பாடியுள்ளார்.

இராசராசனது இருபத்தாறாவது ஆட்சியாண்டில் அரசன் தமக்கையர், மனைவியர், சுற்றத்தார்ஆகியோர் பெரிதும் ஈடுபாட்டுடன் தஞ்சைப் பெரிய கோயிலாகிய கலைக் கருவூலம் உள்ளக்கிழியின் உருவெழுதும் திருவுருவங்களாலும், அணிகலன்களாலும் சிறந்து மிளிரப் பணியாற்றினர். அவர்கள் யார்? யார்? எந்தெந்த வகையில்? வழங்கினர் என்பதைத் தஞ்சைப் பெருங்கோயில் விமானத்துக் கல்லிலே வெட்டுமாறு ஆணை பிறப்பித்தமையை,

''இராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தாறாவது நாள் இருபதினால், உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழநின்கீழைத் திருமஞ்சந சாலையில் தாநஞ் செய்தருளாவிருந்து, பாண்டிய குலாசநி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர், நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜராஜீஸ்வர முடையார்க்கு, நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும், ஸ்ரீவிமானத்துக் கல்லிலே வெட்டுக.'' எனவரும் கல்வெட்டால் அறியலாம்.

இவ்வாறு சீரும் சிறப்பும் மிக்க பெருங்கோயிலை எடுப்பித்துத் தன்னைச் சூழ்ந்தார் பலரும் பன்னி ஆதரித்து ஏத்தி வழிபடுமாறு இறைவனது திருவுருவங்களையும், அம்மையினது திருவுருவங்களையும், எடுத்தருளச் செய்தனர். மேலும் திருமுறைகண்ட சோழனாகிய இப்பேரரசன், திருமுறையிடத்தும் அடியார்களிடத்தும் பெரும்பற்றும் பேரன்பும் உடையவனாக விளங்கினான். அவனைப் போன்றே சுற்றமும் மக்களும் பெரிதும் ஈடுபாடுடையவர்களாக விளங்கினர் என்னும் செய்திகளைப் பல்வேறு கல்வெட்டுக்களால் அறிகின்றோம்.

இராசராசன் தனது இருபத்தாறாவது ஆட்சியாண்டு முந்நூற்றுப் பத்தொன்பதாம் நாட்களுக்கு முன் பாண்டியரையும் சோழரையும் வென்று மலைநாட்டைத் தன் கைப்படுத்தி அங்குள்ள கருவூலத்திலிருந்த பொன் கொண்டு சின்னங்கள் செய்துள்ளான். இத்திருக்கோயில் திருப்பணி நடைபெறும் காலத்திலேயே மேலைச் சாளுக்கியரை வென்றதன் நினைவர்கப் பொன்னாலாகிய மலரிரண்டை இறைவன் திருவடிக்கு உரியதாக்கினான் என்பதை,

> ''சத் யாச்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீபாத புஷ்பமாக ஒட்டித் திருவடி தொழுதனன்...''

என்று கூறுகிறது. அப்பொற்பூவின் எடை ஒவ்வொன்றும் பத்துக் கழஞ்சுகளாக இருபது கழஞ்சு என்று அறிகிறோம்.

இராசராசன் 'தட்சிணமேரு' என்னும் தஞ்சைப் பெருங்கோயிலில், செப்புத் திருவுருவங்களாக, தஞ்சை விடங்கர், உமாபரமேசுவரியார், ஆடவல்லான் தக்கணமேரு விடங்கர் உமா மகேசுவரியார் என்னும் பெயர்களால் எழுந்தருளச் செய்து பல்வகைச் சிறப்புகளுடன் வழிபாடுகள் நடத்தியுள்ளான். தஞ்சை விடங்கர் என்பது திருவாரூர்த் தியாகராசரையும், ஆடவல்லான் தக்கன மேருவிடங்கர் என்பன தில்லைக் கூத்தப் பெருமானையும் மனத்தகத்து மாறா வழிபாட்டில் கொண்டு இங்கு எழுந்தருளச் செய்துள்ளான் எனக் கருதலாம். திருமாலின் செப்புத் திருவுருவம், ஒன்றைத் தனது அதே இருபத்து ஒன்பதாவது ஆட்சியாண்டில் திருவடி முதல் முடிவரை, பத்தொன்பது விரல், ஆறுதோரை உயரத்து நாலு திருக்கரங்களுடன் எழுந்தருளச் செய்தான் என்பது கல்வெட்டால் அறிகிறோம். இவ்வரசனது மனைவி உலகமாதேவியார் தஞ்சைக் கோவிலில் பிச்சதேவரை எழுந்தருளுவித்து அணிகலன்களையும் திருவமுதுக்கு வேண்டிய அறக்கட்டளைகளையும் ஏற்படுத்தினார்.

பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சைப் பெருங்கோயிலில் நம்பியாரூரர், நங்கை பரவையார், அப்பரடிகள் திருஞானசம்பந்தர் ஆகியோர், திருவுருவங்களை எழுந்தருளச் செய்தான்; தேவார தேவராகிய சந்திர சேகரையும் எழுந்தருளச் செய்தான் என்பதை ''தென்னவன் மூவேந்த வேளாண் ஸ்ரீ ராசராசேசுவரமுடையார் கோயிலில் யாண்டு 29 ஆவது வரை எழுந்தருளுவித்த பிரதிமங்கள் உடையார் கோயில் முழத்தால் அளந்தும் இரத்தினங்கள் சரடுநீக்கித் தட்சிண மேரு விடங்கன் என்னும் நிறைகல்லால் நிறை எடுத்தும், பொன் ஆடவல்லான் என்றும் கல்லால் நிறை எடுத்தும், கல்லில் வெட்டினபடி, பாதாதி கேசரிபயந்தம் பதினேழ்விரல், இரண்டுதோரை உயரமும் இரண்டு திருக்கையும் உடையராக, கனமாக எழுந்தருள்வித்த நம்பியாரூரர் பதினாறு விரல் நீளத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த நங்கை பரவையார்....

> பாதாதி கேசாந்தம் இருபத்திரு விரலே இரண்டு
> தோரை உசரத்து இரண்டு திருக்கையுடைய
> வராகக் கனமாக எழுந்தருளு வித்ததிரு
> நாவுக்கரையர்
> பாதாதி கேசாந்தம் இருபத்திரு விரலே
> இரண்டு தோரை உசரத்து இரண்டுதிருக்
> கையுடைய வராகக் கனமாக எழுந்தருளு
> வித்த திருஞான சம்பந்த அடிகள்,
> பெரிய பெருமாளுக்கு, (இராசராசன்)

தேவார தேவராக எழுந்தருளுவித்த தேவர் பாதாதிகேச பரியந்தம் ஐவிரலே இரண்டு தோரை உசரத்து நாலு அத்தம் (கை)உடைய ராக எழுந்தருளுவித்த சந்திரசேகர தேவர்.. எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இதே கல்வெட்டு ஐம்பத்தாறு பொன்சுளியுடைய, அக்கமணிமாலை ஒன்று நம்பி ஆரூரர்க்கும், நங்கை பரவையார்க்குத் திருக்காற்காரை மோதிரம் ஆகியனவும் நாவுக் கரையர்க்கு பொன்சுளி அக்கமணியும், திரு ஞான சம்பந்தர்க்கு பொன்சுளி அக்கமணியும் பொற்பூவும் அக்கமணித் தாழ்வடமும் பிற வும் அமைந்தான். ஊர் மக்களும் தேவார ஆசிரியர் மூவருக்கும் அணிகலன்கள் சூட்டி யுள்ளனர் என்பதைத் தஞ்சைக் கோயில் மேற்குச் சுற்றில் முதல் மாடத்திற்கு மேல் செதுக்கியுள்ள கல்வெட்டால் அறியலாம்.

இந்தக் கோயிலின் தென்புறச் சுவரின் இரண்டாம் படையிலுள்ள கல்வெட்டில்இராச ராசனது தமக்கையாகிய குந்தவையார் தட் சினமேருவிடங்கர் பிராட்டியாருக்குத் திரு மகுடம் வாளி உளுத்து திருமாலை வாகுவல யம் ஸ்ரீகந்தம் திருக்கைப்பொட்டு சூடகம் ஆகிய அணிகலன்களைப் பொன்னும் மணியுங் கொண்டு செய்வித்தார் என்பதைத் தெரி விக்கிறது. இதில் மணிகளது இலக்கணமும் காணப்படுகிறது. மேற்சுற்று மூலையில் உள்ள கல்வெட்டு தேவார ஆசிரியர்கட்கு நந்தா விளக்குகள் அளித்தமை கூறுகிறது. இக்கோயி லில் கருவறையில் வடபுறத்தைச் சூழ்ந்த சுவரில் மூவேந்த வேளாண் சேத்திரபாலர், ஆடும் பைரவர், சிறுத்தொண்டர் வெண்காட்டு நங்கை சீராள தேவராதியோர் திருவுருவங்கள் எழுந்தருளச் செய்த செய்தியும் அணிவித்த அணிகலன்களும் கூறப்படுகின்றன.

இக்கோயில் கருவறையைச் சூழ்ந்த மேற்குப்புறத்திலுள்ள நூல்களில் தத்தாநம ரேகாண் என்ற மிலாடுடையார் (மெய்ப் பொருள் நாயனார்) திருவுருவம் எழுந்தருளச் செய்து அணிகலன்கள் சூட்டப் பெற்றதைக் குறித்துள்ளனர். கல்வெட்டுக்களில் மூவேந்த வேளான் திருப்பணிகளாக இவை குறிக்கப் பெறுகின்றன.

இவற்றால் தஞ்சைப் பெருங்கோயில் குட முழுக்கு நிகழ்ந்த பின் அரசனும், சூழ்ந்தோரும் தெய்வத் திருப்பணிகளில் உளமொன்றி ஈடு பட்ட நிலைமையினை விரிவாக உணர முடி கிறது. இறைவனையும் இறையருள் பெற்ற அருளாளர்களையும் வழிபடுவதும் தம் பிறவிப் பயனாகக் கருதினர். மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து அறமும் அருளும் உடையவராய்த் திகழ வழிகாட்டினர்.

சமயநெறி தமிழ்ப் பாடல்களால்தழைத் தோங்க, தேவார, ஆசிரியர்களால் அருளப் பெற்ற பதிகங்களைத் திருநாரையூர் நம்பி யாண்டார் நம்பிகளது துணைகொண்டு தில்லையினின்றும் உலகிற்கு வழங்கியவன் இராசராசன். அதனால் திருமுறைகண்ட சோழன், எனும் பெயர் பெற்றான். திருமுறை களின் மொழிக்கு மொழி தித்திக்கும் இனிய பாடல்களில் மனம் ஒன்றிஇறைவனைப்போற்றி வழிபட்டான் இம்மாமன்னன். தான்பெற்ற இன்பம் எல்லோரும் பெற்று இன்புறுமாறு தேவாரப் பதிகங்களைத் திருக்கோயில்களில் விண்ணப்பிக்கச் (பாடுமாறு) செய்தான். தனக் குப் பெரிதும் ஈடுபாடுடைய தஞ்சைப் பெருங் கோயிலில் தேவாரத் தேவராகிய சந்திர சேகரரை எழுந்தருள்வித்து நாற்பத்தெட்டு இசைவாணர்களைக் கொண்டு திருப்பதிகம் விண்ணப்பிக்கவும் அவர்கள் பாடல்களுக்கேற்ப இசைக்கருவிகளை இயக்க இரு இசைவல்லார் களையும் அமர்த்தி அவர்களுக்கு வளம் பொலிய நெல்வழங்கும் அறத்தை ஏற்படுத்தி னான். அது எப்பொழுதும் நிகழ வேண்டு மென்ற எண்ணத்துடன் தன் அரண்மனைக் கருவூலத்திலிருந்தே வழங்கவும் ஆணை பிறப் பித்தான் என்பதையும் அது எவ்வெவ்வாறு நிகழவேண்டும் என்பதையும் இப்பணியில் ஈடு பட்டோரனைவரும் சிவதீட்சை பெற்றவர் களாக இருந்தனர் என்பதையும் இக்கோவிலில் வடபுறச் சுவரில் உள்ள கல்வெட்டால் அறி கிறோம்.

இவற்றால் நாள் வழிபாடு, சிறப்பு வழி பாடு (திருவிழா) ஆகியன சிறந்திருந்தன. மக்கள், திருவுருவை எழுந்தருளச் செய்து மனமுருக வழிபட்டனர். சமயப் பெருமக் களைப் போற்றினர். அவர்களுக்கு அணிகலன் சூட்டினர் என்பனவற்றை அறிகிறோம். மேலும் அக்கமணி ஒன்றை நூல் கோத்து, அவரது ஐம்பத்தாறு மணிகளைப் பொற்சுளியுடன் தொடுத்த ிவது கண்டிகையணிவது ஆகிய சமயத் சின்னங்களின் முறைகளையும் உணர முடிகிறது. திருக்கோயில் பணிகளில் ஈடுபடு வோர் சிவ தீட்சை பெற்றவர்களாக இருந்த னர் என்பது புலனாகிறது. சமயநெறியினைத் தக்காங்கு நாடி உணர்வதற்கு இக்கல்வெட்டுக் களை ஆய்வது பெரிதும் பயனுடையதாக இருக்கும். இவற்றைப் பேணி ஆய்வதில் தமிழ் உலகம் முற்படுவதாக.

— — — — —

தலைசிறந்த தமிழ்ப் பேரரசன்

பேராசிரியர் திரு அ. மு. பரமசிவானந்தம், M.A., M Litt.
ஆட்சிக்குழு உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

இராசராசன் இளமை:

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே சிறந்த மன்னராகப் போற்றப் பெறுபவர்களுள், இராசராசன் தலைசிறந்த ஒருவனாவன். இராசராசன் பராந்தகனுக்கு வானவன் மாதேவி வழியாகப் பிறந்தவன். இவன் ஐப்பசிச் சதய நட்சத்திரத்தில்பிறந்தவன். திருவெண்காட்டில் அந்நாளில் இவன் இறைவனுக்கு விழாச் செய்து வந்தான். இவன் ஆட்சி பற்றிப் பலவாறு போற்றிப் புகழ்ந்துள்ளனர். உலகத்தைத் தான் தாங்கிக்கொண்டு, ஆதிசேடனுக்குண்டான பளுவைக் குறைத்தவன் என்று இவனைப் புகழ்ந்தனர். இவன் கையில் சங்கு சக்கரக் குறிகள் இருந்தமையின், இவன் காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமே என்றனர். இவன் இயற்பெயர் அருள் மொழித் தேவன் என்பது, இவனது ஆட்சி ஆண்டு நான்கில், மதுராந்தகக் கல்வெட்டு 'மும்முடிச் சோழன்' எனப் புகழ்வதால் இவன் ஆட்சி ஆண்டு மூன்றிற்குள் மற்ற இருபெரு வேந்தரையும், வென்றவனாதல் வேண்டும். எனவே, மேலைக் கடற்கரையில் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்த போர் அதற்கு முந்தியதாக வேண்டும். அந்த வெற்றி ஆண்டிலிருந்து இவன் இராசராசன் எனவே சிறக்க வழங்கப் பெற்றான். இவனது தில்லைப் பணிகளைப் பாராட்டிக் கி.பி. 1004-ல் இவனுக்குத் தில்லைவாழ் அந்தணர்கள் இராசராசன் எனப் பெயரிட்டனர் என்பது பொருந்தாது. 1004-க்கு முன்பே இவனுக்குஇராசராசன் என்ற பெயரே நிலைத்துவிட்டது. இவன் தன் சிறிய தந்தை உத்தம சோழனுக்குப் பின் 985-ல் பட்டத்துக்கு வந்தான். இராசகேசரி என்ற பட்டம் புனைந்தான். இளமையில் பெற்றோரை இழந்த இராசராசனைக் கண்டராதித்தரும், தமக்கை குந்தவையும் மிகவும் போற்றி வளர்த்தனர் எனலாம்.

போர்ச் செயல்கள்:

இவன் காலத்திலேதான் கல்வெட்டுக்கள் சிறப்புற இலக்கணப்படி அகவற்பாவில் உருவாக்கப் பெற்றன. இவனது மெய்க்கீர்த்திகளில் இவன் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்த வரலாறே சிறக்கப் புகழப் பெற்றுள்ளது. காந்தளூர்ச்சாலை திருவனந்தபுரத்தில் ஒருபகுதி என்பர். அக்காலத்தில் சேரநாட்டை ஆண்ட மன்னன் பாஸ்கர இரவிவர்மன் (1976-1036) ஆவன். அவன் சோழர் தூதனைச் சிறைப்பிடித்து உதகையில் வைத்திருந்தான். உதகை என்பது இக்கால உதகமண்டலமன்று; நாகர்கோயில் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூர். அதை அடுத்து இருந்ததே காந்தளூர்ச்சாலை. இராசராசன் படையெடுத்துச் சென்று காந்தளூர்க் கலமறுத்து வெற்றிகொண்டு தன் தூதனையும் மீட்டு வந்தான். உதகையில் கடல் நடுவே கலங்களில் தூதுவன் வைக்கப்பட்டான் போலும். எனவே அவற்றை அழித்துத் தூதுவனை மீட்டுவந்தான், இராசராசன் என்பது பொருந்தும்.

சேர நாட்டுக் காந்தளூருக்குச்சோழன் செல்ல வேண்டுமாயின், அவன் பாண்டி நாட்டு எல்லையைக் கடந்தே செல்லவேண்டும். அக்காலத்தில் பாண்டிநாட்டை அமரபுயங்கன் என்னும் பாண்டியன் ஆண்டு வந்தான். எனவே, அப்பாண்டியனுடன் போர் செய்து வெற்றிகண்ட பிறகேஇராசராசன் காந்தளூர் சென்றான் எனக்கொள்ளல் வேண்டும். எனவே, தன் ஆட்சி ஆண்டு மூன்றில் பாண்டியரையும் சேரரையும் வென்று, மும்முடிச்சோழன் ஆனான். அங்கிருந்து திரும்பிய பின் அவன் தன் பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதயநாளில் சோழ நாட்டில் பெருவிழாச் செய்தான்.

இராசராசன் போர்களைப் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ஒரு வகையில் விளக்கிக் காட்டுகின்றன. முதலில் அமரபுயங்கப் பாண்டியனை வெற்றி கொண்ட இராசராசன், பின்பு சேரனைக் கொல்லம், கொடுங்கோளூர், முதலிய இடங்களில் தோற்றோடச் செய்தான். பின்பு குடமலை நாட்டில் பனசோகை என்ற இடத்தில், போர் நடைபெற்றது. அப்போரில் உதவிய 'பனிஜா' மன்னனுக்குத் தான் வெற்றி பெற்ற நாட்டை அளித்துத் திரும்பினான். பின்பு, இவன் மைசூர் சேலம் பகுதிகளில் உள்ள குட நாட்டுக் கங்கபாடி, நுளம்பபாடி நாடுகளையும் வெற்றி கொண்டான் இராசராசன் பின்பு மைசூர்ப் பகுதியிலுள்ள தடிகை பாடியை வென்றான். 991-ல் அங்கு

இராசராசனது சிறப்புப் பெயராகிய, சோழ நாராயணன் என்னும் பெயரால் ஒரு கல்வெட்டு உண்டு. இப்போர்களி லெல்லாம் படைத்தலைமை பூண்டு, படையைச் செலுத்தினவன், இவன் மகன் இராசாந்திரனேயாவான். எனவே, இப் போர்களை எல்லாம் இராசேந்திரன் மேல் ஏற்றிக் கூறுவதும் உண்டு.

ஈழப் படை எடுப்பு:

இராசராசன் காலத்தில் ஈழநாட்டில் ஐந்தாம் மகிந்தன் ஆட்சி செய்துவந்தான். அவன் இராசராசனோடு மாறுபட்டுப் பாண்டியனுக்கும் சேரனுக்கும் உதவிய வன். எனவே, இராசராசன் அந்நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். இவன் படை வருவதறிந்து மகிந்தன் அஞ்சித் தென்கிழக்கு இலங்கையில் ஓடி (இப்போதைய கதிர்காமப் பகுதி) ஒளிந்துகொண்டான். மகன் இராசேந்திரனே படையைச் செலுத்திச் சென்றான். அவன் படையால் அனுராதபுரம் நிலைகுலைக்கப் பெற்றது. 'பொலனருவா'வைக் கைப் பற்றி அதைச் சோழர் தலைநகராக்கினான் இராசேந்திரன். ஈழநாடு 'மும்முடிச் சோழமண்டலம்' என்று சிறந்த வகையில் இராசராசன் பட்டப்பெயரால் வழங்கப் பெற்றது. தமிழ்நாட்டு முறையில் அங்கேயும் பல கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றிற்கெனப் பல தானங்களும் வழங்கப் பெற்றன. இவ்வாறு தமிழ்நாடு முழுமையும் தெற்கேயுள்ள ஈழநாட்டையும் தன் கீழ்ப்படுத்தி எதிரிகளே இல்லை என்னுமாறு சிறக்க வாழ்ந்தான் இராசராசன். பொலனருவா இன்றும், அன்றையசோழர் ஆக்கப்பணிகள் சிலவற்றைத் தாங்கி, தான் சோழர் தலைநகராய் இருந்ததை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

வடநாட்டுப் போர்கள்:

தென்னாட்டைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திய இராசராசன் வடக்கு நோக்கித் திரும்பினான். மேலைச் சளுக்கிய மன்னனாகிய சத்தியாசிரயனை வென்றான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன. இவ்வெற்றியைப் புகழாவிடினும், இவன் சளுக்கியநாட்டைச்சூறையாடிய செய்தியைத் தார்வார் மாவட்டம் கொறட்டூர்க் கல்வெட்டு (1007) ஒன்று குறிக்கிறது. இவன் அட்சி எல்லை வட மேற்கே துங்கபத்திரை ஆறுவரை பரவியிருந்தது எனலாம்.

அடுத்து வடக்கே கோதாவரி கிருஷ்ணா ஆறுகளுக்கு இடையிலுள்ள வேங்கை நாட்டின் மேல் இராசராசன் போர் தொடுத்தான். அங்கு ஆண்ட கீழைச் சாளுக்கிய மன்னனாகிய சத்திவர்மன் சோழனிடம் அடைக்கலம் புகுந்தான். சத்திவர்மன் மகனாகிய விமலாதித்தனே பின் இராசராசன் மகளாகிய குந்தவையை மணம் புரிந்து கொண்டான். எனவே, கீழைச் சாளுக்கியர் சோழருடன் நட்பினராகவே இருந்து வந்தனர்.

பின்னர் இராசராசனானவன் நெல்லூர் மாவட்டத்தின் வடபகுதிகளாகிய சீட்புலிநாடு, பாகிநாடு முதலியவற்றின் மேல் படையெடுத்து வெற்றிகண்டான். அவற்றுடன் மகாநதிக்கரையிலுள்ளகலிங்க நாட்டிற்கும் (தற்போதைய ஒரிசா) அவன் படையெடுத்து வெற்றி கண்டான். அங்கும் இராசராசன் கல்வெட்டுக்கள் பற்பல உள்ளனவாம்.

கடல்கடந்தும் போர்:

இறுதியில் மூந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தை இவன் வெற்றி கொண்டான் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இது அரபிக்கடலிலுள்ள லட்சத்தீவுகள், மாலடாத் தீவுகள் என்பர் ஆய்வாளர். சேர நாட்டுக்குத் தென்மேற்கே உள்ள அத் தீவுகளில் வாழ்வோரால் சேரநாட்டுக் கடல் எல்லையில் அடிக்கடித் தொல்லைகள் நேர்ந்திருக்கக் கூடும். ஒரு வேளை சேர பாண்டிய நாடுகளில் தோற்ற பகைவர் சிலர் அங்குச் சென்று மறைந்திருந்து பின்னர்த் தொல்லை தந்துமிருக்கலாம். எனவே, அவர்களை அடக்க அத்தீவுகளையும் கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் அந்தத் தீவுகளின் மேல் இறுதியாகப் படையெடுத்துச் சென்று அவற்றையும் தன்அடிக்கீழ்க் கொணர்ந்தான். இவ்வாறு காந்தளூர்ச் சாலையில் தொடங்கிய இராசராசனின்போர், அக்காந்தளூர்ச் சாலையை அடுத்த பழந்தீவு பன்னீராயிரத்தில் முடிவுற்றது. மீண்டும் அவன் மகனாகிய இராசேந்திரன் சேனைத் தலைவனாய் நின்று வெற்றி வீரனாகவே திரும்பி வந்தான்.

போர்க்கிடையில் அமைதி :

இவ்வாறு ஆட்சித் தொடக்கநாள் முதல் போரே புரிந்து நின்ற இராசராசன் நாட்டுக்கு என்ன நன்மை செய்தான் என நினைக்கக் கூடும். போரே வாழ்நாளில் சிறந்திருந்தால் நாட்டில் அமைதி எங்கே நிலைக்கும் எனவும் எண்ணலாம். ஆன்றாலும், இராசராசன் காலத்தில் தமிழ்நாடு நல்ல அமைதியிலே பல நலன்கள் பெற்றுச் சிறந்து விளங்கிற்று. மேலே கண்டபடி வலியவந்த போர்களிலும் பிறவற்றிலும் வெற்றிகண்ட இராசராசன், நாட்டை அமைதி முறையில் ஆளவும் வழி வகுத்தான். தன் மகன் இராசேந்திரனுக்கு 1012-ல் இளவரசுப்பட்டம் கட்டினான். அவனது ஆட்சி ஆண்டு, 29-க்குப் பிறகு கல்வெட்டுக்கள் இல்லை. இளவரசுப்

பட்டம் கட்டி இரண்டாண்டுகள் கழித்து 1014-ல் அவன் மறைந்தான் போலும்; அவன் பரம்பரையினர் செய்தமைபோன்று அவனும் துலாபாரம் ஏறினான். அவன் மனைவியாகிய உலகமாதேவி இரணிய கருப்பம் புகுந்தாள், அவனது ஆட்சிஇறுதியில் நாட்டுக்கு அவன் செய்த நலங்கள் பலப்பல.

தஞ்சைப் பெரிய கோயில் :

இன்றளவும் தன் பெருமை குன்றாது இராசராசன் பெயரை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன் இராசராசனே. அக்கோயிலைக் காண்பார் அவனை வியவாதிரார். பல்லவர் ஆட்சிக்குக் காஞ்சிபுரம் கயிலாசநாதா கோயில் எவ்வாறு மைல்கல்லாய் அமைந்ததோ, அவ்வாறே இந்தப் பிற்காலச் சோழர் ஆட்சிக்கு இத்தஞ்சைப் பெரிய கோயில் மைல்கல்லாய் அமைந்தது. இக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உள்ளது. விமானம் 216 அடி உயரம் உள்ளது. இராசராசன்ஆட்சி ஆண்டு 19-ல் தொடங்கி 24-ல் முடிக்கப் பெற்ற கோயில் இது. கருங்கல்லே காண இயலாத அந்தக் காவிரிக்கரையில் எங்கிருந்தோ கற்களைக் கொண்டு வந்து இத்தனைப் பெரிய கோயிலை நான்கே ஆண்டுகளில் கட்டி அமைத்த இராசராசனை வியவாதிருக்க முடியுமோ? கி.பி. 1010-ல் தன் ஆட்சி ஆண்டு 25-ல் வழா எடுத்துக் கோயிலைச் சிறப்பித்தான் இராசராசன். இதன் வாயில்களுக்கு அவன் பெயர்களே இடப்பெற்றுள்ளன. கேரளாந்தகன் வாயில், இராசராசன் வாயில் என்பன அப்பெயர்கள். இக்கோயிலுக்குக் கருவூர்த்தேவர் திருவிசைப்பாப் பதிகமும் உண்டு. இக்கோயிலும் தேவாரத்தில் வரும் தஞ்சைத் தளிக்குளமும் ஒன்று என்பர், திருபண்டாரத்தார் அவர்கள். எனினும், சிலர்அது வேறு என்றும் திருவாரூர்ப் பக்கத்திலிருந்த ஒரு சிற்றூர்க் கோயிலே அது என்றும் கூறுவர். தேவார காலத்தில் தஞ்சாவூர் இன்மையில் அவர் கூற்று மெய்யெனவே கொள்ளத் தகும். ஆய்வாளர் இதுபற்றி மேலும் ஆய்ந்து முடிவு காண வேண்டும். இவ்வாறுகோயில் அமைத்து அழியாப் புகழ்பெற்ற இராசராசன், சிவபாதசேகரன் எனப் புகழப் பெற்றான். 'சிவனுடைய பாதங்களைத் தலையில் தாங்கியவன்' என்பது இதன் பொருள்.

இவன் சிறந்த சைவனேயாயினும் பிறசமயங்களை வெறுத்தானல்லன். இவன் காலத்தில் கடாரத்தரசன் சூளாமணிவர்மன் நாகபட்டினத்தில் சைவர்களுக்காகக் கட்டிய இக்கோயிலை, இராசராசப்பள்ளி என்றே வழங்கியமை இவனுடைய பரந்த நோக்கை நமக்குக் காட்டுமன்றோ? இவன் திருமாலுக்குச் 'சயங்கொண்ட சோழ விண்ணகரம்' எனப் பெங்களூர் மாவட்ட மணலூரில் ஒரு கோயிலும், தலைக்காட்டுக்கு அருகில் மற்றொரு கோயிலும் அமைத்தான் என்றும் கூறுவர். எனவே இவன் சமயக் காழ்ப்பற்ற சிறந்த மன்னனாய் விளங்கினான் என்பது பெறப்படும்.

நில அளவை:

இவன் காலத்தில் தமிழ்நாடு பல நன்மைகளைப் பெற்றது என்கிறோம். அவற்றுள் ஒன்று நில அளவை. சோழ இராச்சியத்தில் உள்ள நிலங்கள் அனைத்தும் இவன் காலத்தில் (கி.பி. 1000-ல்) அளக்கப்பெற்றன. அதனால், இவன் உலகளந்தான் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். அந்த அளவு கோல் 15 சாண் நீளமிருந்ததாம். 'மாராயன்' என்றபெயர் அதற்கு உண்டு என்பர். இவ்வாறு நிலத்தினை அளந்து பிரித்துப் பல்வேறு வகையில் நிலத்தின் தரம் கண்டதோடு, நீர்ப்பாசன வசதிகளும் செய்தமைத்து நல்ல விளைவுகளைப் பெருக்கினான், நம் இராசராசன்.

நாட்டுப் பிரிவுகள்:

நாடு, ஆட்சி முறையில் எளிமைக்காகப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் தக்கவா தலைமையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டது. நாட்டிலுள்ள ஊர்கள் பெரும்பாலும் சுதந்திரம் பெற்ற வகையில் தம் தம் தேவைகளை நிறைவு செய்து கொண்டன. ஊர்ச்சபைகளே ஊர்களின் நிர்வாகத்துக்கும் பொறுப்பாய் இருந்தன. இராசராசனுக்கு உதவியாகப் பல சிற்றரசர்களும் பல அரசியல் அதிகாரிகளும் இருந்தனர். பல குறுநில மன்னர் திறை செலுத்தினர். பழுவேட்டரையன் (திருச்சி), கொல்லிமழவன், சங்கரதேவன் (திருவல்லம்) வேளாண் சுந்தர சோழன் (கொடும்பாளூர்), நன்னமரையன் (கடப்பை) இலாடப்பேரரையன், வாணகோவரையன் முதலியோர் அவருள் முக்கியமானவர். அவர்களைப் போன்றே பல நல்ல அரசியல் அதிகாரிகள் இராசராசனுக்கு அரச காரியங்கள் செவ்வையாக நடைபெற உதவினர். இவன் வரலாற்றைக் கூறும் 'இராசராச விஜயம்' என்னும் நூல் இருந்ததாகக் கல்வெட்டால் அறிகிறோம். இன்னும் இவன் குடும்பத்தாரும் இவன் காலத்தில் செய்த அறங்கள் பலப்பல. தலைசிறந்த தமிழ்ப் பேரரசர்களுள் ஒருவனாகிய இராசராசசோழன் ஆண்ட காலம், தமிழகத்தின் பொற்காலம் எனலாம்.

***

வைணவம்

திரு க. பத்மநாபன்

பெருவளநல்லூர்

விஷ்ணுவைப்பரம்பொருளாகவும்அவனை அடைவதற்கு அவன் கழலிணையே உபாயமாக வும் அறுதியிட்டுக் கூறும் சமயம் வைணவம்.

''நாரணன் முழு ஏழ்
உலகுக்கும் நாதன்'' என்றும், அவன்

''நினைந்த எல்லாப்
பொருள்கட்கும் வித்து''

''ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே
நிலா நிற்பக்
கண்டசதிர் கண்டு அடைந்தேன்
உன் திருவடியே''

என்று ஆழ்வார்கள் அனுபவித்துப் போந்த மதம் வைணவம்.

உபயவேதாந்தம்

இவர்களுக்கு மூலப்பிரமாணம் வேதம். வைணவர்களுக்கு அநாதியான வடமொழி வேதம் பொது-ஆழ்வார்களால் அருளப்பட்ட தமிழ் ''மறை''-சிறப்பு. வைணவர்களுக்கே ஏற்பட்ட அசாதாரணமான அறிவுப் பொக்கிஷம், அன்புக் களஞ்சியம் தமிழ்மறை (பிரபந்தம்) ஆகும். இருமொழி மறைகளும் ஒரே பொருளைத்தான் காட்டுகின்றன என்ற கொள்கையுடையோராகையால் வைணவர் களுக்கு உபயவேதாந்திகள் என்றும் பெயருண்டு.

குருபரம்பரை

(எம்பெருமானார் தரிசனம்) இம்முறையை முதன் முதல் தந்தருளினவர் நாதமுனிகள். அவர் நிறுவின இந்த அழகிய உபய வேதாந்த சித்தாந்தத்தை நன்கு போஷித்து வளர்த்த பெருமை, அவர் திருப்பேரனாகிய ஆளவந்தா ருடையது. அதை நன்கு காப்பாற்றி உலகத்தில் நிலைநாட்டிய பெருமை ஆசார்ய சிரேஷ்டரா கிய நம் உடையவரையே சாரும்.

அவர் ஸ்ரீபாஷ்யாதி நூல்களாலே உலகி லுள்ள அறியாமையாகிய இருளை அறவே அகற்றி இத்தீதில் நன்னெறியை நிலை நாட்டி னார். மணவாளமாமுனிகளும் இத்தரிசனத்தை (எம்பெருமானார் வளர்த்த செயலை) உலகம் அறிகைக்காக, ''எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்'' என்று அனுபவிக்கிறார்.

நம் தரிசனம் இவ்வளவு பெருமை உடை யது. மேலும் இதற்குப் பிரதமப் பிரவர்த்தகர் (முதல் குருநிலை) பெருமாளே-பீதகவாடைப் பிரானாரே, பிரமகுருவும் பிரதம குருவும். (முதல் ஆசார்யஸ்தானம்) திருமாலுடையதே. எம்பெருமான் முதல் எம்பெருமானார் (இரா மாநுசர்) வரையுள்ள ஆசார்யர்கள், அனை வருக்கும் பொதுவான ஆசார்யர்கள்.

மேற்கூறப்பெற்ற சமயக் கருத்துக்கள் யாவும், பண்டுதொட்டே வழங்கி வருபவையே யாயினும், ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆங் காங்கு ஒருசேரக் காணப் பெறுவன. இந்த வைணவ சமயக் கருத்துக்கள் நாதமுனி, ஆள வந்தார், இராமாநுசர் ஆகிய ஆசார்யர்கள் காலத்தில் ஒழுங்குபடுத்தப் பெற்று ''விசிட் டாத்வைதம்'' என்ற சித்தாந்த நிலையினை அடைந்தன. உபநிடதங்களினாலும் பிரம்ம சூத்திரங்களினாலும் தெளிவுபெற முடியாத கருத்துக்கள் யாவும் ஆழ்வார்களின் பாடல்களி னால் இராமாநுசர் தெளிவு பெற்றதாகக் கூறப்பெறுகின்றது.

கொள்கைகள்

மேற்கண்டவாறு மறைநிலங்களிலிருந்து தெளிந்த வைணவத்தில், தத்துவங்கள் மூன்று.

அவை சித்து, அசித்து, ஈசுவரன் என்பன. சித்து என்பது உயிர்கள் அல்லது சீவான்மாக்களின் தொகுதியாகும். அசித்து என்பது மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்பு. உலகிலுள்ள ஏனைய பொருள்கள், இவற்றிற்குக் காரண மான பிரகிருதியாகும். ஈசுவரன் -இறைவன். இவை மூன்றும் தத்துவத்திரயம் என்ற பெய ரால் வழங்கி வருகின்றன. இந்தப் பெயரில் (தத்துவத்திரயம்) பிள்ளை உலக ஆசிரியரால் செய்யப்பட்ட நூல் ஒன்று உண்டு. அதில் இந்த மூன்று பொருள்களும் விரிவாக விளக்கப்பெறு கின்றன.

இதம்

இதம் என்பது வீடு பேற்றிற்குச் சாதன மாக அனுட்டிக்கப்பெறும் உபாயம் (வழி). இது பக்திநெறியும், பிரபத்திநெறியுமாகும். பக்தி நெறியில் பல அங்கங்கள் உள்ளன. இவற்றைப் பெறும்வரை அனுட்டித்துக் கொண்டே இருக்க வேண்டும். அங்கங்களுடன் அனுட்டிக்கும்முறை யும் மிகக் கடினமானது. பக்திநெறியை அனுட் டிக்க இயலாதவர்கள் பிரபத்தி நெறியை அனுட்டிக்கலாம். ஆழ்வார்கள் தம் பாசுரங் களில் ஆங்காங்குக் குறிப்பிட்டிருந்தாலும் அவர் கள் வற்புறுத்துவது பிரபக்தி நெறியையே யாகும். பாகவத மரபுப்படியும் இந்நெறியே ஆன்மா சம்சாரத்தினின்றும் விடுதலை பெறுவ தற்குரிய செந்நெறியாகும்.

புருஷார்த்தம்

புருஷார்த்தம் என்பது புருஷன். அதாவது ஆன்மா அடைய வேண்டிய பொருள். அர்த்தம் என்பது பொருள். ஆன்மா அடைய வேண்டிய பொருள் பரமபதம் சேர்தலும், பரிபூரண பக வதனுபவம் பெறுதலும் ஆகும். பரமபதம் வைகுந்தம் என்று வழங்கப்பெறும். இங்கு வீடு பேறு எய்திய ஆன்மாக்கள் செய்ய விரும்புவது கைங்கர்யம் ஆகும். ஆழ்வார்கள் வற்புறுத்து வது இதுவேயாம். ''ஏன்றேன் அடிமை''-அடி மையை ஏற்றுக் கொண்டேன் என்று திரு மழிசையாழ்வார் கூறுவது காண்க. நம்மாழ் வாரும்,

''ஒழிவில் காலமெல்லாம்
 உடனாய் மன்னி
வழுவிலா அடிமை
 செய்யவேண்டும் நாம்''

என்று அருளிச் செய்திருப்பதைக் காணலாம். மேலே கூறிய தத்துவம் மூன்றும், தனித்தனி இயல்புடைய வேறுவேறு பொருள்கள்; என்றும் அழிவில்லாதவை; ஆயினும் எக்காலத்தும்இவை மூன்றும் சேர்ந்தே இருக்கின்றன. இதனை நம் மாழ்வார்,

''திடவிசும்பு எரிவளி
 நீர்நிலம் இவை-மிசைப்
படர்பொருள் முழுவதுமாய்
 அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக்
 கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள்
 இவையுண்ட சுரனே''

என்னும் பாசுரத்தில் விளக்குவர். இவற்றுள் இறைவன் சித்து (உயிர்), அசித்து(உடல்), இவை இரண்டினுள்ளும் அந்தர்யாமியாக உள் ளான். இதுவே இவற்றின் நுண்ணியநிலை (சூக்குமநிலை) மூலப்பகுதி, விரிவடைந்து மக் கள், விலங்கு முதலியவற்றின் வடிவங்களாகவும் மற்றுமுள்ள பொருள்களாகவும் பரிணமிக்கின் றது.

இங்ஙனம் உடலைப்பற்றி நிற்கும் உயிர் அவ்வுடலுக்கேற்ப இன்பதுன்ப உணர்ச்சிகளும் அறிவின் சுருக்கமும் பெருக்கமும் அடைதல் தெளிவாகும். ஆனால் உடல், உயிர் இரண்டி னுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை இவ்வேறு பாடுகள் சிறிதும் அடைவதில்லை. இக்கருத் தினை ஆழ்வார்,

''புலனொடு புலன் அலன்'' (திருவாய்மொழி)

எனச் சுருக்கமாக உரைத்துள்ளார். இதனையே பிறிதோரிடத்தில்,

''யாவையும் எவரும் தானாய்
 அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலன் ஐந்துக்கும்
 சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால்
 ஆதுமோர் பற்றிலாத
பாவனை அதனைக் கூடில்
 அவனையும் கூடலாமே''

(திருவாய்மொழி 3—4—10)

என விரிவாக வெளியிட்டுள்ளார்.

''யாவையும் எவரும் தானாய்''-உயிரில் பொருள்கள், உயிர்கள் ஆகிய எல்லாவற்றுள் ளும்தான் அந்தர்யாமியாக நின்று. ''அவரவர் சமயந்தோறும் தோய்விலன்''-அவ்வப் பொருள் களின் விகாரங்களைத் தான் அடையான். சம யம்-அவத்தை-விகாரம். பாசுரத்தில் ''அவரவர் சமயந்தோறும் ''என்று இருந்தாலும், அவை அவை சமயந்தோறும் என்பதையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். ''ஆவி''-உடம்பு. யாதும் என்பது ஆதும் எனத் திரிந்தது. ''அவனை''- இறைவனை.

உயர்திணை, அஃறிணையாகிய எல்லாப் பொருள்களுள்ளும் இறைவன் கலந்து நின்று அவற்றின் அவத்தைகள் தன்னைத் தொடாத படி இருக்கின்றான். உடலிலுள்ள உயிர் அவ் வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வு, நரை, திரை

முதலிய விகாரங்களை அடைவதில்லை என்பதை, நாம் உணர்வோமாயின், அவ்வுடல் உயிர் இரண்டின் விகாரங்களும் இறைவனை அடைவதில்லை என்பதையும் உணரலாம் என்பது; இதற்கு இராமாநுசர் அருளிய விளக்கமாகும். (ஈட்டின் தமிழாக்கம் 3-4-10 உரை காண்க). முன் குறித்த சித்து, அசித்து, ஈசுவரன் பற்றிய உண்மைகளை ஈண்டு விவரித்தல் நலம் பயக்கும்.

சித்து

ஆன்மா 'சித்து' என்று வழங்கப்பெறுகின்றது. அறிவுள்ள இந்த ஆன்மா ''சேதனம்'' எனவும் வழங்கப்பெறும். இந்தச் சீவான்மா, அன்னமயம், பிராண மயம், மனோமயங்களுக்கு அப்பாலாக இருக்கும். இது தேகம், இந்திரியங்கள், மனம், பிராணன், ஞானம் ஆகிய இவற்றிற்கு வேறுபட்டது. அறிகின்ற தலைவனும் அறியப்பெறும் பொருளும் தானாகவே இருப்பது. அணுவின் அளவினை உடைய இந்த ஆன்மா ஆனந்த வடிவத்தைக் கொண்டது. என்றும் நிலைபெற்றிருப்பது. இஃது இதயத்தில் குடிகொண்டிருப்பதாகச் சொல்லப்பெறும். இது கண் முதலிய இந்திரியங்களுக்குத் தோற்றாது. மனத்தாலும் இதனை எண்ணிப்பார்க்க முடியாது. நம்மாழ்வாரும்,

> ''என் ஊனில் உயிரில் உணர்வினில்
> நின்ற ஒன்றை உணர்ந்தேனே''
> (திருவாய்மொழி 8—8—4)

என்கிறார். என் உடலிலும் உயிரிலும் ஞானத்திலும் வியாபித்திருக்கின்ற ஆன்மாவைத் தனக்கு உடலாக உடையவனை என்பது இதன் பொருளாகும்.

அறிவு மயமாக இருக்கும் இந்த ஆன்மா அறிவுக்கும் இருப்பிடமானது. இந்த அறிவு தர்மபூதஞானம் என வழங்கப்பெறும். ஆன்மா ஞானத்திற்குத்தான் இருப்பிடமின்றி ஞான மாத்திரமானால் ''நான் அறிவு'' என்று தன்னை ஞானமாத்திரமாகச் சொல்ல வேண்டும். நான் இதை அறியாநின்றேன் என்று, தன்னை (ஞாதாவாக) அறிபவனாகச் சொல்லக் கூடாது. எனவே தர்மபூதஞானம் என்ற ஆன்மாவைப் பற்றிய விளக்கம் வைணவ சமயத்திற்கே அசாதாரணமான சிறப்பாகும். இந்தச் சித்து எனப்படும் ஆன்மாவின் தொகுதி பக்தர்-முக்தர் - நித்யர் என்னும் வேற்றுமையால் மூவகைப்பட்டிருக்கும்.

அசித்து

அசித்து என்பது அறிவில்லாத பொருள். இது விகாரத்திற்கு இடமானது. அதாவது முன்னைய நிலையை விட்டு வேறுவேறு நிலைகளை அடையும். வேறுபாட்டிற்கு இடமாய் இருக்கும். இந்த அசித்து இராஜஸ, தாமஸங்கள் கலவாத சுத்த சத்துவம் என்றும்; இராஜஸ தாமஸங்கள் கலந்த மிச்ரதத்துவம் என்றும், சத்துவம் முதலிய குணங்களற்ற சத்துவசூனியம் என்றும் மூவகைப்படும்.

முதலாவதான சுத்த சத்துவம் ஆதல் அழிதல் இல்லாதது. ஞானத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கக்கடவது. நித்திய விபூதியில் (பரமபதத்தில்) விமானம், கோபுரம், மண்டபம் உப்பரிகை முதலிய வடிவுடன் தோற்றக் கூடியது. ஒளிவடிவானது. நித்யர் முக்தர், ஈசுவரன் இவர்கள் ஞானத்தால் அறிய வேண்டாதபடி ஒளிவிட்டுத் திகழும்.

இரண்டாவதாகிய மிச்ரதத்துவம் சேதனருடைய ஞான ஆனந்தங்களுக்கு மறைவை உண்டாக்கும். விபரீத அறிவினையும் விளைவிக்கும். இஃது உற்பத்தி விநாசமில்லாதது. உலகப் படைப்பிற்கு விளையாட்டுக் கருவியாகஇருந்து, ஏற்றத் தாழ்வு உள்ள இடம், அது இல்லாத இடம் என்ற இடவேறுபாட்டாலும், அழிக்குங் காலம், படைப்புக்காலம் ஆகிய வேற்றுமையாலும் விகாரங்களை உண்டாக்கக் கடவது. இந்த மிச்ர தத்துவம், இருபத்திநான்கு வடிவங்களாக இருக்கும். இவற்றை ஆழ்வார்,

> ''பொங்கு ஐம்புலனும் பொறி ஐந்தும்
> கருமேந்திரியம் ஐம்பூதம்
> இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி
> மான் ஆங்காரம் மனங்களே''
> (திருவாய்மொழி 10—7—10)

என்று குறிப்பிடுவர்.

அஃதாவது சேதனரைப் பூரிக்கும்படிச் செய்யும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன் ஐந்தும்-மெய், வாய், கண், மூக்கு செவி ஆகிய பொறி ஐந்தும்-வாக்கு, கால், கை, வாய், உபத்தம் ஆகிய கருமேந்திரியம் ஐந்தும், மண், நீர், எரி, தீ, கால், ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும், இங்குள்ள இந்த ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப்பிரகிருதி ஒன்றும், மகத் (மான்) தத்துவம் ஒன்றும், மனம் ஒன்றும் ஆக இருபத்துநான்காம். அசித்தின் இந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் கலந்துதான் ஈசுவரன் தானாகவும், நான்முகன் மூலமாகவும் இந்த அகிலத்தைப் படைக்கிறான்.

ஈசுவரன்

இறைவனாகிய ஈசுவரன் சத்தியம், ஞானம் ஆனந்தம், அனந்தம் இவற்றிற்குச் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப்பெறாதவன்; எங்கும் நிறைந்தவன்; மூன்றுவித சேதன அசேதன பரிமாண ரூபமான வேறுபாட்டின்குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப்பட்ட பலன்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலிடமாக இருப்பவன், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன், ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம் தேஜஸ் முதலிய மங்கள குணக்கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவன். தவிர, வாத்ஸல்யம், சௌலப்பியம், சௌசீல்யம் முதலிய எண்ணற்ற குணங்களைக்கொண்டவன். உலகிற்குக் காரணபூதன்; சிறார் வீடுகட்டி அழிக்குமாப்போல இவையாவும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாம் கேவலம் விளையாட்டேயாகும். இக்கருத்தினைக் கம்பர்,

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே'

என்று விளக்குவார். ஆழ்வார் பாடல்களில் கம்பநாடர் தோய்ந்து நின்ற நிலையே இக்கூற்றுக்குக் காரணமாகலாம்.

இறைவனுடைய திவ்வியமங்கள உருவம் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்னும் ஐந்து வகையோடு கூடியிருக்கும். இந்த ஐந்து நிலைகளையும்,

விண்மீது இருப்பாய்!
மலைமேல் நிற்பாய்!
கடல் சேர்ப்பாய்!
மண்மீது உழல்வாய்!
இவற்றுள் எங்கும்
மறைந்து உறைவாய்!

(திருவாய்மொழி 6—9—5)

என்ற பாசுரத்தில் குறிப்பிடுவார் நம்மாழ்வார். இவ்வாழ்வாரும் பிறஆழ்வார்களும், இந்த ஐந்து நிலைகளையும் பல இடங்களில் தம் பிரபந்தங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு மூன்று தத்துவங்களும் (சித்து, அசித்து, ஈசுவரன்) ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் எக்காலத்தும் தத்தம்இயல்பைவிடாமல் ஒன்று சேர்ந்துள்ளன என்பது, வைணவ சமயக் கொள்கை ஆகும். இக்கொள்கையை விளக்க வைணவ சமயத் துறவிகள் மூன்று கோல்களை ஒன்றாகப் பிணைத்துக் கையில் ஏந்தியுள்ளனர். இதனை முக்கோல் (திரிதண்டம்) என்று கூறுவர். துறவிகள் இவ்வாறு முக்கோல் ஏந்தும் வழக்கம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிய வழக்கமாக உள்ளது. இவ்வாறு முக்கோல் ஏந்திய துறவிகளைப் ''பகவர்'' என்றும் ''முக்கோற் பகவர்'' என்றும், ''மிக்கோர்''-என்றும் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன.

மந்திரங்கள்

வைணவ சமயத்தில் மந்திரங்கள் மூன்று. அவையாவன: திருமந்திரம், துவையம், சரம சுலோகம் என்பன.

திருமந்திரத்தில் ஓம், நம, நாராயணாய என்ற மூன்று பதங்கள் அடங்கி யுள்ளன. இவற்றுள் ஓம் என்ற பதத்தின் பொருளையே நம நாராயணாய என்றும், மற்ற இருபதங்களும் விரிவுபடுத்துகின்றன. இவ்விருபதங்களின் பொருளையே 'துவையம்' விரிக்கின்றது. இத்துவையத்தின் பொருளையே 'சரம சுலோகம்' விரிவாக விளக்குகின்றது. இம்மூன்று மந்திரங்களும் சகலமானவேதங்களில் சாரமான பொருளைத் தெரிவிப்பதனாலும், இவற்றின் பொருளை உணராதார் காதில் விழாதவாறு இவற்றை மறைக்க வேண்டியிருத்தலினாலும், இவை இரகசியங்கள் (மறைமொழிகள்) எனப் பெயர் பெற்றன.

இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் 'பெரிய திருமந்திரம்' என்ற சிறப்பினை உடையது. இதற்கு முன்னோர் விரிவாகப் பொருள் எழுதியுள்ளார்.

நாராயணன் என்பது 'நாரம் அயனம்' என்னும் இரண்டு சொற்களால் ஆனதொடர், இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறப் பெற்றுள்ளது. (முமூட்சுப்படி-திருமந்திரம் சூத் 95, 96). நாரம்-அழிவில்லாத பொருள்களின் கூட்டம். அவை மூலப்பகுதியில் விகாரமுள்ள எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் மோட்சமாகிய பரமபதத்திலுள்ள எல்லாப் பொருள்களுமாம்.

அயனம்-இடம். நாராயணன் என்னும் இத்தொடர் அழிவில்லாத பொருள்களின் கூட்டத்திற்கு இடமாக உடையவன் என்றும், அழிவில்லாத பொருள்களை இடமாக உடையவன் என்றும் இருபொருள் கொள்ளுதற்குரியது. அழிவில்லாத பொருள்களின் கூட்டத்திற்கு இடமாக உள்ளவன் என்பது இறைவன் எல்லாப் பொருள்களையும், தனக்குள் அடக்கி, எங்கும் வியாபித்துள்ள நிலையை உணர்த்தும் (வியாபகத்வம்).

அழிவில்லாத பொருள்களை இடமாக உள்ளவன் என்பது, இறைவன் எல்லாப் பொருள்கட்கும் அந்தர்யாமியாக உள்ள நிலையை உணர்த்தும். இங்ஙனம் நம் முன்னோர் பொருள் கொண்டமைக்கு அடிப்படையாக உள்ளது ஆழ்வாரது பாசுரமேயாகும்.

''அறிகிலேன் தன்னுள்
அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும்
அவற்றுள் நிற்கும் பிரான்''

(திருவாய்மொழி 9—6—4)

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தில் ''அனைத்துலகும்நிற்க'' என்பது அறிவில்லாத பொருள்களின் கூட்டத்திற்கு இடமாக உள்ள வன் என்ற கருத்தினை உணர்த்தும். வியா பகத்வம் நெறியினால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்''- என்பது. அப்பொருள்கட் குள்ளே அந்தர்யாமியாக உள்ளவன் என்ற கருத்தினையும் குறிப்பிடுவதாகவும் கொள்ள லாம். நற்றிணைக் கடவுள் வாழ்த்துப் பாடல் இக்கருத்துக்களை அழகாக விளக்குகின்றது.

''மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே''

(நற்றிணை)

என்ற பாடலில் ''இயன்றவெல்லாம் பயின்றகத் தடக்கிய வேத முதல்வன் என்ப'' என்பதே ஈண்டு வேண்டப்படுவது.

உலகத்தில் தோன்றியுள்ள எல்லாப் பொருளுள்களினுள்ளும் அந்தர்யாமியாய்நின்று அவ்வெல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கியுள்ள (வியாபகமாகவுள்ள) வேதத்தால் உணர்த்தப் பெறும் முதற்பொருள் என்றுமெய் யுணர்ந்தோர் கூறுவர் என்றுநம் முன்னோர் கொண்ட கருத்தும், ஆழ்வார் கொண்ட கருத் தும் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிய கருத்தேயாகும். திருமங்கையாழ்வார் இத னையே,

''பவ்வநீர் உடையாடையாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியா பவனம் மெய்யா
செவ்விய மாதிரம் எட்டும் தோளாஅண்டம்
திருமுடியா நின்றான்''

(பெரியதிருமொழி 6—6—3)

என்று அழகாக விளக்குவதைக் காண்க. எட் டெழுத்து மந்திரத்தின் பெருமையை ஆழ்வார் கள் தம் பாசுரங்களில் ஆங்காங்கு விளக்கியுள்ள னர். இவற்றுள் திருமங்கையாழ்வாரின்

''குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும்சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

(1—1—9)

என்ற இப்பாசுரம் நாராயண மந்திரம் தரும் பலன்களைப் பகர்ந்து போற்றுகின்றது. நாராயணன் நீங்கலாக ஏனைய பகுதிகட்குக் கூறப்பெற்ற பொருள்களும் ஆழ்வார்களின் பாசுரங்களின் இலைமறை காய்கள் போல ஆங்காங்கே மிளிர்வனவாம்.

வீடுபேறு

வீடுபேறு பற்றிச் சமய நூல்கள் வேறு வேறு வகையாகக் கூறும். வீடு என்பது ஒரு தனி உலகம் என்று வைணவ சமயம் கூறுகின் றது. இதுவும் தமிழ்நாட்டின்பழங்கொள்கையே யாகும். திருக்குறளில்,

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்''

என்ற குறட்பாவில்; வீட்டை (மோட்சத்தை) நிலம் என்றார். அதனால் வீடு (மோட்சம்) ஓருலகம் என்பது திருவள்ளுவர் கருத்து என் பது தெளிவாகின்றது. இக்கருத்தை அவர்,

''உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும்காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து''

''யான் எனதென்னும் செருக்கறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''

''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து''

என்ற குறட்பாக்களாலும் வெளியிட்டுள்ளார். வரனென்னும் வைப்பு-எல்லா உலகத்தினும் மேம்பட்ட வீட்டுலகம். வானோர்க்கு உயர்ந்த உலகம்-தேவர்களாலும் அடையமுடியாத வீட் டுலகம். வானம்-வீட்டுலகம். தத்துவ ஞானம் பெற்றவர் அடையுமிடமாகக் கூறப்பட்டமை யால் இங்கு வானம் என்றது வீட்டுலகம். தத் துவஞானம் பெற்றவர்கட்கு இவ்வுலகத்தை விட வீட்டுலகம் அண்மையிலிருப்பதாகத் தோன்றும்.

''பொன்னுலகு ஆளீரோ—
புவனி முழுது ஆளீரோ''

(திருவாய்மொழி 6—8—1)

என்பதனால் தத்துவஞானிகட்கு இவ்வுலகத் திலும் வீடு அண்மையாகத் தோன்றும் என்ற குறிப்பை ஆழ்வார் வெளியிட்டுள்ளார் .வீடு- மோட்சம், ஒரு தனி உலகம் என்ற வைணவ சமயக் கொள்கையை ஆழ்வார் ''வைகுந்தம்'' ''இலங்குவான்'' ''பொன்னுலகு'' என்றெல் லாம் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

—(தொடரும்)



தஞ்சாவூரில் நடைபெற்ற இராஜராஜ சோழனின் 1000-வது ஆண்டு முடிசூட்டு விழாவில், இராஜராஜ சோழனின் சிலைக்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், மாலை அணிவித்தல் (16.9.84)

தஞ்சாவூரில நடைபெற்ற இராஜராஜ சோழனின் 1000-வது ஆண்டுமுடிசூட்டு விழாவினையொட்டி, காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் அளித்த பொற்கிரீடத்தை, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச் சந்திரன் அவர்கள் தலைமையில், இராஜராஜ சோழன் சிலைக்கு அணிவித்தல் (16.9.84).

தஞ்சாவூரில் நடைபெற்ற இராஜராஜ சோழனின் 1000-வது ஆண்டுமுடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம் ஜி. இராமச் சந்திரன் அவர்கள், தஞ்சாவூர்த் தட்டினைப் பரிசாக அளித்தல் (16.9.84).

வெளியிடுபவர்: ஆணையர், தமிழ்நாடு அரசு இர் [illegible] றநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர்: ந. ரா. மு[illegible] ம்.ஏ.,எம்.[illegible],எ[illegible].